# අල් අහ්ලාක් වස්සුලූක්

(සමාජ විද්‍යාව හා ආචාර ධර්ම)

**ඉස්ලාම් ආගමික (අහදිය්යා අල්කුර්ආන් පාසල්)**
**අවසන් සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அல் அக்லாக் வஸ்ஸுலூக்

**(இஸ்லாமிய சமூகவியலும் ஒழுக்கவியலும்)**

**இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்**
**பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# Al - Akhlaq Wassulooq

**(Islamic Ethics Sociology)**

**Text Book for**
**Islamic Deeniyyath (Dharmacharya) Certificate Examination**

# الأخلاق والسلوك

**الكتاب المقرر لشهادة الإمتحانات**

**الدينية (للمعلمين)**


إصدار: إدارة الشؤون الإسلامية
كولومبو-سريلانكا

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM14798

CM014798-2,500 (2012/08)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத்
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள் :** கலாநிதி, மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)
முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

அஷ்ஷெய்க் எப். எம். ஏ. அன்ஸார் மௌலானா (நளீமி) M.A.
விரிவுரையாளர்
தேசிய கல்வியியல் கல்லூரி
அட்டாளைச்சேனை

அஷ்ஷெய்க் யு. கே. அப்துல் றஹீம் (நளீமி) M. A.
ஆசிரியர், அல்-ஹம்றா மஹா வித்தியாலயம்
ஒலுவில்

**செம்மையாக்கள் குழு** : அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் M. A.
முன்னாள் செயலாளர்
முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு

| | | |
|---|---|---|
| **செம்மையாக்கள் குழு (தொடர்ச்சி)** | : | அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M. A.)<br>முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| | | அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B.A. (Hon's)<br>வளவாளர்<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம |
| | | அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் M.A.<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| | | அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி B.A. (Hon's) PGDE<br>முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மஹரகம |
| **இணைப்பாக்கம்** | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி) (B.A.) PGDE<br>மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக்<br>குழுத்தலைவர் |
| | | மௌலவி அல்ஹாஜ் எம் எச் நூறுல் அமீன் (நத்வி) (B.A.) (Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | **அல் அக்லாக் வஸ்ஸுலூக்**<br>(இஸ்லாமிய சமூகவியலும், ஒழுக்கவியலும்)<br><br>இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய)<br>சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| **பதிப்பாசிரியர்** | : | அல்ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன் (நத்வி)<br>B.A. (Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| **வெளியீடு** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| **பதிப்பு** | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| **முதற்பதிப்பு** | : | 2014 |
| **பதிப்புரிமை** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக் கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் செயற்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய, கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் கான பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு, பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன் சமய, சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்து தான் என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய, கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய, சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பதுபோல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய, கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற் கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். சமயக்கல்வி பயனுள்ள அனுபவங்களை வழங்குவதற்கான சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம், தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹ்ம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

## முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீக வீழ்ச்சியும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலகாயதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.


**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம் தயாரித்தமை இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடாத்தியமை, அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு வழங்கியமையும், வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கியமையும் என்பன அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த

கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப் பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிருஷ்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமீன் !

**அஷ்ஷெய்க்** Y. L. M. **நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப்

பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது. 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லாதிருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணப்பித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக்குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

“(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை.”(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு.ஃ.மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளிவருவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின், முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி), அட்டாளைச்சேனை தேசிய கல்வியில் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எப். எம். ஏ. அன்ஸார் மௌலானா (நளீமி), ஓழுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய ஆசிரியர், அஷ்ஷெய்க் யு. கே. அப்துல்

றஹீம் (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர் அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் செயற்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் (நளீமி), அஷ்ஷெய்க் M. R. M. அர்க்கம் (நளீமி) அவர்களுக்கும், மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கனிணி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிணிப் பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரையும் முயற்சியை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச். நூறுல் அமீன்**,
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உள்ளடக்கம்

பக்கம்

| | | |
|---|---|---|
| 01. | சமூகவியல் அறிமுகம் | 01 |
| 02. | பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் | 03 |
| 03. | சமூகத்தில் தனிமனிதனின் பங்கு | 09 |
| 04. | குடும்பம்-வரைவிலக்கணம் | 11 |
| 05. | இஸ்லாமிய சமூக அமைப்பின் பண்புகள் | 15 |
| 06. | தனிமனிதனும் சமூகமும் (உரிமைகள்) | 21 |
| 07. | பல்லின சமூகத்துடனான முஸ்லிம்களின் உறவு | 23 |
| 08. | சமூக ஒழுக்கங்கள் | 26 |
| 09. | சமூகத் தொடர்பாடல் | 28 |
| 10. | மனித உறவு தொடர்பான சமூக ஒழுக்கங்கள் | 59 |

# அல் அக்லாக் வஸ்ஸுலூக்

## (சமூகவியலும் ஒழுக்கவியலும்)

## நூல் அறிமுகம்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டின் பயனாக அஹதிய்யா போதனாசிரியர்களுக்கான தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டம், முதல் வெளியீடாக 2003ம் ஆண்டிலும் இரண்டாம் வெளியீடாக 2008 ஆம் ஆண்டிலும் வெளியீடு செய்யப்பட்டு தற்போது அவை இலங்கை முழுவதிலுமுள்ள அஹதிய்யா குர்ஆன் பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதை இக்கட்டத்தில் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றோம்.

பாடத்திட்டத்தின் நோக்கு, இலக்கு, வெற்றி என்பன ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியிலேயே தங்கியுள்ளன. அவ்வகையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தற்போது எடுத்துள்ள முழு முயற்சியின் காரணமாக கல்வியியலாளர்கள், உலமாக்களைக் கொண்ட நிபுணத்துவக் குழு தயாரித்துள்ள இந்த வழிகாட்டி, அஹதிய்யா பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியகுழாத்தின் நீண்ட நாள் கனவை தற்போது நனவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழிகாட்டி நூலை பயன்படுத்தும் சகல ஆசிரியர்களும் போதனாசிரியர்களும் பாடத்திட்ட உள்ளடக்கத்தை உள்வாங்கிய பின்னணியிலேயே இவ்வழிகாட்டி நூலை ஒப்பிட்டு வாசிப்பதால் வினைத்திறனுள்ள கற்பித்தலுக்கும் மாணவர்களின் எதிர்பார்ப்புக்கும் சிறப்பாக பங்களிப்பு செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

இங்கு எழுதப்பட்டுள்ளவை மட்டும்தான் முடிவானவை எனக் கருதாமல், அவற்றை அடிப்படையாக வைத்து தேடலையும் ஆய்வையும் மேற்கொள்ளும் உரிமை ஆசிரியர்களுக்கும் வாசகர்களுக்கும் உண்டு என்பதை பாடநூல் ஆக்கக் குழுவின் சார்பில் முன்வைக்கின்றோம்.

நூலாக்கக் குழுவின் சார்பாக

**கலாநிதி, மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன்**
முன்னாள் பீடாதிபதி/ சிரேஷ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

# சமூகவியல்

## சமூகவியல் அறிமுகம்

### சமூகவியலில் மனிதன்

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பது ஒரு பொதுவான கருதுகோளாகும். மனிதன் இயற்கையாகவே தனிமையாகப் பிறந்தபோதும். சமூக அமைப்புக்குள் ஒன்றிவாழும் தன்மையுடைய வனாக காணப்படுகின்றான்.

இயற்கைச் சூழலாலும் அனுபவ உணர்வுகளாலும் சமூகமாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

ஆரம்பத்தில் தேனீக்கள் போன்று ஒருமித்து வாழ்ந்த மனித இனம், சில சமயங்களில் தாம் பேணிய கட்டுக்கோப்புகளையும்; வாழ்க்கைத் திட்டத்தையும் உடைத்தெறிந்து ஏனைய குழுக்களின் மீது அடர்ந்தேறி, அவர்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயன்றது. இதன் விளைவாக இரு சமூகங்களிலும் பாரிய அழிவுகளும் அநியாயங்களும் ஏற்பட்டதை உணர்ந்து திருந்தி வாழ முற்பட்டன. இதன் விளைவாக சமூக அமைப்பையும் கட்டுக்கோப்பையும் அவன் மதித்து வாழப்பழகிக் கொண்டான். மனித இனம் ஒரே சமூகத்திலிருந்தே தோன்றியது என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

> “மனிதர்களே நீங்கள் உங்கள் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின் அவ்விருவரிலிருந்தும் அநேக ஆண், பெண்களை வெளிப்படுத்தி பரவச்செய்தான்.” (4 : 1)

இவ்வாறு மனித இனத்தை சமூகமாக மாற்றிய இறைவன், பூரணவாழ்க்கைத் திட்டமான இஸ்லாத்தின் மூலம் சமூக அமைப்பை வலியுறுத்தி சமூக அமைப்புக்கு வேண்டிய திட்டங்களையும் வாழ்க்கை நெறிகளையும் வகுத்துக் கொடுத்துள்ளான்.

மனித இனத்தின் முதல்நிலை குடும்பமாகும். பல குடும்பங்கள் இணைந்து சமூகமாகவும்; அதன்பின் சமூதாயமாகவும்; நகரம், நாடு, உலகம் என்றும் விரிவடைகின்றது. இஸ்லாமிய சமுதாய அமைப்பில், உலக வளத்தையும் செல்வத்தையும் சகலருக்கும் சமமாகப்பங்கிட்டு கொடுக்க வேண்டுமென்ற பொது வுடமைக் கொள்கையோ, சண்டையையும் சச்சரவுகளையும் வளர்க்கும் வீண்

போதனையோ கிடையா. மாறாக ஒவ்வொரு முஸ்லிமும் மற்றவர்களுடைய வாழ்க்கை நிலையை உணர்ந்து, மதித்து நடக்கவேண்டுமென்று அது பணிக்கின்றது. ஏழையும் பணக்காரனும் அண்டைவீட்டு நண்பர்களாகவே வாழ்கின்றனர். “இஸ்லாமியர் அனைவரும் சகோதரர்கள்” என்ற ஒற்றுமை உணர்வு அங்கு பிறக்கின்றது. ஈமான் என்ற இறை நம்பிக்கைக்கு முன்னால் அவனை சூழ்ந்திருக்கும் சாதி, குலம், இனம், நிறம், பணம், செல்வம் போன்ற சகல நிலைகளும் தூக்கியெறியப்பட்டு ஒரே சமுதாய அமைப்புக்குள் அனைவரும் ஐக்கியமாகி விடுகின்றனர். இதையே நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"ஒரு விசுவாசி மற்றொரு விசுவாசிக்கு கட்டிடத்தை போன்றவன். அக்கட்டிடத்தின் ஒரு பகுதி மற்ற பகுதியை ஸ்திரப் படுத்துவது போன்று பரஸ்பரம் ஒருவர் மற்றவரை ஸ்திரப்படுத்துகின்றனர்.” இவ்வாறு கூறிய நபி (ஸல்) அவர்கள், ஜாஹிலிய்யாக் காலப்பிரிவால் வளர்த்து விடப்பட்டிருந்த சகல மனித முரண்பாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் சாதி, பிணக்குகளையும் 23 வருட கால வாழ்வில் உடைத்தெறிந்து ஒருவர் மற்றவரை மதிக்கவும், வேண்டிய போது பணம், சுகம், செல்வம் என்பவற்றைத் தியாகம் செய்து, தன் இஸ்லாமிய சகோதரனுக்கு கொடுக்கவும் துணிந்த பண்பட்ட மனித சமூகத்தை உருவாக்கினார்கள்.

நபி (ஸல்) அவர்கள், “ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான்”. என வலியுறுத்திக் கூறினார்கள். மனிதன் கூட்டு வாழ்வை சமூக அமைப்பில் கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் கூட்டுறவுடன் செயற்பட வேண்டும் என்பதை அல்குர்ஆனும் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளது :

> "விசுவாசிகளே! நல்அமல்களிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவமான காரியங்களிலும் விரோத நடவடிக்கைகளிலும் ஒருவருக்கொருவர் உதவிபுரியாதீர்கள்." இவ்வாறு சமூக வாழ்வை வலியுறுத்தி இஸ்லாம் பல்வேறு திட்டங்கள் மூலமாக சமூக ஒற்றுமை ஓங்க வழிசெய்துள்ளது.

## பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

பிரபஞ்சம் என்பது அண்டப் பெருவெளியை குறிக்கும். அதாவது மனிதனது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு பரந்து விரிந்து வியாபித்திருக்கின்ற அண்ட சராசரங்களையும், அதனுள் உள்ளடங்கியுள்ள பொருட்களையும் குறிப்பதற்காகவே பிரபஞ்சம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இப் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பது சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் காணப்பட்டன. பொதுவாக பிரபஞ்சம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது அவற்றை இருபிரிவுக்குள் உள்ளடக்கலாம்.

### பரிணாமவாத தத்துவம்

இது கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் கிரேக்கரிடையே செல்வாக்கு பெற்றிருந்தது. இவ்வகையில் இவர்களே இச்சிந்தனையின் முன்னோடிகளாவர். பரிணாமவாத சிந்தனை யாதெனில், பிரபஞ்சமும் அதிலுள்ள உயிரின உருவாக்கமும் படிப்படியாக வளர்தல் என்ற பரிணாம வளர்ச்சியின் அடிப்படையிலேயே தோன்றின என்பதாகும்.

நவீன காலப்பிரிவில் மேலைத்தேயத்தில் அறிவியலுக்கும் கிறிஸ்தவ மதத்திற்குமிடையிலே ஏற்பட்ட போராட்டத்திற்குப் பின்பு அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் சார்ள்ஸ் டார்வின் என்பவரால் இக்கொள்கை நவீன உலகில் பிரபல்யப்படுத்தப்பட்டது. பொதுவாக, எந்த சமயத்தையும் சாராத நாஸ்திகவாதிகள் இக்கொள்கையை ஏற்றுக்கொள்கின்றனர்.

### படைத்தல் தத்துவம்

இரண்டாவது கோட்பாடான படைத்தல் தத்துவமானது சமயம் சார்ந்த சிந்தனை யாளர்களாலும் ஆகமங்கள், வேதங்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளது. படைத்தல் தத்துவம் என்பது யாதெனில் இப்பிரபஞ்சத்திலே உள்ள ஒவ்வொன்றும் தனித்தனிக் கூறுகளாக இறைவனால் படைக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இஸ்லாமிய மார்க்கம் படைத்தல் தத்துவத்தையே உண்மைப்படுத்துகிறது.

இஸ்லாத்தின் கருத்துப்படி, பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்கள், மனிதன் உட்பட அனைத்துமே அல்லாஹ்வினால் திட்டமிட்டு படைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி, ஒரு நோக்கத்தின் அடிப்படையிலும் அவை சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

அவன் தான், வானங்களையும்; பூமியையும் ஒரே நாளில் படைத்தான். அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் படைத்துள்ளான். இதன் அடிப்படையில் பிரபஞ்சத்திற்கு ஓர் ஆரம்பம் உண்டு என்பதும் அது வீணுக்காக படைக்கப்படவில்லை என்பதும் இஸ்லாத்தின் பிரபஞ்சம் பற்றிய முக்கியமான கருத்துக்களாகும்.

> “எமது இரட்சகனே ! நீ எதனையும் வீணாகப் படைக்கவில்லை. நீயோ மிகத்தூய்மையானவன். எனவே எங்களை நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பாயாக” (3:193)

இப்பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்களும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். அல்லாஹ்வின் யதார்த்தத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. எனினும் அவனது ஆற்றலை, சக்தியை, அவனது உள்ளமையை வெளிப்படுத்துவதாக பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்களும் உள்ளன என்பதும் இஸ்லாத்தின் கருத்தாகும். பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்களும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் என்று அல்குர்ஆன் குறிப்பிடுவது இக்கருத்தை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

> "வானங்கள், பூமி படைக்கப்பட்டிருப்பதிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுள்ளோருக்கு அத்தாட்சிகள் உள்ளன. " (3:190)

பிரபஞ்சமும் அதன் இயக்கமும் அதிலுள்ள ஒவ்வொரு பொருட்களின் ஒவ்வொரு அசைவும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டிலே உள்ளன என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். அவனது சக்தியை மீறி யாராலும் பிரபஞ்சத்தையும் அதன் இயக்கத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவே முடியாது.

> “படைப்பினங்கள் (படைத்தலும்) அதன் ஆட்சியும் அவனுக்கே உரியதல்லவா” (7:54)

### பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்களும்

இப் பிரபஞ்சமும் அதிலுள்ள பொருட்களும் மனித வாழ்க்கைக்கு பயன்படக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளன என்பதும், அவன் இங்கு சிறப்பாக வாழ்வதற்கு ஏற்றவகையில் அவை அவனுக்கு வசப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன என்பதும் இஸ்லாத்தின் கருத்தாகும். இந்த வகையில் இப்பிரபஞ்சம் தொடர்பாக ஒரு மனிதனுக்கு முக்கிய மூன்று கடமைகள் உள்ளன. அவை கிலாபத், இபாதத், இமாரத் என்பவையாகும்.

**i. கிலாபத்**

அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில்; மனிதன் இவ்வுலகில் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு பாடுபடுவதை இப்பதம் குறிக்கும்.

**ii. இபாதத்**

அல்லாஹ்வின் அடியான் என்றவகையில், மனிதன் வணக்க வழிபாட்டுடன் அவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதை குறிக்கும்.

**iii. இமாரத்**

பூமியை வளப்படுத்தும் பணியை இது குறிக்கும். அதாவது அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப இப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள பொருட்களையும் பயன்படுத்துவதுடன் இங்கு மனித வாழ்க்கைக்கு பொருத்தமான ஒரு சூழல் அமைப்பதற்கு செயற்படுவதைக் காட்டுகின்றது.

எனவே, இப்பிரபஞ்சம் தொடர்பாக மேலுள்ள கடமைகளையும் மனிதன் நிறைவேற்ற வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இப்பிரபஞ்சம், அதிலுள்ள பொருட்கள் ஆகியவை தொடர்பாக ஒரு மனிதன் எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது பற்றியும் இஸ்லாத்தில் மிகச் சிறப்பானதொரு கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது இவ்வுலகிலுள்ள பொருட்களை அனுபவிப்பதற்கு ஒரு நடுநிலையான போக்கைக் கைக்கொள்ள வேண்டும் என்பது இஸ்லாத்தின் கருத்தியலாகும். எனவே அளவுக்கு மீறி அவற்றை அனுபவித்து இறைவனையும் அவனது வழிகாட்டலையும் மறந்து விடக்கூடாது. அதே நேரம் உலகப் பொருட்களை முற்றாக புறக்கணித்துவிடவும் கூடாது என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். இக்கருத்து நடுநிலையானதும் யதார்த்தமானதும் நடைமுறைக்கு உகந்ததுமாகும். இதற்கு மாறாக, மேலைத்தேயத்தின் உலகாயத கொள்கைகள், இறைவனின் வழிகாட்டலை மறுத்து உலகப் பொருட்களை அனுபவிப்பதில் அத்துமீறி செயற்பட தூண்டுகின்றது. இதற்கு மாறாக சில சமயங்களோ, உலகப் பொருட்களை முற்றாக புறக்கணிக்கும் போதே மனிதன் ஆன்மீக ரீதியாக வளர்ச்சி பெற முடியும் எனச் சொல்கின்றன. எனினும் இஸ்லாத்தின் கருத்தே பொருத்தமானதும், மேன்மையானதும், வாழ்வுக்கு வழிகாட்டுவதுமாகத் தெரிகிறது.

## மனித வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்

மனித வாழ்வுபற்றி பல்வேறு கருத்துக்களும் கண்ணோட்டங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் இஸ்லாம் அல்லாத மதங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான கருத்துக்களுடன் மனித வாழ்வை நோக்குவதை கண்டு கொள்ளலாம். உதாரணமாக, பௌத்த மதம், "மனிதன் இவ்வுலகில் முற்பிறவியின் கர்மவினைகளை அனுபவிப்பதற்காகவே பிறக்கிறான்" என்று கூறுகிறது.

கிறிஸ்தவ மதமானது, மனிதனை பாவப்பட்ட ஜென்மமாக கருதுகிறது. முதல் மனிதன் செய்த பாவம் ஏனைய எல்லா மனிதர்களின் வாழ்வையும் பின்தொடர்வதாக அது வாதிடுகின்றது.

இவ்வுலகில் நவீன காலத்தில் பிரசித்தி பெற்ற முப்பெரும் தத்துவங்கள் என அழைக்கப்படும் டார்வினிசம், மார்க்சிசம், பிராய்டிஸம் போன்ற கொள்கைகள் வித்தியாசமான கண்ணோட்டத்தில் மனித வாழ்வை நோக்கின.

டார்வினிசம், மனிதனை வெறுமனே ஒரு சடமாக, மிருகமாகவே கருதுகிறது. பரிணாம ரீதியாக வளர்ச்சியடைந்த மிருகத்தின் ஒரு கட்டமே மனிதன். அவன் குரங்கிலிருந்தே பரிணாமம் பெற்றான். எனவே அவன் படைக்கப்பட்டவன் அல்லன்; ஏனைய விலங்குகளிலிருந்து வித்தியாசப்பட்டவனும் அல்லன். இவ்வாறு டார்வினிசம் மனித வாழ்வை வித்தியாசமாக நோக்குகிறது.

இதன் அடிப்படையாக சிந்தித்த கால்மார்க்ஸ், மனிதனை வெறுமனே ஒரு பொருளாதார பிராணியாக மாத்திரமே கருதினார்.

மனிதனை வெறுமனே ஒரு மிருகமாக நோக்கிய இன்னொரு கொள்கை, பிராய்டிஸமாகும். மனிதன், பாலியல் ரீதியான தேவைகளை உடையவன் என்பதால் அவனது பிரச்சினைகள் அனைத்திற்கும் அதுவே காரணமாகிறது. எனவே மனிதனது ஆசைகள் அனைத்தும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி திறந்து விடப்பட வேண்டும் என்பது இக் கொள்கையின் சுருக்கமாகும்.

மேலுள்ள கொள்கைகள் மனிதனை வெறும் மிருகமாக மாற்றிவிட்டன. அவனை ஓர் இயந்திரமாகவும், நுகர்வுப் பொருளாகவும் காட்டிவிட்டன. இதனால் இக் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட மனிதர்கள் இவ்வுலக வாழ்வில் தோல்வி கண்டு, பெரும் சிக்கல்களிலும், பிரச்சினைகளிலும் மாட்டிக் கொண்டார்கள். இக்கொள்கைகளால் மேலைத்தேயத்தில் தனிமனித வாழ்வு பாதுகாப்பு இல்லாமல் மாறியுள்ளதுடன், குடும்ப அமைப்பும் சீர்குலைந்து போயுள்ளது. இதன் விளைவாக ஒழுக்க பண்பாடுகளின் வீழ்ச்சியும் பூதாகரமாகியுள்ளது என்பது, நாம் அனைவரும் ஏற்க வேண்டிய கசப்பான உண்மையாகும்.

ஆனால், இஸ்லாமிய மார்க்கமோ இந்த கொள்கைகள் கோட்பாடுகளிலிருந்து மிகவும் வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்தை மனித வாழ்வு பற்றி முன்வைக்கிறது.

அல்லாஹ் மனிதனை இவ்வுலகில் உயர்ந்த சிருஷ்டியாக படைத்து அவனை தனது பிரதிநிதியாக **(கலீபாவாக)** ஆக்கியுள்ளான் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

> "நபியே! உம்முடைய இறைவன் வானவர்களை நோக்கி, "நிச்சயமாக நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை உண்டாக்கப்போகிறேன்" என்று கூறியபோது "நாங்கள் உன்னுடைய புகழ்கூறி உன்னைத் துதிப்பவர்களா கவும், உன்பரிசுத்தத்தை போற்றுகின்றவர்களாகவும் இருக்கின்ற நிலையில், அதில் (பூமியில்) குழப்பம் செய்து இரத்தங்களை ஓடச் செய்பவர்களையா நீ அதில் உண்டாக்கப்போகிறாய்"? என்று அவர்கள் (வானவர்கள்) கூறினார்கள். (அப்பொழுது) "நிச்சயமாக நீங்கள் அறியாதவற்றை நான் அறிந்திருக்கின்றேன்" என்று அல்லாஹ் கூறினான். (2:30)

இந்த வசனத்தின்படி அல்லாஹ் மனிதனை இவ்வுலகில் அவனது பிரதிநிதியாக அனுப்பியுள்ளான் என்பது தெளிவாகின்றது. எனவே அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் இங்கு அவன் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப உலகை பரிபாலித்து வாழவேண்டியவனாக உள்ளான்.

மனிதன் இவ்வுலகில் எவ்வித நோக்கமோ, அர்த்தமோயின்றி பிறந்தவன் அல்லன். மாறாக, அவனை உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே அல்லாஹ் சிருஷ்டித்திருக்கிறான் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். எனவே, மனிதன் இவ்வுலக வாழ்வை அல்லாஹ் அவனது தூதருக்கு வழிகாட்டியவாறு அமைத்து, அதனை சிறப்பாக ஆக்கி, மறுமை வாழ்விலும் சிறந்த முறையில் வாழ வேண்டியவனாக மனிதன் இருக்கின்றான்.

படைத்தவனாகிய அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில், மனிதன் ஏனைய சிருஷ்டிகள் அனைத்தை விடவும் மகத்துவமும் கண்ணியமும் மிக்கவனாவான் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இந்த உண்மையைப் பின்வரும் குர்ஆனிய வசனங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

“நிச்சயமாக மனிதனை நாம் அழகான அமைப்பில் படைத்தோம்.” (95:4)

“ஆதமின் சந்ததியை நாம் கண்ணியப்படுத்தினோம். கடலிலும், தரையிலும் அவர்களை நாம் சுமந்து செல்கிறோம். இன்னும் நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு உணவளித்து நாம் படைத்தவற்றில் மிகுதமானதைவிட அவர்களைப் பெரிதும் மேன்மையாக்கி வைத்துள்ளோம்.” (17:70)

இவ்வாறு கண்ணியமான முறையில் அழகிய அமைப்பில் சிந்திக்கும் ஆற்றலும் பகுத்தறிவும் கொடுக்கப்பட்டவனாக படைக்கப்பட்ட மனிதன், இவ்வுலகில் கிலாபத், இபாதத், இமாரத் முதலிய பணிகளை நிறைவேற்ற வேண்டியவனாக உள்ளான். எனவே உலக வாழ்க்கையில் ஷைத்தானிய உணர்வுகளையும் தீங்குகளையும் விட்டும் நீங்கி, உலகில் இஸ்லாமிய வாழ்வு வாழவேண்டியவனாக மனிதன் இருக்கின்றான்.

இந்த வகையில், உலக வாழ்வில் அளவுக்கு மீறி தன் மனோ இச்சையை பின்பற்றி அதில் மூழ்கிவிடுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அதேபோன்று முற்றுமுழுதாக உலக வாழ்க்கையை புறக்கணித்து துறவறம் பூணுவதையும் இஸ்லாம் ஏற்கவில்லை. இவ்விரண்டு நிலைப்பாடுகளுக்குமிடையே அல்லாஹ் வினதும், அவனது தூதரினதும் வழிகாட்டலுக்கிணங்க தம் வாழ்வை அமைத்துக் கொண்டு இவ்வுலகிலும் மறுமையிலும் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

இன்னும் அவர்களில் சிலர், "எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியத்தையும், மறுமையில் நற்பாக்கியத்தையும் தந்தருள்வாயாக. இன்னும் நரக நெருப்பின் வேதனையைவிட்டும் எங்களைக் காத்தருள்வாயாக." என்று கூறுகின்றனர். (2:201)

மறுமை வாழ்வுடன் இவ்வுலக வாழ்வை ஒப்பிட்டு நோக்கும் போது இவ்வுலக வாழ்வானது அழியக் கூடியதும் பெறுமதியற்றதுமாகும் என்பது சிந்திக்கத்தக்க உண்மையாகும்.

"உலக வாழ்க்கையானது மதிமயக்கும் அற்ப இன்பமே அன்றி வேறில்லை. (3:185)

எனவே, அழியக்கூடிய இவ்வுலக வாழ்வை மறுமையின் விளைநிலமாக பயன்படுத்த வேண்டும் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

இவ்வுலகம் மறுமையின் விளைநிலமாகும். இந்தவகையில் உலகத்தை மறுமையின் விளைநிலமாக பயன்படுத்த வேண்டுமே தவிர அதனை முற்றாக புறக்கணித்து ஒதுக்கி விடக் கூடாது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனமும் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

"அவன் தான் உங்களை பூமியில் சிருஷ்டித்து அதனை பரிபாலிக்குமாறும் கேட்டுக் கொண்டான்" (11:61)

இவ்வாறு மனிதன் பற்றியும் இவ்வுலக வாழ்வு பற்றியும் இஸ்லாம் கொண்டுள்ள தெளிவான சிறப்பான கண்ணோட்டத்தை விளங்கி அதன் படி செயற்படுவதற்கு திடசங்கற்பம் பூணுவோம்.

**சமூகத்தில் தனிமனிதனின் பங்கு :**

இஸ்லாம் மனிதனுக்கு இரு வகையான பொறுப்புக்களைச் சுமத்துகிறது.

1. ஹுகூகுல்லாஹ் - தனி மனிதன் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள்.
2. ஹுகூகுல் இபாத் - சமூகத்தை நோக்கிய மனிதனின் கடமைகள்.

"ஹுகூகுல்லாஹ்" என்பது சமூகத்தில் தனிமனிதனின் பங்கு. அல்லாஹ் வுக்கும், அடியார்களுக்கும் இடையில் நிலவ வேண்டிய உறவு, நெருக்கம் என்பவற்றின் விளைவாக தோன்றும் மஹப்பத், இஹ்லாஸ், தக்வா போன்ற இஸ்லாமியப் பண்புகளில் வார்க்கப்பட்ட தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், உழ்கிய்யா, அகீகா போன்ற இபாதத்துக்கள் உரிய காலங்களிலும், சந்தர்ப்பங் களிலும் முகஸ்துதியோ, தற்புகழ்ச்சியோ இன்றி நிறைவேற்றப்படுவதைக் குறிக்கும். இதன் மூலம் தூய இஸ்லாமிய சூழல், வீட்டிலும், நாட்டிலும் உருவெடுத்து சமூகத்தில் தனிமனிதர்கள் இஸ்லாமிய ஆதர்ஷ புருஷர்களாக மாற்றப்படுவர்.

மனிதன் அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளே ஹுகூகுல்லாஹ் என அழைக்கப்படுகின்றது. இவை இறைவனின் உரிமையாகும். இது பற்றிய விரிவான விளக்கமொன்றை அறிஞர் மௌலானா மௌதூதி அவர்கள் முன்வைத்துள்ளார்கள். அதாவது:

“மனிதன் அல்லாஹ் ஒருவனையே இறைவனாக நம்ப வேண்டும். அவனுக்கு எவரையும் இணையாக்கக் கூடாது என்பதே இறைவனின் முதல் உரிமையாகும். **லாஇலாஹ இல்லால்லாஹு** எனும் கலிமாவின் மீது ஈமான் கொள்வதால் இந்தக்கடமை நிறைவேறிவிடுகின்றது.”

“இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை ஏற்று, ஈமான் கொள்வதன் மூலம் இரண்டாவது கடமையும் நிறைவேறிவிடுகின்றது. இதன் மூலம் எந்த உபதேசம் இறைவனிடமிருந்து வந்துள்ளதோ அதை உண்மையான மனதுடன் ஏற்றுக் கொள்கின்றான். இறைவனின் மூன்றாவது உரிமை அவனது ஆணைகள் நிறைவேற்றப்படுவதாகும். அல்லாஹ் தன் அருள் மறையிலும் நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவிலும் விவரிக்கப்பட்டுள்ள சட்டங்களைப் பின்பற்றுவதனால் இந்தக் கடமை நிறைவேறிவிடுகின்றது.

அடுத்த கடமை இறைவனை வணங்குவதாகும். இதனை மனிதன் நிறைவேற்றுவதற்காகவே தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செய்வதன் மூலம் நான்காவது கடமையும் நிறைவேற்றப்படுகின்றது. (இது தான் இஸ்லாம் - மௌலானா மௌதூதி)

"ஹுகூகுல் இபாத்" இனைப் பொறுத்தவரையில் சமூகத்தை நோக்கிய தனிமனிதனின் கடமைகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இது பற்றிய விபரங்களை பல்வேறு ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன. உதாரணமாக,

1. ரசூல் (ஸல்) கூறியதாக நுஹ்மான் இப்னு பஷீர் (ரலி) அறிவிக்கின்றார்கள். “ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டி, ஒருவருடன் ஒருவர் இணைந்து வாழும் மு.ஃமீன்களுக்கு உதாரணம் ஓர் உடலைப் போன்றதாகும். அதன் ஓர் உறுப்பு நோய்வாய்ப்படும் போது அதற்காக முழு உடலும் விழித்திருப்பதன் மூலமும் காய்ச்சல் மூலமும் அச்சிரமத்தில் பங்கெடுத்துக்கொள்கின்றன.” (புஹாரி / முஸ்லிம்)

2. ரசூல் (ஸல்) கூறியதாக அபூஹுறைரா (ரலி) அறிவிப்பதாவது, “ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஆறாகும்.

   (i) அவரை நீர் சந்தித்தால் அவருக்கு ஸலாம் சொல்வீராக, மேலும் அவரது ஸலாத்துக்கு பதில் சொல்வீராக.
   (ii) அவர் உம்மை விருந்துக்கு அழைத்தால் செல்வீராக.
   (iii) அவர் உம்மிடம் ஆலோசனை கேட்டால் ஆலோசனை கூறுவீராக.

(iv) அவர் தும்மி அல்லாஹ்வைப் புகழ்ந்தால் அவருக்கு **“யர்ஹமுகல்லாஹ்”** என பதில் சொல்வீராக.
(v) அவர் நோய்வாய்ப்பட்டால் அவரை நோய் விசாரிப்பாயாக.
(vi) அவர் மரணித்தால் அவரின் மையத்தைப் பின்தொடர்ந்து செல்வீராக. (முஸ்லிம்)

சமூகத்தை நோக்கிய தனி மனிதனின் கடமைகள் வரிசையில் இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட மகாபட்டயத்திலிருந்துதான் உலகம் அடிப்படை மனித உரிமைகளுக்கான கருத்தோட்டங்களைப் பெற்றது என பலர் பிழையாக கருதிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இஸ்லாம் தோன்றி 600 ஆண்டுகள் கழித்துத்தான் இந்த மகாபட்டயம் (மேக்னா காட்டா) உருவெடுத்தது. எனவே மனித உரிமைகளுக்கான முன்னோடி இஸ்லாம்தான் என்றால் அது மிகையாகாது.

**குடும்பம் - வரைவிலக்கணம் :**

“உறவு முறைத் தொடர்புகளால் பிணைத்துள்ள ஆட்களை உள்ளடக்கும் குழுவினை” குடும்பம் என்று அழைக்கின்றனர். “குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் இளைய உறுப்பினர்களின் பராமரிப்புக்கு பொறுப்புடையவர் ஆவார்கள்” என "Giddens" (கிட்டின்ஸ்) எனும் சமூகவியலாளர் குடும்பத்தை வரைவிலக்கணம் செய்துள்ளார்.

அதேபோல், Murdock (மேர்டொக்) எனும் ஆய்வாளர், “பொதுவான வாழிடம், பொருளாதாரக் கட்டமைப்பு, மற்றும் இனவிருத்தி என்பவற்றைக் கொண்டிருப்பதாக அமையும் ஒரு சமூகக் குழு குடும்பம் ஆகும். அது வளர்ந்த ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாயும் அவர்களில் குறைந்தபட்சம் இருவர் சமூக அங்கீகாரத்துடனான பாலியல் தொடர்புகளைப் பேணி வருபவராயும் அவ்வாறு பாலியல் ரீதியாக இணைந்து வாழும் அவர்கள் ஒன்றோ அல்லது அதற்குக் கூடிய பிள்ளைகளைப் பெற்றோ அல்லது தத்தெடுத்தோ வளர்ப்பவர்களாயும் அமையும்” என குடும்பம் என்பதை வரைவிலக்கணம் செய்கின்றார்.

குடும்பத்தின் அமைப்பு சமூகத்துக்குச் சமூகம் மாறுபடுகின்றது. இதனை இரண்டாக சமூகவியலாளர்கள் வகைப்படுத்துகின்றனர்.

1. கருக்குடும்பம் அல்லது மையக் குடும்பம்.
2. விரிகுடும்பம் அல்லது கூட்டுக் குடும்பம்.

மிகச் சிறிய குடும்ப அலகு “மையக் குடும்பம்” என அழைக்கப்படுகின்றது. இக்குடும்பம் வளர்ந்தோர், அவர்களின் பிள்ளைகளை உறுப்பினராகக் கொண்டது. மையக் குடும்பத்தைவிடப் பெரிய குடும்ப அலகுகள் விரி குடும்பங்கள் என அழைக்கப்படுகின்றன. அடிப்படை மைய அலகுகளின் விரிவாக்கங்களாக அவை

அமைகின்றன. அவை "குத்துவிரிவாக்கங்கள்" ஆகவோ "கிடை விரிவாக்கங்களாகவோ" இருக்கலாம். கணவன், மனைவி ஆகியோரின் பெற்றோர் இணைந்து வாழும் குடும்பம் "குத்து விரிவாக்கத்திற்கு" உதாரணமாகும்.

ஒரே தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அதாவது கணவன் அல்லது மனைவி, சகோதரர்கள் அல்லது சகோதரிகள் இணைந்து வாழும் குடும்பம் "கிடைவிரிவாக்கத்திற்கு" உதாரணமாகும். பிறப்பு, திருமணம் காரணமாக உறவு பூண்டவர்களைக் கொண்டதும், மையக் குடும்பத்திலும் பார்க்க விரிவானதுமான குடும்பம் விரிகுடும்பம்" என சமூகவியலாளர்கள் பாகுபடுத்தியுள்ளார்கள். காலப்போக்கில் குடும்பத்தின் அமைப்பானது பெரும்பாலான சமூகங்களில் விரிகுடும்பம் எனும் நிலையிலிருந்து மையக் குடும்பம் எனும் வகைக்கு மாற்ற மடைந்து வந்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

### முஸ்லிம் சமூக அமைப்பில் குடும்பத்தின் பங்கு

இஸ்லாமியக் குடும்பம் பல உயர்ந்த நோக்கங்களை கொண்டுள்ளது. மனிதனின் ஒழுக்க வாழ்க்கையைச் சீரமைத்து விடுவது மிகப் பிரதானமான ஒரு நோக்கமாகும். மனித உடல், உணர்ச்சிகளை இயல்பாகக் கொண்டதாகும். அவ்வுணர்ச்சிகள் முறையாக இயக்கப்படாதபோது மனிதனின் நிலை மிருக நிலைக்குத் தாழ்ந்து ஒழுக்க வீழ்ச்சி ஏற்பட ஏதுவாகின்றது. மனிதனின் இயல்பான இத்தகைய உணர்ச்சிகளை இஸ்லாம் புறக்கணிக்கவில்லை. அதனை இஸ்லாம் கூடுதலாக மதிப்பதனால்தான் சட்டரீதியான கணவன், மனைவி உறவை அது குடும்ப அமைப்பாக அறிமுகப்படுத்துகின்றது. ஒரு மனிதன் தன் உடலுணர்ச்சி களைத் தகாத முறையில் தீர்த்துக் கொள்வதனைப் பாவச் செயல் என்று கருதும் இஸ்லாம், அதனைச் சட்டரீதியாகத் தீர்த்துக் கொள்வதனை இபாதத்தாகக் கருதுகிறது. இங்கு இஸ்லாம் குடும்பம் என்ற நிறுவனத்தின் மூலம் உடலை ஒழுக்கத்தோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறது.

குடும்ப வாழ்வு இஸ்லாமிய அடிப்படையில் அமையும்போது, அவ்வாழ்க்கை யின் சகல அம்சங்களும் அல்லாஹ்விடத்தில் உயர்ந்த பெறுமானமுள்ளவையாக மாறிவிடுகின்றன. இன்னொருவகையில் கூறுவதாக இருந்தால், அவை அனைத்தும் இபாதத்தாகவே கருதப்படுகின்றன. நல்லொழுக்கமுள்ள ஒரு மனைவியைத் தெரிந்தெடுத்தல், அவளைத் திருமணம் முடித்தல் இபாதத்தாகும். "ஒரு முஸ்லிம் திருமணம் செய்துகொண்டால் அவன் தன் மார்க்கத்தில் அரைப் பகுதியை நிறைவு செய்து விட்டவனாவான். ஆகவே, அவன் மிகுதியுள்ள அரைப் பகுதியில் இறை நினைவு நிறைந்தவனாகவும் இருக்கட்டும்" என்று நபி (ஸல்) குறிப்பிட்டதிலிருந்து இதனைப் புரிந்துகொள்ள முடியும். திருமணம் என்ற பந்தத்தால் குடும்ப வாழ்க்கையில் இணைந்த கணவன், மனைவி அன்பாகப் பழகுவதும் இபாதத்தாகும். "ஒரு கணவன் தனது மனைவியின் வாயிலே ஒரு

பிடி உணவை இடும் செயலானது தர்மம் செய்வதற்குச் சமனானது. நீங்கள் உங்கள் மனைவியோடு சேர்வதும் தர்மமாகும்." என்றும் நபியவர்கள் குறிப்பிட்டார்கள். பிள்ளைகளைப் பெற்றெடுத்தல், நல்லவர்களாக அவர்களை வளர்த்து விடல், மனைவியினதும், பிள்ளைகளதும் தேவைகளுக்காக உழைத்தல், செலவுகளைச் செய்தல் அனைத்துமே நன்மைகளை அள்ளித்தரும் இபாதத்துக் களாக அமைந்துவிடுகின்றன.

இஸ்லாம் இல்லற வாழ்கையை ஆதரிக்கின்றதே தவிர, துறவற வாழ்க்கையை ஆதரிக்கவில்லை. மனித இயல்புகளுக்கு எந்தவொரு கொள்கையும், வழிமுறையும் ஆதரவு தர மறுக்கின்ற போது தவறுகள் அதிகரிக்க வழி பிறக்கின்றது. "துறவறம்" மனித இயல்புக்குப் புறம்பானதொரு நடவடிக்கையாகும். இதனால்தான் துறவறத்தை ஆதரிக்கின்ற எந்தவொரு வழிமுறையும் பூமியில் வெற்றியளிக்கவில்லை.

மனித வாழ்வில் அன்பு, அமைதி காணப்படுவதற்கு குடும்ப வாழ்வு அவசியமாகும். ஒரு மனிதன் தவறான வழிமுறைகளில் தன் உடல் இச்சைகளைத் தீரத்துக்கொள்ள முடியும். ஆனால் குடும்ப வாழ்வில் அவன் பெறும் அன்பையும், அமைதியையும் அவ்வுறவு அவனுக்குக் கொடுக்க முடியாது. ஓர் ஆண் காலையில் எழுந்ததிலிருந்து வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள இரவு நேரம்வரை மிகக் கடுமையாக உழைக்கின்றான். அதற்கு மழையும், வெயிலும், இரவும், பகலும் தடையானவை என்று அவன் சிந்திப்பதில்லை. எத்தனையோ துன்ப துயரங்களையும், கஷ்டங்கள் கவலைகளையும் இதற்காக அவன் எதிர்கொள்கின்றான். எனினும், மாலையில் அவன் வீடு திரும்புவதை ஆவலோடு எதிர் பார்க்கின்றான். அவன் பெற்ற சகல வேதனைமிக்க அனுபவங்களும் தனது மனைவி, மக்களைச் சந்திக்கின்ற போதும் அவர்களோடு பழகுகின்ற போதும் மறைந்துவிடுகின்றன. இத்தகைய தொரு அருளை குடும்பம் என்ற புனிதமான அமைப்பில் அல்லாஹ் வைத்திருப்பதனால் அதனைத் தூய்மையான முறையில் பாதுகாக்க முஸ்லிம்கள் கடமைப்பட்டிருக்கின்றனர்.

## தனிமனித உருவாக்கத்தில் குடும்பத்தின் பங்கும் பணியும்

ஒரு தாய் இல்லத்தரசியாகவும், ஒரு தந்தை குடும்பத் தலைவனாகவும் தனது வகிபாகங்களை ஏற்று ஒருவரையொருவர் புரிந்து, நல்லுறவுடன் வாழும் வாழ்வே நல்லதொரு குடும்பத்தின் அணிகலனாகக் கருதப்படுகிறது. இந்த வகையில் தாய் தனது தாய்மை என்ற அந்தஸ்தின் ஊடாகவும், தந்தை தனது வகிபாகம் மூலமாகவும் குடும்ப ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் சரிவர நிறைவேற்றும்போது குடும்பத்தில் ஆளுமையுள்ள, ஆற்றலுள்ள, செயற்றிறன் மிக்க பிள்ளைகள் நிச்சயமாக உருவெடுப்பர் என்பதை பல்வேறு சமூக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

> "(மனைவியர்களாகிய) அவர்கள் உங்களுக்கு ஆடையாகும். அதேபோன்று நீங்கள் அவர்களுக்கு ஆடையாவீர்கள்" (2:187) என்ற மறை வசனம் கணவன், மனைவி பரஸ்பரம் ஒருவருக்கொருவர் எவ்வாறான வகிபங்கை கொண்டிருக்கின்றனர் என்பதற்கு ஆடை என்ற உவமானம் இங்கு நம் அனைவரையும் கவன ஈர்ப்புச் செய்கின்றது.

இஸ்லாத்தில் ஆண் ஆதிக்கம், பெண் நிலைவாதம் என்பனவற்றுக்கு இடமில்லை. பெண்கள், ஆண்களின் துணையாகவும், ஆண்கள் பெண்களுக்குத் துணையாகவும் உள்ளனர். ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் இயல்பு, ஆற்றல் என்பவற்றுக்கேற்ற பொறுப்புக்களும், சிறப்புக்களும் இஸ்லாத்தில் உண்டு. ஆகவே, போட்டி பொறாமைக்கு இடமின்றி, அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்து தத்தம் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் இரு பாலாரும் தனிமனித உருவாக்கத்தில் குடும்ப ரீதியில் நிச்சயம் மகத்தான பங்கையும், சேவையையும் நல்க முடியுமென இஸ்லாமிய குடும்பவியல் எதிர்பார்க்கின்றது.

சமூகத்தில் மாற்றம் செய்வதிலும் அதை உருவாக்கும் மனிதர்களின் சிந்தனையிலும், நடத்தையிலும், செல்வாக்குச் செலுத்துவதிலும் பெண்களின் பங்கு ஆண்களின் பங்கைவிட மிக முக்கியமானது. ஏனெனில், கருவிலிருக்கும் சிசுவிடம் இவற்றுக்கான அத்திவாரத்தை இடுபவர்கள் பெண்களேயாவர். எனவே, சீரான சமூகத்தை உருவாக்கும் சிறந்த தாய்மார்களே சமூகத்தின் அச்சாணிகளாகவுள்ளனர்.

# குடும்ப உறவு

## இஸ்லாமிய சமூக அமைப்பின் பண்புகள்

**குடும்ப உறவு**

குடும்ப உறவு இரண்டு வழிமுறைகளில் தோற்றம் பெறுகின்றன.

(i) இனபந்து அல்லது இரத்த உறவு மூலம்
(ii) திருமண உறவு மூலம்

இரத்த உறவு தாய்வழி மூலமாகவும் தந்தை வழி மூலமாகவும் ஏற்படுகின்றது. இத்தகைய தொடர்பில் மஹ்ரமீ/அஜ்னபீ என்ற சட்டரீதியான, சட்டரீதியற்ற தொடர்புகள் சம்பந்தப்படுவதாக இஸ்லாமிய ஷரீஆ தெளிவுபடுத்துகிறது.

இரத்த உறவைப் பொறுத்தவரை ஷரீஆ அதனை 03 பகுதியாகப் பிரிக்கிறது.

(i) அல் - உசூல்
(ii) அல் - புரூஉ
(iii) அல் - ஹவாஷி

“அல் உசூல்” என்பது தந்தையில் ஆரம்பித்து மேல் நோக்கிச் செல்லும் உறவுகள் அனைத்தையும் குறிக்கும். தந்தை, தந்தையின் தந்தை (பாட்டன்), முப்பாட்டன் எனத் தொடர்ந்து மேல் நோக்கிச் செல்லும் வழிமுறையை இது குறிக்கிறது.

“அல் புரூஉ” என்பது பிள்ளையில் ஆரம்பித்து கீழ் நோக்கிச் செல்லும் உறவுகள் அனைத்தையும் குறிக்கும். அதாவது மகன், மகனின் மகன் (பேரன்); பேரனின் மகன் எனத் தொடர்ந்து கீழ் நோக்கிச் செல்லும் வழிமுறையைக் குறிக்கின்றது.

“அல் ஹவாஷி” என்பது கிளைகள் அல்லது சுற்றத்தார் என்று பொருள்படும். இது தனது உறவிலிருந்து மேல்நோக்கியோ, கீழ் நோக்கியோ செல்லாது பக்கவாட்டில் அல்லது கிடையாகப் பிரிந்து செல்லும் உறவுகளைக் குறிக்கின்றது.

மேற்படி வழிமுறைகள் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்றால், இஸ்லாமிய வாரிசுரிமை சொத்துப் பங்கீட்டில் இத்தகையோர் குடும்ப ரீதியில் பங்கீடு பெறுவதற்கு மிகவும் அருகதையுடையோர்களாக கருதப்படுகின்றனர்.

திருமண உறவு மூலம் கணவன், மனைவி, மாமனார், மாமியார், மைத்துனர், மைத்துனி போன்ற புதிய உறவுகள் உருவெடுப்பதோடு அவர்களிடையே பரஸ்பரம் அன்பு, கௌரவம், மரியாதை போன்ற உயர் விழுமியங்களும் கட்டியெழுப்பப்படுகின்றன. இதனை மனமகிழ்ச்சியாகவும், கண்குளிர்ச்சியாகவும் கருதும் இஸ்லாத்தின் இறைதூதர் பிரார்த்தித்து வந்த துஆவை அல் குர்ஆன் பின்வருமாறு எமக்குக் கற்பிக்கின்றது.

> "எங்கள் இறைவா! எங்களது மனைவிமார்களிலும் பரம்பரையிலும் கண் குளிர்ச்சியை எமக்குத் தருவாயாக." (26:74).

## உறவினரும் அயலாரும்

இஸ்லாமியக் குடும்ப அமைப்பில் உறவினரும் அயலாரும் முக்கிய பங்காளர்களாகக் கருதப்படுகின்றனர். அதன் செல்நெறியிலும், வளர்ச்சியிலும் உறவினர், அயலார் பங்காளிகள் மட்டுமல்ல; வாரிசுச் சொத்திலும் பங்கு கொடுக்க வேண்டி வருமோ? என்று இறைதூதர் எண்ணும் அளவுக்கு இத்தகையோரின் பொறுப்பும் வகைகூறலும் இஸ்லாமிய மூலாதாரங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

- **உறவினர் பற்றிய குர்ஆனிய நோக்கு**

I. “இன்னும் எவனைக் கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக் கொள்கிறீர்களோ, அந்த அல்லாஹ்வை யும் இரத்தக் கலப்பு சொந்தங்களைத் துண்டித்து விடுவதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.” (4:1)

II. “அல்லாஹ்வுடைய வேதக் கட்டளைப்படி உங்கள் உறவினர்களில் உள்ளவர்களே ஒருவர் மற்றவருக்கு பொறுப்பு வகிப்பார்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும், நன்கறிந்தவனாக இருக்கின்றான்.” (8:75)

III. “எவர்கள் அல்லாஹ்விடமளித்த வாக்குறுதியை – அது உறுதியான பின்னார் - முறித்துவிடுகிறார்களோ (அவர்களும்) இன்னும் பந்தத்து வத்தை சேர்த்துவைக்கப்பட வேண்டுமென அல்லாஹ் கட்டளை யிட்டானோ அதனைத் துண்டித்தவர்களும், பூமியில் குழப்பம் விளைவிப்பவர்களும் அல்லாஹ்வின் சாபத்துக்கும், இழிவுக்கும், கெட்டவீட்டுக்கும் உரித்துடையோராவர். (13:25)

## நபிகளாரின் பொன்மொழிகள் :

(1) றசூல் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைறா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் "யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ, அவர் தமது விருந்தாளியை கண்ணியப்படுத்தவும். யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் தமது உறவினர்களுடன் சேர்ந்து நடக்கவும். யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் நல்லதை பேசவும்; அல்லது மௌனமாக இருக்கவும். (புஹாரி முஸ்லிம்)

(2) அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். யார் தனது உணவு விசாலமாக கிடைக்க வேண்டும் எனவும், தன் வாழ்நாள் நீடிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறாரோ, அவர் தனது உறவினர்களுடன் சேர்ந்து நடக்கவும். (புஹாரி ; முஸ்லிம்)

- **அயலவர்**

(1) “மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள் (அவ்வாறே) உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டாருக்கும், அந்நியரான அண்டை வீட்டாருக்கும் (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உங்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களுக்கும் (அன்புடன்) உபகாரம் செய்யுங்கள்” (4:36)

(2) ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "யாரசூலல்லாஹ்! எனக்கு இரு அண்டை வீட்டார்கள் இருக்கின்றனர். அவர்களில் யாருக்கு அன்பளிப்புக் கொடுக்க வேண்டும்?" என்று நான் கேட்டேன். அதற்கு றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “அவர்களில் யாருடைய வாசல் உமக்கு சமீபமாய் இருக்கின்றதோ அவருக்குத்தான் என பதிலளித்தார்கள்.” (புஹாரி)

(3) றசூல் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். “அண்டைவீட்டார் வாரிசுக்காரர்களாக ஆகிவிடுவார்களோ! என நான் எண்ணும் அளவுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் எனக்கு அவர்களின் (உரிமைகளைப் பற்றி) வலியுறுத்தி உபதேசம் செய்தார்கள். (நூல் : புஹாரி ; முஸ்லிம்)

அயலாருக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்கள்.

1. ஒரு கடமைக்குரிய அயலான். இவர் யார் என்றால், எமது அண்டை வீட்டில் வாழும் முஸ்லிம் அல்லாத சகோதரர்.
2. இரண்டு கடமைக்குரிய அயலான். இவர் யார் என்றால், எமது அண்டை வீட்டில் வாழும் உறவினர் அல்லாத முஸ்லிம்.
3. மூன்று கடமைக்குரிய அயலான். இவர் யார் என்றால், எமது அண்டை வீட்டில் வாழும் உறவினரான முஸ்லிம்.

## சமூகம்
## இஸ்லாமிய சமூக அமைப்பின் பண்புகள்

### சமத்துவம்

உலகின் அனைத்து மாந்தர்களும் முதல் மனிதர்களான ஆதம், ஹவ்வா ஆகிய இருவரினால் உருவான சந்ததிகளே. மக்கள் யாவரும் சமமானவர்களே. ஒருவர் தனது பணத்தாலோ, பதவியாலோ, பட்டங்களாலோ அல்லது தனது குடும்ப உறவினாலோ மற்றவரை விட உயர்ந்துவிட முடியாது. இறையச்சம், உயர்பண்பு, சமூகத்திற்குச் செய்யும் தியாகங்கள், உயர் பணிகள் தக்வா என்பவற்றாலேயே ஒருவர் உயர்ந்தவராகலாம்.

மாநபியின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இறுதிப் பேருரையில் சமத்துவம் பற்றி, அவர்கள் கூறினார்கள் :

> "மக்களே ! நிச்சயமாக உங்கள் இறைவன் ஒருவனே. உங்கள் தந்தையும் ஒருவரே! நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். அல்லாஹ்வின்மீது பயபக்தி உடையவரே உங்களில் மேலானவர். அரேபியர் அஜமிகளை விடவோ அஜமிகள் அரேபியர்களை விடவோ மேலானவருமல்லர். வெள்ளையர் கறுப்பரைவிடவோ கறுப்பர் வெள்ளையரை விடவோ இறையச்சத்தினாலன்றி மற்றெவ்வழியிலும் மேலான வரல்லர்."

இந்த இஸ்லாமிய போதனைகள் தத்துவங்களாக மாத்திரம் இருந்து விட்டு மாய்ந்து போகவில்லை. இவை மனித சமுதாயத்தில் அன்று தலைவிரித்தாடிய குலபேதம், நிறபேதம், வர்க்கபேதம் முதலான நோய்களை முளையோடு கிள்ளி எறிந்தன. யாவரும் சமமானவர்கள் என்பதை நிலைநாட்டின.

### சகோதரத்துவம்

> “மனிதர்களே! உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்து அவர்கள் இருவர் மூலமும் அதிகமான ஆண்களையும், பெண்களையும் படைத்த உங்கள் இரட்சகனைப் பயந்து கொள்ளுங்கள்.” (4:1)

மனித சகோதரத்துவத்திற்கு இஸ்லாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதற்கு இறைதூதர் (ஸல்) அவர்களின் கீழ் வரும் பிரார்த்தனை ஆதாரமாக விளங்குகிறது.

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் "இறைவா! எங்கள் இரட்சகனே! அனைத்தினதும் இரட்சகனே! நீயே அரசன். நீதான் அல்லாஹ். நீ ஏகன். உனக்கு இணை துணையில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். முஹம்மது (ஸல்) அவர்கள் உனது அடிமை. உனது தூதர் என்று நான் சாட்சி சொல்லுகிறேன். இறைவா! எங்களது இரட்சகனே! அரசனே! மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என சாட்சி கூறுகிறேன்." எனக் கூறிப் பிரார்த்திப்பார்கள். (அறிவிப்பாளர் - ஸைத் பின் அர்கம் (ரலி))

## சகோதரத்துவம் தொடர்பான நபிமொழிகள்

i. "எவர் அல்லாஹ்வுக்காக நேசிக்கிறாரோ, அவனுக்காக வெறுக்கிறாரோ, மேலும் அல்லாஹ்வுக்காக வழங்குகிறாரோ, அவனுக்காகத் தடுக்கிறாரோ அவர் ஈமான் - இறை நம்பிக்கையைப் பூரணமாக்கிவிட்டார். (அபூதாவூத்)

ii. "இறை நம்பிக்கையின் சுவையைப் பெறுவது எவருக்கு மகிழ்ச்சி தருகிறதோ, அவர் பிற சகோதரரை நேசிக்கட்டும். அது அல்லாஹ்வுக்காக என்றிருக்கட்டும்." (அஹ்மத்)

iii. அல்லாஹ்வின் நிழலைத்தவிர வேறு நிழலே இருக்காத மறுமை நாளில், அல்லாஹ் தனது நிழலில் தஞ்சம் அளிக்கும் ஏழு பேரில் இந்த இரண்டு மனிதர்களும் இருப்பார்கள். அவ்விருவரும் அல்லாஹ்வுக்காக ஒருவரையொருவர் நேசிப்பவர்களாக இருந்தனர். அதன் அடிப்படையி லேயே இணைந்திருந்தனர்; பிரிந்து சென்றனர்." (புகாரி)

iv. மறுமை நாளில் உயர் அந்தஸ்து பெறுவதற்கும், சுவனபதி செல்வதற்கும் தூய்மையான சகோதரத்துவமே காரணியாகத் திகழ்கிறது. மேலும் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

"இரு முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து கைலாகு கொடுத்தால் அல்லாஹ்வின் மன்னிப்பு அவ்விருவருக்கும் கிடைப்பது நிச்சயம். (அவ்விடத்தை விட்டும்) அவர்கள் பிரியும் முன்னர்!" (அபூதாவூத் ; அஹ்மத்)

v. "ஒரு முஸ்லிம் பிற முஸ்லிம்களுக்குச் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதி இழைக்கமாட்டான். அவனை (எதிரிகளிடம்) ஒப்படைக்கமாட்டான்." (புகாரி, முஸ்லிம்)

மாறாக சகோதரத்துவ உணர்வு மறைந்து, உறவு பலவீனமாகி, ஒற்றுமை குலைந்து, வேற்றுமையும் பிரிவினையும் தலைதூக்கினால் அது எல்லோருக்கும் வீழ்ச்சியே! இந்நிலை அறிந்து அல்-குர்ஆன் பின்வருமாறு எச்சரிக்கின்றது.

"நீங்கள் ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் உங்களிடையே பலவீனம் தோன்றிவிடும். உங்கள் மதிப்பும் வலிமையும் அழிந்து போய்விடும்." (8 : 46)

**சுதந்திரம்**

ஒரு தனிமனிதனின் சுதந்திரத்திற்காக இஸ்லாம் பல்வேறு மனித உரிமைச் சட்டங்களை வழங்கியுள்ளது.

இஸ்லாமிய நாட்டில் வாழும் முஸ்லிம், முஸ்லிமல்லாத குடிமக்களின் உடமைகள் யாவும் புனிதமானவைகளாகக் கருதப்படும். அவர்களின் கண்ணியத்தையும் இஸ்லாம் பாதுகாக்கின்றது. ஆகையால், இஸ்லாத்தில் ஒருவரை கேலி செய்வதும் கண்ணியக் குறைவாக நடத்துவதும் அனுமதிக்கப்பட்டவையல்ல. முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"உங்களது இரத்தமும் உங்களது உடமைகளும் மற்றும் உங்களது கண்ணியமும் வரம்பு மீறமுடியாதவைகளாகும். (முஸ்னத் அஹ்மத், புகாரி)

இரண்டாம் கலீபா உமர் (ரலி) அவர்கள் தனது ஆட்சியின் போது எகிப்தின் கவர்னராக கடமையாற்றிய அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் மகனை பிரதிவாதியாக கொண்ட ஒரு வழக்கில் எகிப்திய சாதாரண குடிமகனுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கியதுடன், கவர்னர் அம்ருப்னுல் ஆஸை நோக்கி பின்வருமாறு தனது உருக்கமான வார்த்தையை கூறினார்கள்.

"அம்ரே! மனிதர்களை ஏன் அடிமைகளாக வைத்து ஆட்சி செய்கிறீர்கள். அவர்களது தாய்மார்கள் அவர்களைப் பெற்றெடுக்கும் போது சுதந்திரப் புருஷர்களாகவே பெற்றெடுத்துள்ளார்கள்" எனக் கூறினார்கள்.

இஸ்லாமிய ஆட்சியில் காணப்பட்ட "திம்மிகள்" இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபடுமாறோ; ஜிஹாதில் கலந்து கொள்ளுமாறோ இவற்றிற்கான பண உதவிகள் வழங்குமாறோ வேண்டப்படுவதில்லை. அவர்களின் மதச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் காணப்பட்டது.

## நீதி

இஸ்லாமிய நீதித்துறை அது முன்வைக்கும் நீதி சார்ந்த தீர்ப்புக்கள் முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் என வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அனைவரையும் அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் அனைவருக்கும் நியாயமாக, சமமாக வழங்கப்படத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இஸ்லாம் நீதி, நேர்மை ஆகிய பண்புகளை வலியுறுத்தும் மார்க்கமாகும். ஒரு முஸ்லிம் எப்போதும் இவ்விரு பண்புகளையும் அணிகலன்களாகக் கொண்டவனாக இருத்தல் வேண்டும். இஸ்லாம் நீதியை நிலைநாட்டக் கூடிய இறைவனின் மார்க்கமாகும். அல்லாஹ் தனது குர்ஆனில்,

> "நிச்சயமாக அல்லாஹ் அமானிதங்களை அவற்றுக்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டுமென்றும், மனிதர்களிடையே நீங்கள் தீர்ப்புக் கூறினால் நீதத்துடன் தீர்ப்புக் கூறவேண்டுமென்றும் உங்களுக்குக் கட்டளை இடுகின்றான்." (4:58)

தம்முடைய பகை, வெறுப்புக் காரணமாக அவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளில் அநீதமாக நடக்காமல் நீதமுடன் நடக்குமாறு இறைவன் தன்னுடைய திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

> "விசுவாசிகளே! நீதியைக்கொண்டு சாட்சி கூறுகிறவர்களாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்காக நிலையானவர்களாகி விடுங்கள். ஒரு கூட்டத்தினரின் பகைமை நீங்கள் அவர்களுக்கு நீதி செலுத்தாமல் இருப்பதன் மீது உங்களைத் தூண்ட வேண்டாம். நீங்கள் நீதி செலுத்துங்கள், அது தக்வாவிற்கு மிக நெருக்கமானதாகும்." (5:8)

> இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். "நீங்கள் அநீதி செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அது இறப்பிற்குப் பின் உள்ள மறுமை வாழ்க்கையில் இருளை (நட்டத்தை) உண்டாக்கும்." (முஸ்லிம்)

நியாயமான மனிதனாக ஒருவன் தன்னை மாற்றிக் கொள்வதற்கும், பிறருக்கு அநீதி செய்வதிலிருந்தும், தனக்கு அநீதி இழைக்கப்பட்டதிலிருந்தும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவன் கண்டிப்பாக இறைவன் மீதும் அவனது மார்க்கத்தின் மீதும் நம்பிக்கை கொண்ட சமூகத்தை சூழ உள்ளவனாகவும், அத்தகைய சமூக வாழ்வில் இவன் ஒரு அங்கமாகவும் இருக்க வேண்டும்.

இத்தகைய இறைசட்டங்கள் மனிதன் சக மனிதனுடன் அமைதியாக வாழ்வதற்கு முழுமையான பயனைத்தரும்.

## தனி மனிதனும் சமூகமும் (உரிமைகள்)
## இஸ்லாத்தில் மனித உரிமைகள்

இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

> “இந்த உலக வாழ்க்கையில் எவருக்கு உரிமைகள் கிடைக்க வில்லையோ, அவருக்கு மறுமை நாளில் அவைகள் வழங்கப்பட்டு அவருடைய பாவங்கள் அல்லது தவறுகளுக்கு ஈடாக அவை ஏற்றுக் கொள்ளப்படும்” (ஸஹீஹ் புகாரி, முஸ்னத் அஹ்மத்)

யாரும் யாருடைய உரிமைகளையும், அவருக்குச் சேர வேண்டிய நியாயமான நீதிகளையும் புறக்கணித்து விடமுடியாது. இத்தகையவர்களுக்கு அநீதி இழைப்பதானது மிகப் பெரும் பாவமாக இஸ்லாத்தில் கருதப்படுகிறது. அநீதி செய்தவர் மறுமை நாளில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டு அவருக்குத் தண்டனையும், இவ்வுலகில் பாதிப்புக்குள்ளானவருக்கு இறைவன் மன்னிப்பையும் நீதியையும் வழங்குவான்.

### அல்குர்ஆன் முன்வைக்கும் மனித உரிமைகள்

(1) மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி (பகரா: 30) (இஸ்ரா : 70)
(2) உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு வழங்கும் உரிமை (அன்நிஸா : 93)
(3) அவதூறு ; அவமானம் ஏற்படுத்தாமல் மனித கண்ணியத்தைப் பாதுகாக்கும் உரிமை (ஹுஜுராத் : 11-12)
(4) பன்மைத்துவத்தைப் புரிந்து சமத்துவ, சகிப்புத்தன்மை சகவாழ்வு உணர்வுடன் வாழும் உரிமை (ரூம் : 22)
(5) சமூகங்களுக்கிடையே நீதி ; நியாயம் பேணும் உரிமை (மாயிதா : 08)
(6) கருத்துச் சுதந்திர உரிமை (அஃராப் : 62)
(7) பெண்களின் கற்புக்கும் ; தூய்மைக்கும் மரியாதை வழங்கும் உரிமை (இஸ்ரா : 32)

### நன்மைகளை வளர்த்தல், தீமைகளை களைதல்

### இஸ்லாமிய பயிற்றுனரின் பண்புகள், பணிகள் :

இஸ்லாம் ஒரு சமூக வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில் தனிமனித, குடும்ப, சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகளை ஹலால், ஹறாம் என்ற அடிப்படையில் முன்வைத்திருக்கின்றது. இவற்றை விளங்கிக்கொண்ட இஸ்லாமிய பயிற்றுனர்கள்,

தாஇகள், நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் த.்.வா பணியை மேற்கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இது பற்றி அருள்மறை அல்குர்ஆன்,

> "விசுவாசிகளே! உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் மக்களை நன்மையின்பால் அழைக்கின்றவர்களாகவும், நல்லதைக்கொண்டு ஏவுகின்றவர்களாகவும், தீயதைவிட்டும் விலக்குகின்றவர்களாகவும் இருக்கட்டும். மேலும், அவர்கள் தாம் வெற்றியாளர்கள்." (3:104)

மேற்படி சீர்திருத்தப் பணியை மேற்கொள்ளும்போது சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாம். இக்கட்டத்தில் த.்.வா பயிற்றுனர்கள் பொறுமை, சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுத்தல் போன்ற உயர் பண்புகளை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

### பல்லின சமூகத்துடனான முஸ்லிம்களின் உறவு

முஸ்லிம் சமூகம் தமக்கிடையே ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் உருவாக்கி குழப்பமற்ற சூழலை ஏற்படுத்தி, சமாதான பூமியாக இவ்வுலகைக்காண அழைப்பு விடுக்கும் இஸ்லாம், முஸ்லிமல்லாதவர்களுக்கிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான சிறந்த வழிகாட்டல்களை எமக்குத் சொல்லித் தருகிறது. இவ்வுலகில் வாழும் மனிதர்கள் பல்வேறு குழுக்களாகவும் பிரிவுகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தம்மை கல்வி, செல்வம், குடும்ப அந்தஸ்து, நாடு, இன, மத, நிற, பிரதேசம் போன்ற பல்வேறு அடிப்படைகளில் தராதரப்படுத்தி வாழ்கின்றனர். இவ்வாறு பிரிந்து வாழ்வது பிரபஞ்ச ரீதியாக இருப்பினும், மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள் மனிதர்களை பிரித்து நோக்குவது கவலைக்குரியது.

ஆனால், மதம் என்ற வகையில் இஸ்லாம், மனிதர்களை இவ்வாறு பிரித்து நோக்கவில்லை. முழு மனித இனத்திற்குமான தூதாகவே தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கை அடிப்படையில் மாத்திரம் மனித சமூகத்தை இரண்டாக நோக்குகிறது. அதாவது இஸ்லாத்தை ஏற்றோர் அனைவரும் ஒருபிரிவினராகவும் அதனை ஏற்காதோர் அனைவரும் மறுபிரிவினராகவும் கணிக்கப்படுவர்.

அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

> “அவன் தான் உங்களைப் படைத்தான். உங்களில் நிராகரிப்போரும் இருக்கின்றனர். மு.்.மீன்களும் இருக்கின்றனர். நீங்கள் செய்பவற்றை அவன் நன்கு விளங்கிக் கொள்வான்.” (அல்குர்ஆன்)

இவ்விரு பிரிவினரும் ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் வாழும்போது இரு பிரிவினருக்குமிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டுமென இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது.

"மனிதர்களே! உங்களை நாம் ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்.." (49:13)

மேலும், இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிமல்லாதோரின் உரிமைகள் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. முஹம்மத் நபியவர்கள் முழு மனித சமூதாயத்திற்கும் அருளாக வந்தவர்கள் என்ற வகையில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளையோ பாகுபாடுகளையோ பாராட்டாது எல்லோருக்கும் சம நீதியை வழங்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார்கள். இதற்கு சான்றாக பின்வரும் நபிமொழிகளைக் கொள்ளலாம்.

"எவர் முஸ்லிமல்லாத சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை இம்சிக்கின்றாரோ நான் அவரது எதிரியாவேன். நான் எவரது எதிரியாக இருக்கின்றேனோ மறுமையில் அவருக்கெதிராக வாதிடுபவனாக இருப்பேன்." (தாரீகு பக்தாத் - அல்கதீபுல் பக்தாதி)

"எவர் உடன்படிக்கை செய்து வாழும் ஒரு முஸ்லிமல்லாத ஒருவரைக் கொலை செய்கிறாரோ அவர் சுவனத்தின் வாடையைக்கூட நுகரமாட்டார். அவரைப் பொறுத்தவரையில் சுவனத்தின் வாடை நாற்பது ஆண்டுகள் தொலைவில் இருக்கும்." (புகாரி)

இவ்வாறு முஸ்லிமல்லாதாரின் உரிமையில் கைவைப்பதனை அல்லது அவர்களுக்கு அநீதி இழைப்பதனை ஒருபெரும் குற்றச் செயலாகவும் பெரும் பாவமாகவும் கருதுகின்ற தனித்துவமான மார்க்கமாக இஸ்லாம் விளங்குகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில், குறிப்பாக நபியவர்களின் வாழ்வில் அவர்கள் பிறசமயத்தவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணியும், அவர்களை மதித்தும் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அதற்கான பதிவுகள் பின்வருமாறு :

"நபியவர்கள் தன் சமூகத்தில் வாழ்ந்த பிறசமயத்தவர்களுடன் சுமுகமான உறவுகளை வைத்திருந்தார்கள். ஹுனைன் யுத்தத்தின்போது இஸ்லாத்தை தழுவாத நிலையிலிருந்த ஸப்வான் இப்னு உமையாவின் உதவியை நபியவர்கள் பெற்றார்கள்.

"ஹிஜ்ரத்தின் போது அப்துல்லாஹ் இப்னு உரைக்கித் என்ற முஸ்லிமல்லாத வரையே தனக்கு வழிகாட்டியாக தெரிவு செய்தார்கள்."

“ஒரு யூதரிடம் நபியவர்கள் கடன் பெற்ற வரலாறு மிகவும் பிரபல்ய மானது.”

“முஸ்லிமல்லாத மன்னர்கள் அன்னாருக்கு அனுப்பி வைத்த அன்பளிப்புகளை மனம் உவந்து ஏற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.”

“ஒரு சமயம் ஒரு மரண ஊர்வலத்தைக் கண்ட நபியவர்கள் அதற்காக எழுந்து நின்றார்கள். அது ஒரு யூதனின் மரண ஊர்வலம் என்று அன்னாருக்குச் சொல்லப்பட்டது. அதற்கு அன்னார் ; “அவர் ஒரு மனித ஆன்மா இல்லையா?” என்று பதிலளித்தார்கள்”

இந்த அடிப்படையில் ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிமல்லாதவரை மனிதனாகக் கணித்து அவனுக்குரிய கண்ணியத்தை வழங்க வேண்டும். மாறாக, அவன் வேற்று மதத்தவன் ; அந்நிய சமூகத்தைத் சேர்ந்தவன் என்று கூறி அவனை இழிவுபடுத்தவோ அவன் சார்ந்துள்ள சமயத்தை இழிந்துரைக்கவோ கூடாது. இஸ்லாம் ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மக்களின் உரிமைகளை மதிப்பது போல் அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டை உடையது. பிற சமயங்களை நிந்தனை செய்யும் விடயத்தையிட்டு அல்குர்ஆன் பின்வருமாறு கட்டளையிடுகிறது.

“அல்லாஹ் அல்லாதவற்றை வணங்கிக் கொண்டிருப்போரை நீங்கள் ஏசவேண்டாம். ஏனெனில் அவர்கள் அறிவின்றி விரோதத்தால் அல்லாஹ்வை திட்டுவார்கள்.” (6:108)

இவ்வாறு பல்லின சமூக மக்களுடன் எவ்வாறான உறவைப் பேண வேண்டும் என்பதற்கு அல்குர்ஆனின் பல வசனங்களும், நபிகளாரின் முன்மாதிரியும் நிறைய உண்டு. அவற்றை நாம் எம் வாழ்வில் பின்பற்றி பல்லின சமூக மக்களிடையே சிறப்பான ஒரு முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட உறுதி பூணவேண்டும்.

## நலிவுற்றோருக்கான பாதுகாப்பு

சமூக வாழ்வில் நலிவுற்றோர் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களை பின்வரும் காரணிகள் வகைப்படுத்துகின்றன.

1. பொருளாதாரம்
2. உடற்பலம்
3. அறிவு / திறன்

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஏழைகள், அனாதைகள், விதவைகள் போன்றோர் சமூகத்தில் நலிவுற்றோராக இனங்காணப் பட்டுள்ளனர். இவர்களுக்கு இஸ்லாம் ஸகாத், ஸதகா, ஹதியா, ஹிபத் போன்ற கட்டாயமான, கட்டாயமற்ற தர்மங்கள் மூலம் பாதுகாப்பை வழங்கியிருக்கின்றது.

உடற்பலத்தைப் பொறுத்தவரை "பலவீனமான மு.்.மீனைவிட பலமுள்ள மு.்.மீன் மிகவும் அல்லாஹ்வுக்கு விருப்புக்குரிய அடியான்" என நபி (ஸல்) ஒப்பீடு செய்து குறிப்பிட்டார்கள். உடல் அவயவங்களால் அங்கவீனம் அடைந்தவர்களை சமூகத்தில் ஒதுக்கி வாழாமல் அவர்களையும் அரவணைத்து வாழும் நெறிமுறைகளை இஸ்லாம் அறிமுகம் செய்திருக்கின்றது.

**தொழில் வழிகாட்டல் :**

பருவவயதை அடைந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தமக்கே உரித்தான தொழில் ஒன்றைச் செய்ய வேண்டுமென சமூகம் எதிர்பார்த்திருப்பதைப்போல, இஸ்லாமும் அதனை வரவேற்கின்றது. யாசகம் கேட்டு, உழைக்காமல் சோம்பலுற்றிருப்பதை கண்டிக்கும் இஸ்லாம், ஒரு முஸ்லிம் தனது கைகளால் உழைத்து, ஹலாலான வழியில் தொழில் செய்து பொருளீட்டி, கௌரவமாக வாழ்வதை வலியுறுத்துகிறது. இந்தவகையில் தொழில் வழிகாட்டல் "Carrier Guidance") கல்வித் துறையில் ஒரு பிரசித்தமான துறையாக கற்பிக்கப்பட்டு வருகின்றது.

**சமூக ஒழுக்கங்கள்**

**சகிப்புத் தன்மை/விட்டுக்கொடுத்தல் :**

இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபடுவோர் பல்வேறு சமய, சமூகக் குழுக்களுடன் தொடர்புபடுவதால் சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுத்தல், மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை வெளிப்படுத்த வேண்டிய அவசிய சூழல்கள் ஏற்படலாம். இதனை நபிகளாரின் ஹுதைபிய்யா உடன்பாட்டு சூழ்நிலையில் தெளிவாக எம்மால் அவதானிக்க முடிகின்றது.

ஹுதையிய்யாவின் ஷரத்துக்கள் முழுமையாகக் காபிர்களுக்கு சாதகமாகவும், முஸ்லிம்களுக்கு பாதகமாகவும் அமைந்திருந்தமையை பல ஸஹாபிகள் விமர்சனங்களாக நபிகளாருக்குச் சுட்டிக்காட்டிய போதிலும், சகிப்புத்தன்மை, தன்னடக்கம், விட்டுக்கொடுத்தல் மூலமாக எதிர்காலத்தில் பாரிய வெற்றியை அடையலாம் என தீர்க்கதரிசனமாக நபி (ஸல்) அறிந்திருந்தமையால் இரண்டு வருடங்களுக்கிடையில் எதிர்பாராத மாற்றங்கள் மூலம் தெளிவான வெற்றியை அடைந்ததாக சூறத்துல் பத்ஹ் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. இதனையே பத்ஹுமக்கா – மக்காவெற்றி என இஸ்லாமிய வரலாறு தெரிவிக்கின்றது.

**தவாஸுன் - நடுநிலமை :**

இஸ்லாம் ஒரு சம்பூரண வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில் உலக வாழ்வுக்கும், மறுமை வாழ்வுக்கும் இடையில் அது ஒரு நடுநிலைமை போக்கைக் கையாள்வது அதனது சிறப்பம்சங்களில் ஒன்றாகும். “இவ்வாறே உங்களை நாம் மக்களுக்கு சாட்சி பகர்வதற்காக வேண்டி நடுநிலையான சமூகமாக ஆக்கியிருக்கிறோம்” என்ற குர்ஆனிய பிரகடனமும், “விடயங்களில் சிறந்தது நடுநிலைமையாக செயற்படுவதே” என்ற ஹதீஸின் அறிவுரையும் “தவாஸுன்” என்ற நடு நிலைமைக்கு கட்டியம் கூறிக்கொண்டிருக்கின்றன.

ஒரு முஸ்லிமின் உலகச் செயற்பாடுகள் குர்ஆன், ஸுன்னா வழியில் தூய்மையாக அமைந்தால் அதற்கு ஆத்மீக முத்திரையை இஸ்லாம் வழங்குகின்றது.

“றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிறத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார்” (எங்களது இரட்சகனே ! எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நல்லதையே தருவாயாக மேலும் எங்களை நரக நெருப்பிலிருந்தும் பாதுகாப்பாயாக!) என்ற நபிகளாரின் துஆவும்கூட தவாஸுன் என்ற நடுநிலைமைப் போக்கை தெளிவுபடுத்துகின்றது.

## தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல் :

தலைமைத்துவம் என்பது வற்புறுத்தல் இல்லாத முறைகளினூடாக மக்களைச் செயற்பட ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை ஒரு திட்டமிட்ட திசையில் செலுத்தும் செயன் முறையாகும். இஸ்லாமியத் தலைமைத்துவம் அல்லாஹ்வுக்கும், அவனது றஸுலுக்கும் முற்றிலும் கட்டுப்படுகின்ற ஒரு வகை ஆன்மீகத் தலைமைத்துவ மாகும். இதுபற்றி குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் நிறைய காணப்படுகின்றன.

அதேபோல குலபாஉர் ராஷிதீன்களில் ஒருவரான முதற்கலீபா அபூபகர் (ரழி) பதவியேற்ற போது ஆற்றிய உரையும், அதன் உள்ளடக்கமும் இஸ்லாமிய தலைமைத்துவப் பண்புகளுக்கு முன் உதாரணங்களாகத் திகழுகின்றன.

தலைமைத்துவம் ஆளுமையையும், மஷுறா எனும் கலந்துரையாடலையும், நீதியையும் அடிப்படையில் வேண்டி நிற்கின்றன. மேலும் தலைமைத்துவமும், முகாமைத்துவமும் ஒன்றாக இணைந்து வினைத் திறனையும், விளை திறனையும் உருவாக்கும் போதுதான் சிறந்த நிருவாகம், பரிபாலனம் தோன்ற முடியும் என்பது சமூக ஆய்வாளர்களின் அபிப்பிராயம் ஆகும். இந்த வகையில் ஒரு தலைவரிடம் பின்வரும் குணப்பண்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. பற்றார்வம்
2. நம்பகத் தன்மை
3. தூர நோக்கு
4. ஆழமான அறிவு
5. குறைவற்ற ஒழுக்கம்
6. துரிதமாகத் தீர்மானிக்கும் ஆற்றல்
7. மற்றவர்களை மதித்தல்
8. அறிவுறுத்தும் மனப்பாங்கு
9. முகாமைத்துவ மனப்பாங்கு
10. முதிர்ச்சியும் மனவெழுச்சியும்
11. திட்டமிடல்
12. நியாயமாக நடத்தல்

மேற்படி பண்புகள் பல குர்ஆனிய வசனங்கள் ஊடாகவும், மாநபிகளின் பல மணிமொழிகள் ஊடாகவும், ஸஹாபிகளின் வாழ்க்கைச் சரிதைகள் ஊடாகவும், இமாம்களின் பண்பாடுகள் மூலமாகவும் இஸ்லாமிய உம்மத்திற்கு வரப்பிரசாதங் களாகக் கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**சமூகத் தொடர்பாடல் :**

“மனிதன் ஒரு பேசும் உயிரி” என்றவகையில் மொழியை அவன் தனது மன உணர்வு வெளிப்பாடுகளுக்காக பயன்படுத்துகின்றான். இந்த வெளிப்பாடே தொடர்பாடலாக இன்று புதிய பரிமாணங்களை அடைந்திருக்கின்றது. நேர்காணல், கலந்துரையாடல், செய்தி அனுப்புதல், தபால் மூலத் தொடர்பு, தொலைபேசித் தொடர்பு, வானொலித் தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு, இணையத்தளத் தொடர்பு என தொடர்பாடலின் பல்கூறுகள் நவீன காலத்தில் நீண்டுகொண்டே செல்கிறது.

“நீங்கள் கூறுவதை தெளிவாகக் கூறுங்கள்”, “நல்ல வார்த்தை ஒரு சதக்காவாகும்”, “அறிவிலிகளுடன் தர்க்கிக்க வேண்டி ஏற்பட்டால் நீங்கள் ஸலாம் சொல்லிச் சென்றுவிடுங்கள்” போன்ற குர்ஆனிய வசனங்கள், தொடர்பாடலில் ஒரு முஸ்லிம் பேண வேண்டிய நியதி, ஒழுக்கம், வரையறை என்பவற்றை எமக்கு சமூகத் தொடர்பாடலாகக் கற்றுத்தருகின்றது.

அதேபோன்று நபி (ஸல்) அவர்களுடைய பல்வேறு நபி மொழிகள் சமூகத் தொடர்பாடலின் அத்திவாரங்களை இட்டிருக்கின்றன. அதற்கான சில உதாரண ஹதீஸ்கள் பின்வருமாறு,

1. "யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் நல்லதையே பேசட்டும். அல்லது வாய்மூடி மௌனமாக இருக்கட்டும்" (புஹாரி, முஸ்லிம்)

2. “கோள்சொல்லித் திரிபவன் சொர்க்கம் செல்ல மாட்டான்" (முஸ்லிம்)

3. ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ‘முப்லிஸ்’ என்றால் யார்? என்று ஸஹாபாக்களை வினவியபோது, “அவர்களை அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கு அறிவார்கள்” என்று கூற நபிகளார் பின்வருமாறு விபரித்தார்கள். "உலகவாழ்வில் நிறைய நன்மைகளைச் செய்த ஒரு நல்ல மனிதனாகத் தென்பட்டவர், மறுமையில் அல்லாஹ்வின் சமூகத்தில் சுவனம் செல்லத் தயாராக இருக்கும்போது சில மனிதர்கள் இவனைப்பற்றி முறையீடு செய்வார்கள். யாஅல்லாஹ்! இவன் தனது நாவால் எங்களை ஏசினான்; தூற்றினான்; அவதூறு கூறினான்" என நிறையக் குற்றச்

சாட்டுக்கள் அவன்மீது சுமத்தப்படும். அல்லாஹ்வின் முன்னிலையில் அவை நிரூபணமாகும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரமாக இவனது நன்மைகள் பிடுங்கி எடுக்கப்பட்டு அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இதனால் அவன் வங்குரோத்து நிலையை அடைவான். சுவனத்திற்குச் செல்ல வேண்டிய இவன் மனித உரிமைகளை மீறியதன் காரணமாக நரகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். இவன்தான் முப்லிஸ் என்றார்கள். (ஆதாரம் : முஸ்லிம்)

## சமூக உறவை வலுப்படுத்தக் கூடியனவும், சீர்குலைப்பனவும்

ஒரு முஸ்லிம் தவிர்க்க முடியாத சூழலில் இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறையில் இல்லாத நாடொன்றில் வாழ நேரிடலாம். தொழிலுக்காக, கல்விக்காக அல்லது வேறு வரலாற்றுக் காரணங்களால் இந்நிலை உருவாகலாம். எனினும் முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் பிற சமூகங்களுக்கு தமது சொல்லாலும். செயலாலும் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். முஸ்லிம்கள் வேறுபட்ட ஒரு கொள்கையின் பிரதிநிதிகள் என்பதை முஸ்லிம் அல்லாதவர்கள் புரிந்த கொள்ளும் வகையில் முஸ்லிம்களின் முன்மாதிரிச் செயற்பாடுகள் அமைய வேண்டும். இந்த வகையிலேயே முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகள் தாருல் குப்ர், தாருல் ஹர்ப் எனக் கருதப்பட்ட யுகம் நிறைவடைந்து தற்போது அவை தாருஷ் ஷாஹாதா, தாருல் த.்.வா என அழைக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் இருந்தே இலங்கை முஸ்லிம்களின் வாழ்வியலையும், தேசிய வாழ்வில் அவர்களின் பங்கேற்பையும் நோக்க வேண்டும். “கரைந்து போகாமல் கலந்து வாழல், மூடுண்டு வாழாமல் திறந்த நிலையில் தனித்துவம் பேணல்” எனும் அரிய வாழ்வியல் சமன்பாட்டை எம்மைப் போன்ற சிறுபான்மைச் சமூகங்கள் கைக்கொள்ள வேண்டும் என நவீன இஸ்லாமிய அறிஞர்கள் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமூகம் ஒரு திறந்த சமூகம். அடுத்த சமூகங்களுக்காகவே அது உருவாக்கப்பட்டது. இன்னொரு வகையில் சொன்னால் சர்வதேச அமைதி, நலன்கள், பாதுகாப்பு என்பவற்றை வளர்க்கவும், பாதுகாக்கவுமே அது உருவானது. தனது நலன்களை மட்டும் கவனத்திற்கொண்டு, உலக செல்வத்தில் தனது பங்கை மட்டும் குறியாகக் கொண்டு, அதற்குப் போராடி உழைப்பது அல்ல அதன் நோக்கம். உலகின் மீது ஆதிக்கம் செலுத்தி சுரண்டி தனது சமூகத்தை கொழுத்த சமூகமாக்கி அடுத்த சமூகங்களின் வறுமையின் மீது தன் நலன்களை காத்து வாழ்வது அந்த சமூகத்தின் போக்கல்ல. இந்தப் பின்னணியில் எல்லா இனங்களோடும் நாகரீகங்களோடும், அவன் உறவாடப் புரிந்திருப்பான். அவற்றோடு பேச அவனுக்குத் தெரியும். ஒரு போதும் அடுத்த நாகரிகங்கள், கலாசாரங்கள்,

சிந்தனைகளுக்கு முன்னால் தன்னை அவன் மூடிக்கொள்ளமாட்டான். ஏனெனில் நபிமார்களும், இறைதூதரும் வராத எந்த சமூகமும் கிடையாது என்பது அவனது நம்பிக்கை. எனவே எல்லா சமூகங்களிலும் இறைதூதின் அடையாளங்களைக் காண முடியும். அந்த ஒற்றுமைகளைக் கண்டு உறவாடவே அவன் விரும்புவான். வேற்றுமைகளைக் கண்டு பிளவுபட ஒரு போதும் முயற்சிக்கமாட்டான்.

“நீங்கள் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த சமூகத்தினர்” (3 : 110) இங்கு பாவிக்கப்பட்டுள்ள “கைரு உம்மா” என்ற பிரயோகத்தை மிகச் சிறந்த சமூகம் எனப் பரவலாக மொழிபெயர்த்தாலும் அச்சொற்பிரயோகம் காட்டும் கருத்தொன்றை நாம் மறந்துவிடக்கூடாது. “கைரு” என்ற சொல்லுக்கு அறபு மொழியில் வளம், நலன், பயன். நன்மை, செல்வம் என்ற பல்வேறு கருத்துக்கள் உள்ளன. எனவே, மனித சமூகத்திற்குப் பயன்மிக்க நன்மைகள், நலன்கள் வழங்கக்கூடிய சமூகம் என்பதுவே இவ்வசனத்தின் ஆழமான கருத்தாகும்.

“முன்னைய சமூகங்கள் மனிதர்களுக்கு பாதுகாப்பான சமூகங்களாக இருந்ததில்லை. ஆனால் நீங்கள் அடுத்த சமூகங்கள் அனைத்திற்கும் பாதுகாப்பான சமூகமாக உள்ளீர்கள்.” என தாபிஈன்களின் முபஸ்ஸிரான இக்ரிமா (ரஹ்) விரிவான விளக்கவுரை வழங்கியுள்ளார்.

தேசிய இனங்களோடு இரண்டறக் கலந்து இலங்கை முழுவதும் வாழும் முஸ்லிம் சமூகம் தனது இஸ்லாமிய தனித்துவ அடையாளத்தைப் பேணிக் கொண்டு சமய, சமூக நல்லிணக்க சிந்தனையை அடித்தளமாக முன்வைத்து வாழ்ந்து வர வேண்டும்.

சமூகத்தின் அங்கத்தவர்களுக்கிடையே நிலவும் சுமுகமான உறவைச் சீர்குலைப்பனவுமாக பல அம்சங்கள் காணப்படுகின்றன. அவை

01. பொறாமை
02. தப்பெண்ணம் கொள்ளல்
03. கோள் சொல்லல்
04. புறம் பேசுதல்.
05. சகிப்புத்தன்மை. விட்டுக்கொடுப்பின்மை
06. வதந்திகளைப் பரப்புதல்

இவை போன்ற பல்வேறு விடயங்கள் சமூக உறவைச் சீர்குலைப்பனவாக உள்ளன. பல சமூகங்கள் ஒரு நாட்டில் வாழும் போது அந்தச்சமூகங்களுக் கிடையே நிலவும் சுமுகமான உறவைச் சீர்குலைப்பனவாக விசேடமான சில விடயங்களும் தோன்ற முடியும். உதாரணத்திற்கு சில விடயங்களைச் சுட்டிக்காட்டலாம்.

01. ஒரு சமூகத்தின் வரலாற்றையும் பின்புலத்தையும் அந்தச் சமூகம் பின்பற்றக்கூடிய சமயத்தின் பெருமைகளையும் மற்ற சமூகம் அறியாதிருத்தல்.

02. ஒரு சமூகம் மற்ற சமூகத்தின் மீது தப்பெண்ணமும் சந்தேகமும் கொள்ளல்.

03. ஒரு சமூகத்தின் சமய, பொருளாதார, கலாசார வளர்ச்சியைக் கண்டு காழ்ப்புணர்வு கொள்ளல்.

04. பல்லின சமுதாய அமைப்பைக் கொண்ட நாட்டில் சமூகங்களின் சீரான உறவின் காரணமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அபிவிருத்தியின் மீது காழ்புணர்ச்சி கொண்ட வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சி.

05. ஒரு சமூகத்தின் மொழியை அடுத்த சமூகம் விளங்கிக் கொள்ளாமை.

மேலுள்ளவை போன்ற காரணங்களினால் பல்லினங்களைக்கொண்ட நாடொன்றில் சமூகங்களுக்கிடையே நிகழும் சுமுகமான உறவு சீர்குலைய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்த நிலையில் சமூகங்களுக்கிடையே உறவை வலுப்படுத்தி சீரமைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

(1) சமூக உறவைச் சீர்குலைக்கின்ற பல்வேறு குற்றச் செயல்களையும் தடுத்தல்.

(2) சமூக உறவு சீர்குலைவதனால் ஏற்படக்கூடிய பல்வேறு பாதக விளைவுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(3) சமூக உறவைச் சீர்குலைக்கக்கூடிய விடயங்களான பொறாமை, குரோதம், காழ்ப்புணர்வு, வஞ்சகம், சூழ்ச்சி முதலிய கொடிய பாவங்களைக் கண்டித்து சன்மார்க்கம் கூறும் போதனைகளைப் பரப்புதல்.

(4) பல சமூகங்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு சமூகமும் எவ்வாறு தமது தனித்துவமான அம்சங்களை பாதுகாத்துக் கொண்டு பிற சமூக மக்களுடன் இணக்கத்துடன் வாழலாம் என்பதனை மக்களுக்குப் போதிக்கும் வகையில் செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தல்.

(5) ஒரு சமயத்தை, கலாசாரத்தை பின்பற்றுவோர் பிற சமயங்களையும் அதில் கூறப்பட்டுள்ள நல்ல விடயங்களையும் பற்றிய அறிவினைப் பெறல்.

(6) மதவேறுபாடுகள், இன வேறுபாடுகளுக்கப்பால் பொதுவான விடயங்களில், உதாரணமாக, நாட்டு நலன் பேணல், தீமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தல், அநியாயத்திற்கு எதிராக குரல் கொடுத்தல், இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தல் முதலிய விடயங்களில் மனிதாபிமான ரீதியில் எல்லோரும் பங்கு பற்றுதல்.

(7) மொழிப்புரிந்துணர்வின்மையை நீக்குவதற்கு ஒரு சமூகத்தின் மொழியை பிற மொழி பேசும் சமூகங்கள் கற்பதற்கு முன்வரல் வேண்டும். இதற்கான திட்டங்கள் தனியார் மட்டத்திலும் அரச மட்டத்திலும் நடைமுறைப் படுத்தல்.

மேற்குறித்த விடயங்களை கவனத்தில் எடுத்து அவற்றை நடைமுறைப் படுத்தும் போது சமூக உறவு வலுவடைவதுடன் அதனை சீர்குலைக்கும் அம்சங்களும் குறைந்து செல்லும்.

## ஒழுக்கங்கங்கள்

### இறைவனுடனான உறவு தொடர்பான ஒழுக்கங்கள்

இஸ்லாம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பை ஒழுங்கமைப் பதிலும், அதனை சரியான முறையில் கட்டியெழுப்புவதிலும் மிகுந்த கவனத்தை செலுத்துகின்றது. இஸ்லாமிய சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இறைவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவனாக மாறுவதன் மூலம் அந்த சமூகமானது பாவங்களை விட்டும் தூரமானதாக, ஆன்மீகப் பண்புகள் நிறைந்த தூய சமூகமாகத் திகழும் என்பது இஸ்லாத்தின் கொள்கையாகும். அந்த வகையில் அல்லாஹ்வுடன் நெருங்கிய தொடர்பை ஒரு மனிதன் கொண்டவனாக மாறுவதற்கு சில முக்கிய பண்புகளை இஸ்லாம் கோடிட்டுக் காட்டியுள்ளது. அவற்றை இங்கு நாம் சற்று விரிவாக நோக்குவோம் :

### இக்லாஸ்

“இக்லாஸ்” என்பதைத் தூய எண்ணம் என தமிழில் மொழி பெயர்க்கலாம். ஒரு முஸ்லிம் தனது எண்ணம் மற்றும் செயற்பாடுகள் அனைத்தையுமே அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே எதிர்பார்த்து அமைத்துக் கொள்வதே “இக்லாஸ்” எனப்படுகிறது.

இந்த வகையில் “இக்லாஸ்” இரண்டு வகைகளாகப் பிரிகின்றது எனலாம்:

1. எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருத்தல்.
2. செயற்பாடுகளை தூய்மைமிக்கதாக ஆக்கிக் கொள்ளல்.

எண்ணம், செயல் ஆகிய இரு பகுதிகளையும் ‘அல்லாஹ்விடம் நற்கூலியை எதிர்பார்த்தல்’ என்ற அடிப்படையில் அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்றே இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இவ்வாறு அமைகின்ற போது மாத்திரமே எந்தவொரு செயற்பாட்டையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வதாகவும் அவற்றிற்கு நற்கூலி வழங்குவதாகவும் அல்குர்ஆனும் ஹதீஸ்களும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

அல்குர்ஆனில், இக்லாஸ் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

**“அவர்கள் தூய்மையான எண்ணத்தோடு, அல்லாஹ்விற்கு மாத்திரம் வழிப்பட்டு இஸ்லாத்தின் பக்கமே சார்ந்தவர்களாகவும் நின்று, தொழுகையையும் நிலைநாட்டி ஸகாத்தையும் கொடுத்து வருமாறு தான் ஏவப்பட்டார்கள்” (98 : 5)**

நபி (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸ் மூலம் “இக்லாஸ்” பற்றிக் கூறி அதன் அடிப்படை விளக்கத்தை வரைவிலக்கணப்படுத்தினார்கள்:

**“நிச்சயமாக செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகின்றன. நிச்சயமாக ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எண்ணியதே கிடைக்கும்.” (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

இவ்வாறு கூறிய நபி (ஸல்) அவர்கள், இஸ்லாமிய வரலாற்றில் நடந்த மிகப் பெரும் தியாகச் சம்பவமான ஹிஜ்ரத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அல்லாஹுத்தஆலாவின் திருப்பொருத்தத்தை மாத்திரமே நாடி இஹ்லாஸுடன் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையே ஹிஜ்ரத் என்பது. உலகிலேயே மிகவும் புனித பிரதேசமாகிய க.்.பாவையும் அதனைச் சூழவுமுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்த நபியவர்களும் நபித் தோழர்களும் தமது பிறந்தகத்தைத் துறந்து மதீனாவை நோக்கிச் சென்ற நிகழ்வு அது. இதில் கலந்து கொண்ட ஒரு நபித்தோழர் பெண்ணொருவரைத் திருமணம் முடிக்கும் நோக்கில் ஹிஜ்ரத் செய்தார். இதை மேற்குறிப்பிட்ட ஹதீஸின் பிற்பகுதியில் நபியவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுக் காட்டினார்கள்:

**"எவரது ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் என அமைந்ததோ, அவரது ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் என அமைந்துவிட்டது. எவரது ஹிஜ்ரத் உலக நோக்கமொன்றை அடைந்து கொள்வதற்காக அல்லது பெண்ணொருவரை**

**மணமுடிப்பதற்காக என்ற நோக்கில் அமைந்ததோ அவரது ஹிஜ்ரத் அவரது அந்நோக்கத்தை அடைவதற்காக மாத்திரமே மேற்கொள்ளப் பட்டது."**

இந்த ஹதீஸ் மூலம் அபரிமிதமான நன்மைகளை அள்ளித் தரும் ஹிஜ்ரத் போன்ற பெரும் தியாக நிகழ்வுகள், இபாதத்துக்கள் கூட அல்லாஹ்வின் திருப்தியைத் தவிர்த்து வேறு உலகியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் போது அவை வெறும் விழலுக்கு இறைத்த நீரைப் போல எவ்விதப் பயன்பாடும் அற்றவைகளாக மாறிவிடும் என நபியவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அல்லாஹ்வுக்காக செய்யப்பட வேண்டிய நற்கருமங்கள் எதிலும் இக்லாசுக்கு மாற்றமான எண்ணங்கள் எதுவுமே கலந்துவிடக் கூடாது என்பதில் இஸ்லாம் மிகுந்த அக்கறை செலுத்துகின்றது.

**நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் "அல்லாஹ்வின் தூதரவர்களே! நான் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஒரு செயலை செய்கின்றேன். அதனை மக்களும் பார்க்க வேண்டும் எனவும் விரும்புகின்றேன். இது பற்றித் தங்களின் கருத்தென்ன?" என வினவினார். அப்போது நபியவர்கள் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். அவ்வேளை, "ஆகவே, யார் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகின்றாரோ அவர் நல் அமல்களைச் செய்து வரட்டும். அவர் தன் இறைவனை இபாதத் செய்வதில் யாரையும் அவனுக்கு இணையாக்க வேண்டாம் (18 : 110) என்ற இறை வசனம் இறங்கியது.** (ஆதாரம்: இப்னு அபீ ஹாதிம்.)

அல்லாஹ்வுக்காக இக்லாஸுடன் நிறைவேற்றப்படவேண்டிய வணக்க வழிபாடுகள், நற்கருமங்கள் எதுவானாலும் பணம், புகழ், அந்தஸ்து, மரியாதை முதலிய உலகியல் நோக்கங்களை எதிர்பார்த்து நிறைவேற்றப்படும் போது அது ஷிர்க்காக- இணைவைப்பாக - அமைந்து விடும் அபாயம் ஏற்படுகின்றது என்பதை மேலுள்ள ஹதீஸ் மற்றும் குர்ஆன் வசனம் என்பன தெளிவாகக் காட்டுகின்றன.

"இக்லாஸ்" என்ற பண்புக்கு முரணான பண்பு முகஸ்துதியாகும். அல்லாஹுத்தஆலாவின் திருப் பொருத்தத்தை நாடி நிறைவேற்ற வேண்டிய கருமங்களை மனிதன் போன்ற அவனது படைப்பினங்களின் மூலம் கிட்டும்

அற்பப் பலாபலன்களுக்காக நிறை வேற்றுவதே முகஸ்துதியாகும். இது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகும்.

> **“உங்கள் மீது அதிகம் நான் பயப்படும் விடயம் சிறிய ஷிர்க் ஆகும்” என நபியவர்கள் கூறிய போது சஹாபாக்கள் “சிறிய ஷிர்க்” என்பது எதனைக் குறிக்கும்? என வினவினர். அதற்கு நபியவர்கள் “முகஸ்துதி” எனப் பதிலளித்து விட்டு தொடர்ந்தும் கூறினார்கள்: மறுமை நாளில் மனிதர்களின் செயல்களுக்கேற்ப கூலி வழங்கும் போது அல்லாஹ் இத்தகையோரைப் பார்த்துச் சொல்வான் : “நீங்கள் உலகில் யாருக்கு காண்பிப்பதற்காக செயற்பட்டீர்களோ அவர்களிடம் சென்று உங்கள் கூலியைப் பெற முடியுமா எனப் பாருங்கள்” என்று கூறி விடுவான்.** (முஸ்னத் அஹ்மத்)

இக்லாஸுடன் செய்யப்படும் ஒரு சிறிய செயலும் அல்லாஹ்தஆலா விடத்தில் மிகப் பெரும் நற்கூலிக்குரியதாக இருக்கும் அதேவேளை, இக்லாசுடன் செய்யப்படாத எவ்வளவு பெரிய நற்செயலும் சிறிதளவேனும் பயன் இன்றி அல்லாஹ்வினால் தூக்கி வீசப்படும் என்ற கருத்தையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அல்குர்ஆனின் அத்தியாயமான சூறத்துத் தௌபாவின் 107 தொடக்கம் 110 வரையான வசனங்களும் அவ்வசனங்கள் இறங்குவதற்குப் பின்னணியாக அமைந்த சம்பவமும் இதற்கான சிறப்பான ஆதாரங்களாகும்.

இறையச்சம், இக்லாஸ் போன்ற தூய்மையான பண்புகளின் அடிப்படையில் குபா நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மஸ்ஜிதுக்குப் போட்டியாக முனாபிக்குகளால் அங்கு ஒரு மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டது. இது போட்டி, பொறாமை, குரோதம், முதலிய மோசமான குணங்களின் அடிப்படையிலும் பிளவுகளை உண்டு பண்ணும் நோக்கத்திலுமே நிர்மாணிக்கப்பட்டது. இப்பள்ளிவாசலில் நபியவர்களைத் தொழ வைப்பதற்கும் முனாபிக்குகளால் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்திலேயே மேற்குறிப்பிட்ட திரு வசனங்களை அல்லாஹ் இறக்கிவைத்து நபியவர்களுக்கு அல்லாஹ் உண்மை நிலையைத் தெளிவாக்கினான். அவற்றுள் ஒரு வசனத்தில் அல்லாஹுத்தஆலா பின்வருமாறு வினவுகின்றான்:

> **“அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி பரிசுத்தமான எண்ணத்தின் மீது மஸ்ஜிதின் அத்திவாரத்தை அமைத்தவன் மேலா? அல்லது சரிந்து விழக் கூடியவாறு பாதாளத்தின் அருகில் - அதுவும் சரிந்து அவனுடன் நரக நெருப்பில் விழக் கூடியவாறு மஸ்ஜிதின் அத்திவாரத்தை அமைத்தவன் மேலா? இத்தகைய அநியாயக்கார மக்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துவதில்லை.”** (9:109)

இதே கருத்தை பின்வரும் நபிமொழியும் சுட்டிக்காட்டுகின்றது:

**"இறுதி நாளின் போது இவ்வுலகில் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும். அவற்றிலிருந்து அல்லாஹ்வுக்காகச் செய்யப்பட்டவை அனைத்தும் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்ட பின்பு இதர நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் நரகில் தூக்கி வீசப்படும்"** (ஆதாரம்- பைஹக்கி)

“அல்லாஹ்வுக்காக” என்ற மிகத் தூய எண்ணத்துடன் ஒரு நற் செயலைச் செய்ய உறுதியாக எண்ணிய பின் அந்நற்காரியத்தைச் செய்வதற்கு ஏதாவது ஒரு காரணத்தால் முடியாது போய்விட்டாலும், அல்லாஹ் அச்செயலுக்குரிய பூரணமான நற்கூலியை வழங்காது இருப்பதில்லை என்பதையும் ஹதீஸ்கள் சுட்டிக்காட்டுகின்றன. உதாரண மாகப் பின்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம்:

**அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் தபூக் யுத்தத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தோம். அவ்வேளை நபியவர்கள் கூறினார்கள்: “எங்களுக்குப் பின்னால் மதீனாவிலே சிலர் இருக்கின்றார்கள். நாங்கள் எந்தவொரு பள்ளத்தாக்கையோ அல்லது கண வாயையோ கடந்து சென்றாலும் அவர்களும் எங்களுடனேயே இருக்கின்றார்கள். அவர்களை (எங்களுடன் வராமல்) தகுந்த காரணம்தான் தடுத்துவிட்டது”** (ஆதாரம் - புகாரி)

தபூக் யுத்தத்தில் கலந்து கொள்ள உளப்பூர்வமாக விரும்பியிருந்தும் சில சஹாபாக்களை அதில் கலந்து கொள்ள முடியாமல் சில காரணிகள் தடுத்து விட்டிருந்தன. இந்த சஹாபாக்களுக்கு யுத்தத்தில் கலந்து கொண்ட சஹாபாக்களுக்குக் கிடைத்த அதேயளவு நற்கூலி எவ்விதக் குறைவுமின்றிக் கிடைக்கும், அதற்குக் காரணம் அவர்களது தூய்மையான எண்ணமே என்பது மேற்கூறப்பட்ட ஹதீஸிலிருந்து தெளிவாகிறது.

அல்லாஹுத்தஆலா வெளியில் தெரியும் வெறும் பகட்டுக்களையோ, ஆடம்பரங்களையோ; மற்றும் பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்களையோ திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. அவனுக்கு

எமது உள்ளங்களிலேயுள்ள எண்ணங்கள் தூய்மையானவையா என்பதே முக்கியமாகும்.

நபியவர்கள் கூறினார்கள்:

> **"நிச்சயமாக அல்லாஹ் உங்கள் உடல்களையோ உங்கள் உருவங்களையோ நோக்குவதில்லை. மாறாக அவன் உங்கள் உள்ளங்களையும் செயல்களையுமே நோக்குகின்றான்".** (ஆதாரம் : முஸ்லிம்)

நாம் கற்கும் கல்வி எதுவானாலும் அது உலகியல் நோக்கங்களுக்காக அமையும் போது அக் கல்வியால் மறுமையில் எவ்விதப் பயனும் எமக்குக் கிட்டப்போவதில்லை என்பதையும் இஸ்லாம் திட்ட வட்டமாகக் கூறிவிட்டது.

> **"அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத்தரக் கூடிய கல்வியை ஒருவர்; இவ்வுலகில் பெறப்படும் வெற்றியை நோக்காகக் கொண்டு கற்கின்றார் எனில் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படும் அந்நாளில் (மறுமை நாளில்) அவர் சுவனத்தின் வாசனையைக் கூட நுகரமாட்டார்"** (ஆதாரம் : அபூதாவுத்)

இந்த வகையில் நோக்கும் போது நாம் மு.ஃமின்கள் என்ற வகையில் எமது செயற்பாடுகள் அனைத்தையும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியே அமைத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வுலகில் சாதனைகள் நிலைநாட்டிய சிலரைப் பற்றி நபியவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்களுள் ஒருவர், அல்லாஹ்வின் பாதையில் போராடி மரணித்த ஷஹீத். மற்றையவர் அறிவைக் கற்று, அதனைக் கற்றுக் கொடுத்து, குர்ஆனையும் அழகாக ஓதியவர். மூன்றாமவர் ஏழைகளுக்கு வாரி வழங்கிய செல்வந்தர். இம் மூவரையும் முதன் முதலில் அல்லாஹுத்தஆலா மறுமை நாளில் அழைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளைச் சுட்டிக்காட்டுவான். அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். பின்னர் ஒவ்வொருவரிடமும் அவர்கள் தமது நி.ஃமத்துக்களைக் கொண்டு உலகில் என்ன செய்தார்கள் என வினவுவான். அதற்கு ஒவ்வொருவரும் உலகில் செய்த அவர்களது நல்ல செயற்பாடுகளை எல்லாம் விபரிப்பார்கள். இவற்றைக் கேட்டபின்பு அல்லாஹுத்தஆலா; “அம் மூவரினதும் செயற்பாடுகள் யாவும் உலகில் தாங்கள் புகழப்பட வேண்டும் என்பதற்காகவே அமைந்தன. அல்லாஹ்வின் திருப்தியை நோக்காகக் கொண்டு, தூய சிந்தனையுடன்-இக்லாஸுடன்- அமைய வில்லை; அவர்கள் நாடிய புகழ் உலகில் கிடைத்துவிட்டது” எனக் கூறி அவர்களை நரகில் முகங்குப்புற தூக்கி வீசுமாறு அல்லாஹுத் தஆலா கட்டளையிடுவான் என நபியவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : முஸ்லிம்)

எனவே, எமது சகல செயற்பாடுகளின் போதும் தூய்மையான எண்ணத்தை - இக்லாஸ் என்ற பண்பை நாம் கடைப்பிடிக்கத் தவறக் கூடாது.

## தக்வா

தக்வா என்பது **'இறையச்சம்'** எனப் பொதுவாக குறிப்பிடப்படுகின்றது. எனினும் அது விரிவான உட்கருத்தை உள்ளடக்கிய பதமாகும்.

'தக்வா' என்ற சொல் 'வகா' எனும் சொல்லின் வினையடிச் சொல்லாகும். இவ் வினைச் சொல்லிற்கு 'பாதுகாத்துக் கொண்டான்' 'விடுவித்துக் கொண்டான்' முதலிய கருத்துக்கள் உள்ளன. இந்த அடிப்படையில் 'தக்வா' என்பதை வரைவிலக்கணப்படுத்தினால் பின்வருமாறு அதனைக் குறிப்பிடலாம்:

"அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் ஏவல்களை ஏற்றுச் செயற்படுவதுடன், விலக்கல்களை முற்றாகத் தவிர்த்தும் வாழ்வதே தக்வா ஆகும்"

இதன்படி இஸ்லாம் வலியுறுத்தியுள்ள கடமையான வணக்க வழிபாடுகளைக் கைக் கொள்ளல், முடியுமான அளவு மேலதிக வணக்க வழிபாடுகளில் ஈடுபடல், இஸ்லாம் கூறும் அழகிய நற்பண்புகளை அணிகலன்களாகக் கொள்ளல், ஷிர்க் உட்பட சிறிய, பெரிய பாவங்கள் அனைத்தையும் முற்றாகத் தவிர்ந்து கொள்ளல் முதலிய அனைத்தும் தக்வாவைச் சார்ந்த, அதில் உள்ளடங்கக் கூடிய விடயங்களாகவே உள்ளன.

உமர் (ரழி) அவர்கள் உபை பின் க.்.பு (ரழி) அவர்களிடம் தக்வாவைப் பற்றி வினவினார்கள். அதற்கு உபை பின் க.்.பு (ரழி) அவர்கள் உமர் (ரழி) அவர்களைப் பார்த்து, 'நீங்கள் முட்கள் நிரம்பிய பாதையில் நடந்து சென்றிருக்கின்றீர்களா?' என வினவினார்கள். உமர் (ரழி) அவர்கள் அதற்கு 'ஆம்' என்றார்கள் 'அவ் வேளை நீங்கள் என்ன செய்வீர்கள்? என உபை பின் க.்.பு (ரழி) அவர்கள் மீண்டும் வினவ, உமர் (ரழி) அவர்களோ "என் ஆடையை கவனமாக பிடித்துக் கொண்டு மிகவும் கவனமாகச் செல்வேன்" எனப் பதிலளித்தார்கள். இதனைக் கேட்ட க.்.பு (ரழி) அவர்கள் அது போன்றதே தக்வா ஆகும் என்றார்கள். (தப்ஸீர் இப்னு கஸீர்)

இவ்வுலகில் வாழும் போது தக்வாவுடன் வாழ்வதற்கு மிகுந்த பிரயத்தனம் - முயற்சி செய்ய வேண்டும் என்பதையே மேலுள்ள சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

அல்குர்ஆனில் ஆரம்பத்திலேயே அல்லாஹுத்தஆலா தக்வா எனும் இறையச்சம் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, அவ் இறையச்சம் உள்ளவர்களுக்குத்தான்

புனிதக் குர்ஆன் நேர்வழியைக் காட்டும் என்று கூறி அவர்களது நடவடிக்கைகள்-பண்புகள் பற்றியும் கோடிட்டுக் காட்டுகின்றான்:

**"இது வேத நூல் அதில் சந்தேகமேயில்லை. அது தக்வா உள்ளோருக்கு நேர்வழியைக் காட்டும். அவர்கள் எத்தகையோரெனில் மறைவான வற்றை நம்பிக்கை கொண்டு தொழுகையையும் நிலைநாட்டி நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள்"** (2 : 2, 3)

தக்வா உள்ளவர்கள்தான் நேர்வழியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் அத்தகைய தக்வா உள்ளவர்கள் தங்களது ஆன்மிக வாழ்விலும் சமூக வாழ்விலும் சிறந்தோராக இறை வழிகாட்டல்களை ஏற்றுப் பின்பற்றுவோராக இருப்பர் என்பதையும் மேலுள்ள குர்ஆன் வசனம் தெளிவாகக் காட்டுகின்றது. இதனைத் தொடர்ந்து வரும் வசனங்களில் நபி (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட குர்ஆனையும் முன்னைய வேதங்களையும் மற்றும் மறுமை நாளையும் அவர்கள் உறுதியாக நம்புவர் என்பதையும் அல்லாஹ் கூறிக் காட்டுகின்றான்.

எனவே, தக்வா உள்ளவர்கள் உறுதியான ஈமான் உடையவர்களாகவும், வணக்க வழிபாடுகளை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் திகழ்ந்து அல்லாஹ் வுக்கு தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் செய்வர். அதே போன்று ஸகாத், தானதர்மம், முதலிய சமூகக் கடமைகளையும் செய்து மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்யக் கூடியவர்களாகவும் இருப்பர். இதனை பின்வரும் குர்ஆன் வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன:

**"அவர்கள் (முத்தகீன்கள்) இரவில் சிறிது நேரமே உறங்குவர்; பின்னிரவு நேரங்களில் பாவமன்னிப்புக் கோருவர்; மேலும் அவர்களது செல்வங் களில் கேட்டுவருவோருக்கும் ஏழைகளுக்கும் ஒரு பங்கும் இருக்கும்."** (51 : 17 - 19)

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளான தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் முதலான இபாதத்துக்களும் இதர சுன்னத்தான வணக்க வழிபாடுகளும் மனித உள்ளத்தில் தக்வா உணர்வை நிலை பெற்றிடச் செய்வதற்காகவே விதியாக்கப்பட்டுள்ளன.

**"நீங்கள் இறையச்சம் (தக்வா) உள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காகவே உங்கள் முன்பிருந்தோர் மீது கடமையாக்கப்பட்டது போல உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது"** (2 : 183) என்ற குர்ஆன் வசனம் இதற்கான ஓர் உதாரணமாகும்.

வணக்க வழிபாடுகள் மூலம் ஒரு மனிதனின் உள்ளத்தில் நிலைபெறும் இறையுணர்வு, தக்வா எனும் உள்ளச்சம் என்பன காரணமாக அவன் தனது இரட்சகனை நெருங்கிச் செல்லும் வாய்ப்புக் கிட்டுகின்றது. இதனால் இரகசியமாகவோ, பரகசியமாகவோ பாவங்கள், குற்றங்கள் முதலியவற்றில் ஈடுபடுவதை விட்டும் ஒரு மு.்.மினை தக்வா தடுத்துவிடுகின்றது. ஒவ்வொரு மு.்.மினும் இறைவனுக்கு மிக நெருக்கமானவனாக மாறும் வாய்ப்பு இதன் மூலம் கிட்டுகின்றது.

இவ் உலகம் பிரச்சினைகள் நிறைந்தது என்பதை அனைவருமே அறிவர். இங்கு பிரச்சினைகளை எதிர்கொள்ளாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். அவ்வாறு, வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சிறியது, பெரியது எதுவாயினும் அவற்றிலிருந்து மிகவும் இலகுவாக விடுபடும் சுலபமான வழிவகைகளை தக்வா உள்ளோருக்கு அல்லாஹ் காட்டுவதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது:

> **“யார் அல்லாஹ்வைப் பயந்து கொள்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் பிரச்சினைகளிலிருந்து விடுபடும் வழியைக் காட்டுகின்றான். மேலும் அவன் நினைத்துக் கூடப்பார்த்திராத விதத்தில் வாழ்க்கை வசதிகளை அளிக்கின்றான்”** (65 : 2, 3)

இனம், நிறம், குலம், நாடு முதலிய அளவு கோல்களின் அடிப்படையிலன்றி; தக்வா எனும் அளவுகோலின் அடிப்படையிலேயே அல்லாஹ்விடத்தில் ஒரு மனிதனின் கண்ணியம் அளவிடப்படுவதாக அல்குர்ஆனும் அல் ஹதீஸும் சுட்டிக்காட்டுகின்றன.

> **“நிச்சயமாக உங்களில் மிகவும் கண்ணியத்திற்குரியவர் உங்களில் இறையச்சம் அதிகம் உடையவரே”** (49 : 13 )

**"நபியவர்களிடம் மனிதர்களில் அதிகம் கண்ணியத்திற்குரியவர் யாரெனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், "அவர்களில் அதிகம் இறையச்சம் உடையவரே" என்றார்கள்.** (புஹாரி, முஸ்லிம்)

இவ்வுலகில் “தக்வா” எனும் இறையச்சத்துடன் வாழ்ந்து, அந்த நிலைப் பாட்டிலிருந்து மாறாமல் யார் மரணிக்கின்றார்களோ அவர்களுக்கே மறுமையில் வெற்றியுண்டு ; சுகபோகங்கள் உண்டு என்பதும் அல்குர்ஆனின் கருத்தாகும்.

> **“நிச்சயமாக, முத்தகீன்களுக்கு வெற்றியுண்டு; அழகிய நந்தவனங் களும் திரட்சைக் கனிகளும் உண்டு; அழகிய சமவயதுடைய மார்பழகிகளும் உண்டு.”** (78 : 32 - 35)

எனவே, தக்வா உள்ளவர்களாக வாழ்ந்து ஈருலகிலும் வெற்றி பெறுவோம்.

# தவக்குல்

தவக்குல் என்றால் ‘பொறுப்புச் சாட்டுதல்’ என்பது கருத்தாகும். அல்லாஹ் மீது ஒரு மனிதன் தனது காரியங்களைப் பொறுப்புச் சாட்டி விடுவதையே ‘தவக்குல்’ என்பது குறிப்பிடுகின்றது.

‘தவக்குல்’ பற்றி ஏராளமான அல்-குர்ஆன் வசனங்கள் உள்ளன.

**“மு.ஃ.மின்கள் அல்லாஹ் மீதே தவக்குல் வைக்கட்டும்”** (14 : 11)

மு.ஃ.மீன்களின் அடிப்படை பண்புகளுள் ஒன்றாக "தவக்குல்" என்ற பண்பும் அமைந்திருக்க வேண்டும் என்பதை மேலுள்ள குர்ஆன் வசனம் சுட்டிக் காட்டுகின்றது.

ஒரு மு.ஃ.மினைப் பொறுத்தவரை அவன் எந்தவொரு நற்காரியத்தையும் செய்வதற்கு உறுதி பூண்டு விட்டால் அல்லாஹ்விடம் அதனைப் பொறுப்புச் சாட்டிவிட்டுச் செய்யத் தொடங்க வேண்டும் என்பதும் அல்குர்ஆன் எமக்கு போதிக்கும் முக்கிய பண்புகளுள் ஒன்றாகும்.

**“நீர் ஒரு விடயத்தில் உறுதி பூண்டுவிட்டால் அல்லாஹ்மீது பொறுப்புச் சாட்டி விடுவாயாக”** (3 : 159)

ஈமானில் உயர்ந்து நிற்கும் மு.ஃ.மின்களின் முக்கிய பண்புகளாக மூன்று பண்புகளை அல்லாஹ் ஒரு திருமறை வசனத்தில் குறிப்பிடுகின்றான். அவற்றுள் ஒன்றாக ‘தவக்குல்’ என்ற பண்பைக் குறிப்பிடுகின்றான்.:

1. அல்லாஹ்வின் பெயரைக் கேட்டால் உள்ளங்கள் நடுநடுங்கி விடுதல்.
2. குர்ஆன் வசனங்களைக் கேட்டால் ஈமான் அதிகரித்தல்.
3. அல்லாஹ்மீது தங்கள் காரியங்களை பொறுப்புச் சாட்டிவிடுதல்.

**“நிச்சயமாக மு.ஃ.மின்கள் எனப்படுவோர் எத்தகையவர்கள் என்றால் - அவர்களிடத்தில் அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டால் உள்ளங்கள் நடுநடுங்கிவிடும். அவனது வசனங்கள் அவர்களிடத்தில் ஓதிக் காண்பிக்கப்பட்டு விட்டால் ஈமான் அதிகரித்து விடும். மேலும் அவர்கள் தங்கள் இரட்சகன் மீது தவக்குல் வைப்பார்கள்.”** (8 : 2)

இவ்வாறான பல குர்ஆன் வசனங்கள்; மு∴மின்கள் தங்களது சகல காரியங்களின் போதும் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அல்குர்ஆனில் 42 இடங்களில் 'தவக்குல்' என்ற சொல் கையாளப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தவக்குல் பற்றி பல இமாம்கள் கருத்து தெரிவித்துள்ளனர் :

இமாம் ஸஈத் பின் சுபைர் (ரஹ்) தவக்குல் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "அல்லாஹ் மீது தவக்குல் வைப்பதானது ஈமானின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாகும்"(ஆதாரம் : இப்னு அபீஷைபா)

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) தவக்குல் பற்றிக் குறிப்பிடும் போது இவ்வாறு சொன்னார்கள் :

"தவக்குல் என்பது மார்க்கத்தின் அரைவாசியாகும். மற்றைய அரைவாசி அல்லாஹ்வை நோக்கி மீள்தலாகும். ஏனெனில், மார்க்கம் என்பது அல்லாஹ்விடம் உதவி தேடுதல், இபாதத் ஆகிய இரண்டுமாகும். தவக்குல் என்பது உதவி தேடுதலாகும். அல்லாஹ்வை நோக்கி மீள்வது இபாதத்தாகும். (மதாரிஜுஸ் ஸாலிகீன்)

ஒரு மு∴மின் தனது நற்காரியங்கள், அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள் அனைத்திலும் அல்லாஹ்வின் மீது 'தவக்குல்' வைப்பது வாஜிப் எனப்படும் கட்டாயக் கடமை என விளக்கும் இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள், 'எவ்வாறு ஜனாபத் (பெருந்தொடக்கு) முதலியவைகளிலிருந்து மீள்வதற்கு குளிப்பு, வுழூஉ போன்றன கடமையோ அது போன்றே தவக்குலும் ஒவ்வொரு காரியத்தின் போதும் கடமையாகும்' என்கிறார்கள். (ஆதாரம் : மஜ்மூஉ பதாவா)

நபி (ஸல்) அவர்களின் வாழ்வை நாம் நோக்கும் போது, அல்-குர்ஆன், அவர்களுக்கு விடுத்த கட்டளையை சிரமேற்கொண்டவர்களாக அவர்கள் தமது ஒவ்வொரு காரியத்திலும் அல்லாஹ்வின் மீது 'தவக்குல்' வைத்தவர்களாகவே செயற்பட்டுள்ளார்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் சொன்னார்கள் :

**"அல்லாஹ்வின் மீது நீங்கள் உரிய முறையில் உண்மையாகவே தவக்குல் வைத்தீர்களேயானால் வெறும் வயிற்றுடன் அதிகாலையில் வெளியேறிச் சென்று வயிறு நிரம்பியவைகளாக மாலையில் தம்**

**கூடுகளுக்குத் திரும்பும் பறவைகளுக்கு அல்லாஹ் உணவளிப்பது போல அல்லாஹ் உங்களுக்கும் உணவளிப்பான்."** (திர்மதி, இப்னுமாஜா)

நபி (ஸல்) அவர்கள் காலையிலும், மாலையிலும் பின்வரும் பிரார்த்தனையை ஏழு முறை ஓதுபவர்களாக இருந்தார்கள்.

**'அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் மீதே நான் தவக்குல் வைத்தேன். அவன் அர்ஷின் மகத்தான இரட்சகனுமாவான்'** (9 : 129)

தவக்குல் சம்பந்தமாக நாம் நோக்கும் போது இது சம்பந்தமாக சாதாரண மக்களிடம் காணப்படும் ஒரு பிழையான நம்பிக்கை பற்றியும் நாம் நோக்குவது பொருத்தமாகும். அதாவது தவக்குல் என்ற விடயத்தின் பெயரால் பௌதிகக் காரணிகள் எதனையும் கைக்கொள்ளத் தேவையில்லை எனச் சிலர் நம்புகின்றனர். இத்தகையோர், உணவைப் பெற்றுக்கொள்ள உழைக்கத் தேவையில்லை, நோயைக் குணமாக்க மருந்து தேவையில்லை, காபிர்கள் முஸ்லிம்களை தாக்கும் போது துஆச் செய்தால் மட்டும் போதுமானது. இத்தகைய சந்தர்ப்பங்களி லெல்லாம் அல்லாஹ்மீது தவக்குல் வைத்தால் போதுமானது, எல்லாவற்றையும் அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என நினைக்கின்றனர்.

இது முற்றிலும் தவறான, இஸ்லாத்தைச் சரியாகப் புரியாதவர்களின் கொள்கையாகும். மேலுள்ள நிலைப்பாடு 'தவக்குல்' என அழைக்கப்படுவதில்லை. மாறாக அது 'தவக்குல்' (மூடத்தனமான தவக்குல்) என அழைக்கப்படுகின்றது.

இஸ்லாம் உழைப்பற்ற சோம்பேறிகளின் மார்க்கமல்ல. அது அறிவுபூர்வமான, உற்சாகம் மிக்க, உழைப்பாளிகளின் மார்க்கம். இஸ்லாம் கூறும் உண்மையான தவக்குல் பௌதிகக் காரணிகளுக்கு முரணானதுமல்ல.

தம்மால் முடிந்தளவு ஒரு விடயத்தில் பௌதிகக் காரணிகளை எடுத்தாண்டு விட்டு அல்லாஹ்மீது தவக்குலும் வைத்துச் செயற்படுவதையே இஸ்லாம் போதிக்கின்றது.

நாம் மேலே சுட்டிக்காட்டியுள்ள பறவைகள் பற்றிய ஹதீஸ் இந்த விடயத்தையே சொல்கின்றது. அப் பறவைகள் கூட்டைவிட்டு இரை தேடிப் பறந்து செல்வது அவற்றின் முயற்சியாகும். தமது கூட்டுக் குள்ளேயே உணவு வரும் என அவை இருக்கவில்லை. உணவு தேடிப்பறந்து செல்லும் அவற்றிற்கு எவ்வளவு உணவு கிடைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது அல்லாஹ்வின் கைகளில் உள்ளது. இவ்வாறே முயற்சியுடன் சேர்ந்ததாக தவக்குல் அமையவேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள், மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் செய்த யுத்தங்கள், அவர்கள் காயப்பட்டமை, ஸஹாபாக்கள் பட்ட துயரங்கள் போன்றன எமக்கு இவற்றையே உணர்த்துகின்றன. நபியவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் கூட பௌதிக விதிகளை எந்தளவுக்கு அவர்கள் அனுசரித்து நடந்திருக்கின்றார்கள் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வழமைக்கு மாறான பாதையை மதீனா செல்லப் பயன்படுத்தியமை, பாதையைக் காட்டுவதற்கு வழிகாட்டியை நியமித்துக் கொண்டமை, தௌர் குகையில் ஒழிந்திருந்தமை, உளவு பார்க்கவும் உணவைக் கொண்டுவரவும் உரியவர்களை நியமித்திருந்தமை முதலிய ஏற்பாடுகளையெல்லாம் நபியவர்கள் செய்திருந்தமை தவக்குலுக்கும், திட்டமிடலுக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தவக்குல் சம்பந்தமாக இஸ்லாத்தின் நிலைப்பாடு என்னவென்றால் ஒரு மு.்.மின் பௌதிகக் காரணிகளே எல்லாம் என நினைத்து அவை எல்லாம் ஒரு குறையுமின்றி சரியாக அமைந்துவிட்டால் மட்டுமே ஒரு காரியத்தை செய்வான் என்றால் அது அவனது ‘தவக்குல்’ இல்லாத தன்மையைக் காட்டும்.

அதே போல் ஒரு காரியத்தில் எவ்விதப் பௌதிகக் காரணிகளையும் கைக்கொள்ளாது, எவ்வித திட்டமிடலுமின்றி, எல்லாவற்றையும் அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என்ற மனநிலையில் ஒரு மு.்.மின் செயற்பட்டால் அது அவனது அறியாமையைக் காட்டும். அதுமட்டுமன்றி, குறித்த காரியத்தில் அல்லாஹ்வின் உதவியும் அவனது அருளும் அவனுக்குக்கிட்டாது. ஏனெனில் அல்லாஹ் தன் நாட்டப்படி இவ் உலகில் ஏற்படுத்தி வைத்த விதிகளை, நியதிகளை, இவன் புறக்கணிக்கின்றான். இதனால் தோல்வியும் விரக்தியுமே அல்லாஹ்வின் புறத்தால் இவனுக்குப் பரிசாகக் கிடைக்கும் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

# ரிழா

“ரிழா” என்பதை ‘இறைத் தீர்ப்பைத் திருப்தியுடன் ஏற்றல்’ எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இதனைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார்கள்:

"ரிழா என்பது அல்லாஹ்வின் விதியை உளத் திருப்தியுடன் பொருந்திக் கொள்ளல் ஆகும்". (ஆதாரம் : பத்ஹுல் பாரி)

சில உலமாக்கள் “ரிழா” என்பதற்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கின்றனர்:

‘ரிழா என்பது உலகத்தில் தவறிப்போன ஒரு விடயத்திற்காக தன்னை வருத்திக் கொள்ளாமலோ, அதனை நினைத்து நினைத்து கவலைப்படாமலோ இருப்பதாகும்.’ (ஷுஅபுல் ஈமான்)

இவ்வாறு பல உலமாக்கள் “ரிழா” என்பதற்கு விளக்கங்களை அளித்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் “ரிழா” என்பதைப் பின்வருமாறு விளக்கலாம்:

‘ஒரு மு.ஃமின், அல்லாஹ் செய்யும் படி ஏவியவைகளையும், தவிர்ந்து கொள்ளுமாறு தடுத்தவைகளையும் ஏற்றுக் கொள்வதும் அல்லாஹ் அவனுக்காக எதனைக் பொருந்திக் கொண்டானோ அதனைப் பொருந்திக் கொள்வதும் இவ்வுலகில் அவனுக்கு ஏற்படும் கஷ்டங்கள், துன்ப துயரங்களைக் கண்டு துவண்டு விடாமல் - அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை இழந்து விடாமல் அல்லாஹ்வின் மீது “தவக்குல்” வைத்தவனாக இருப்பதையும் “ரிழா” என நாம் குறிப்பிடலாம்.

உண்மையில் ஒரு மு.ஃமினிடம் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்றாக “ரிழா” என்ற இப்பண்பை அல்-குர்ஆனும் சுன்னாவும் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

**“அவர்களுடைய உள்ளங்களிலே ஈமானை அல்லாஹ் எழுதி விட்டான். அவனிடத்திலிருந்து ஓர் ஆன்மா மூலம் அவர்களுக்கு உதவியும் செய்தான். அவர்களை ஆறுகள் ஊடறுத்து ஓடக்கூடிய சுவர்க்கத்திலே நிரந்தரமாக நுழைவித்து விடுவான். அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அல்லாஹ்வை அவர்களும் பொருந்திக் கொண்டார்கள். அவர்கள்தான் அல்லாஹ்வின் கூட்டத்தினர். அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் கூட்டத்தினரே வெற்றி பெற்றவர்கள்.”** (58 : 22)

இவ் வசனத்தில் வெற்றி பெற்ற மு.ஃமின்களின் கூட்டம் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அத்தகையோர் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டவர்கள் என்பதையும் குறிப்பிடுகின்றான். அல்லாஹ்வைப் பொருந்திக் கொள்ளுதல் என்பது அவனது நாட்டத்தைத் திருப்தியுடன் ஏற்றுக் கொள்வதையே குறிக்கின்றது.

நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸ் 'ரிழா' என்ற பண்பின் முக்கியத்துவத்தினை விளக்கி நிற்கின்றது.

**அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள்: நபியவர்கள் இவ்வாறு கூற நான் செவிமடுத்துள்ளேன். "அல்லாஹ்வை ரப்பாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும் ; முஹம்மதை அல்லாஹ்வின் தூதராகவும் பொருந்திக் கொண்டவர் ஈமானின் சுவையை உணர்ந்து கொண்டவராவார்."** (முஸ்லிம்)

அல்லாஹ்வை ரப்பாக பொருந்திக் கொள்ளுதல் என்ற தொடர் அல்லாஹ்வின் நாட்டப்படி ஒரு மு.ஃமினுக்கு நேரும் இன்ப துன்பங்கள் சகலதையும் மனத்திருப்தியுடன் பொருந்திக் கொள்ளுதலைக் குறிக்கும்.

நம் முன்னோர்களான இமாம்கள் 'ரிழா' வின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்:

அபூதர்தா (ரழி) அவர்கள் இது பற்றிக் கூறுகையில்:

"ஈமானின் சிகரம் நான்கு விடயங்களாகும். அவை : பொறுமை, ரிழா, இக்லாஸ், அல்லாஹ்விற்கு முற்றாக அடிபணிதல் ஆகியவையாகும் என்றார்கள். (நூல் - இ.ஃதிகாது அஹ்லிஸ் சுன்னா).

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், அவர்களின் சோதனை காலகட்டத்தில் சொன்னார்கள்:-

> "தாபிஈன்கள், மற்றும் ஏனைய ஸலபுஸ்ஸாலிஹீன்களான முன்னோர்கள் ஆகியவர்களைச் சேர்ந்த தொண்ணூறு இமாம்கள் சேர்ந்து ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்த விடயம் தான் நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் போது விட்டுச் சென்ற முதலாவது விடயம் அல்லாஹுத்தஆலாவின் "கழா" வைப் பொருந்திக் கொள்வதும் அவனது கட்டளைகளுக்கு முற்றாக கட்டுப்படுவதும் அவனது தீர்ப்புக்குப் பொறுமையைக் கடைப்பிடிப்பதுமாகும். (நூல் : அல்-அகீதா- இமாம் அஹ்மத்)

ரிழா என்ற பண்பை இமாம்கள் சிலர் பின்வருமாறு பிரித்து நோக்கியுள்ளனர்:

1. **ரிழா வாஜிப் - கடமையானது.**
2. **ரிழா முஸ்தஹப் - விரும்பத்தக்கது.**
3. **ரிழா ஹராம் - தடைவிதிக்கப்பட்டது.**

“ரிழா வாஜிப்” என்பது அல்லாஹ்தஆலாவை இரட்சகனாக ஏற்று, அவனது தீர்ப்புக்களுக்கும் அவனது நாட்டப்படி நடைபெறும் சகல விடயங்களுக்கும் கட்டுப்பட்டு அவற்றை மனப்பூர்வமாகப் பொருந்திக் கொள்வதும்; நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக்கொள்வதும் இஸ்லாமிய மார்க்கத்தை தனது வாழ்க்கை வழியாகப்பொருந்திக் கொள்வதும் ஆகும்.

நபி(ஸல்) அவர்கள் தினமும் காலையிலும் மாலையிலும் மூன்று முறை பின்வருமாறு கூறுவார்கள் :

> அல்லாஹ்வை என் இரட்சகனாகப் பொருந்திக் கொண்டேன். இஸ்லாத்தை மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன். முஹம்மத் (ஸல்) அவர்களை நபியாகவும் இறைத் தூதராகவும் பொருந்திக் கொண்டேன். (அஹ்மத்)

**ரிழா முஸ்தஹப்** என்பது மேலே ரிழா வாஜிபில் சொல்லப்பட்ட விடயங்களை உச்ச அளவில் கடைப்பிடிப்பதைக் குறிக்கும்.

**ரிழா ஹராம்** என்பது பாவமான காரியங்கள், இஸ்லாத்திற்கு மாறான விடயங்கள் முதலியவற்றைப் பொருந்தி ஏற்றுக்கொள்வதாகும். இந்த வகையானது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதாகும்.

எனவே, இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ள உளரீதியான பண்புகளுள் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ள ரிழா என்ற இப் பண்பினை உரிய முறையில் கடைப்பிடிக்கும் போதுதான் உண்மை விசுவாசிகளாக நாம் மாற முடியும் என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

# மஹப்பத்

அல்லாஹ்வின் மீது அன்புவைப்பது 'மஹப்பத்' என அழைக்கப்படுகின்றது. இஸ்லாத்தில் இது அடிப்படை விடயங்களுள் ஒன்றாகும். அதாவது ஒரு மு.்.மினைப் பொறுத்த வரை அவனது உள்ளத்துடன் தொடர்பான முக்கிய செயற்பாடாக இது அமைந்துள்ளது. அல்லாஹ்வின் மீதான அன்பின் கூடுதல், குறைதலைப் பொறுத்தே ஒரு மு.்.மினின் ஈமானும் கூடிக் குறையும். அத்துடன் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதும் இலகுவாகவோ அல்லது கடினமாகவோ அமையும். அதாவது அல்லாஹ்வின் மீதான அன்பு அதிகமானால் அவனுக்குக் கட்டுப்படுவது இலகுவாக அமையும். அல்லாஹ்வின் மீதான அன்பு குறை வடையும்போது அவனுக்குக் கட்டுப்படுவதும் குறைவடையும், மாறாக பாவங்கள் அதிகரிக்கும்.

அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பது, நேசம் கொள்வது ஒரு முஸ்லிமின் மீது கடமையாகும் என்பது இஜ்மாவான கருத்தாகும். அத்துடன் ஒரு மனிதன் தனது உள்ளத்திலே அல்லாஹ்வின் நேசம் அதிகரிக்கும் வண்ணம் அதற்கு அவசியமானவற்றைத் தேடிச் செயற்படுவதும் கடமையான ஒன்றாகும்.

அல்லாஹுத்தஆலாவின் மீது நேசம் கொள்வது கடமை என்பதற்கு பின்வரும் குர்ஆன் வசனம் ஆதாரமாய் அமைந்துள்ளது.

**"கூறுவீராக; உங்கள் தகப்பன்மார்களும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் சகோதரர்களும்; உங்கள் மனைவிமார்களும், உங்கள் நெருங்கிய குடும்பத்தவர்களும்; நீங்கள் சம்பாதித்த செல்வங்களும், நஷ்டமாகி விடுமோ என நீங்கள் அஞ்சும் வியாபாரமும், நீங்கள் மனப்பூர்வமாக விரும்பும் உங்கள் வசிப்பிடங்களும் அல்லாஹ்வையும்; அவனது தூதரையும் மற்றும் அவனது பாதையில் ஜிஹாத் செய்வதையும்விட உங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியனவாக இருக்குமாயின் அல்லாஹ் தன் தண்டனையை ஏற்படுத்துவதை எதிர்பார்த்திருங்கள்." (9 : 24)**

இவ் வசனத்தின் மூலம் அல்லாஹுத்தஆலா, தன் மீது அன்பு வைப்பதை வலியுறுத்திக் கூறியிருப்பதையும், அவ்வாறு அன்பு வைக்காத விடத்து அது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுவதையும் அவதானிக்கலாம்.

அல்லாஹ்வின் மீது அன்புவைக்கின்ற ஒரு மனிதனே உள விருப்புடன் அல்லாஹ்வின் கட்டளைகளை சிரமேற்கொண்டு அவற்றிற்குக் கட்டுப்பட்டு வாழ்பவனாகவும்; அவனது விலக்கல்களைத் தவிர்ந்து கொள்பவனாகவும்; அதிகம் இபாதத்துக்கள் புரிபவனாகவும்; இறைவனுக்கு நன்றி செலுத்துபவனாகவும் இருப்பான். மேலும் இத்தகைய மனிதனுக்கே இஸ்லாமியனாக வாழ்வதும் இலகுவாக அமையும்.

அல்லாஹ்வின் மீதான அன்பே பிற உயிரினங்கள், படைப்பினங்கள் மீது அன்பு செலுத்தவும் அவற்றிக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்தவும் அடிப்படையாக அமைகின்றது. தன் இரட்சகனின் படைப்பினங்களே இவை என்ற எண்ணம் வலுப்பெறும் போது தனது நேசத்திற்குரிய இறைவனின் அப் படைப்பினங்கள் மீதும் அவனது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுக்கின்றது.

அல்லாஹ்வின் அடியான் ஒருவன் தனது இரட்சகனை உண்மையாகவே நேசிக்கின்றானா, அவன் மீது உண்மையாகவே அன்பு வைத்துள்ளானா என்பதைக் காட்டுவதற்கு அடிப்படையாக அமையக் கூடிய அடையாளங்கள் சில உள்ளன. அவற்றை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்:

**அல்லாஹ்வின் மீது ஒரு மு∴மின் அன்பு வைத்திருப்பதை வெளிக் காட்டக்கூடிய அடையாளங்கள்**

1. **அல்லாஹுத்தஆலாவைச் சந்திக்க விரும்புதல் :**
   ஒருவன் மீது உண்மையான அன்பு கொண்டவர் அவரை எப்படியாவது சந்திக்கவே விரும்புவார். இவ்வாறே, ஒரு மு∴மின் உண்மையில் அல்லாஹ்வின் மீது "மஹப்பத்" வைத்திருப்பானாயின் தனது இரட்சகனைச் சந்திக்க விரும்புவான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

   **"யார் அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகின்றாரோ அவரைச் சந்திக்க அல்லாஹ் விரும்புகின்றான். யார் அல்லாஹ்வைச் சந்திப்பதை வெறுக் கின்றாரோ அவரைச் சந்திப்பதையும் அல்லாஹ் வெறுக்கின்றான்."**
   (அறிவிப்பவர் : உபாதத் பின் ஸாமித் (ரலி), நூல் : புஹாரி, முஸ்லிம்)

2. தனிமையில் அல்லாஹ்வை திக்ர் செய்வதையும் அல்-குர்ஆன் ஓதுவதையும் விரும்புதல்.

3. வணக்க வழிபாடுகள் மூலம் ஏற்படும் சிரமங்களைச் சகித்துக் கொள்ளுதலும் அதிகமான வணக்க வழிபாடுகளைச் செய்வதில் விருப்பமும்.
4. கஷ்டங்கள் ; துன்பங்களின் போது பொறுமையைக் கடைப்பிடித்தல்.
5. அல்லாஹ்வையும் அவனது தூதரையும் விட உலகிலுள்ள வேறு எப்பொருளையும் நேசிக்காதிருத்தல்.
6. அல்லாஹுத்தஆலாவின் பெயரைக் கேட்டுவிட்டால் உள்ளம் இறையச்சத்தால் நிரம்பி கண்கள் கண்ணீர் விடும் நிலை.
7. பாவங்களைக் காணும் போது வெறுக்கும் மன நிலையும், தடுக்கும் தன்மையும்.
8. அல்லாஹ்வின் கலாமான குர்ஆனை ஓதுவதை, படிப்பதை அதன்படி வாழ்வதை, விரும்பும் தன்மை.
9. தவறிப்போன ஒரு வணக்கம், திக்ர் போன்றவற்றிற்காக மனம் வருந்தும் தன்மை.
10. தான் செய்து வரும் அமல்கள் போதாது எனும் எண்ணமிருத்தல்.

இவ்வாறான பல விடயங்களை இமாம்கள் ஒரு மு.்.மின் தன் இரட்சகன் மீது கொண்டுள்ள அன்பின் அளவைக் காட்டும் அடையாளங்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இமாம்கள் அல்லாஹ்வின் மீதான அன்பை ஒரு மு.்.மினின் உள்ளத்தில் அதிகரிக்கச் செய்யும் கருமங்களையும் சொல்லிக் காட்டியுள்ளனர். அவற்றில் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

### அல்லாஹ்வின் மீதான அன்பை அதிகரிக்கச் செய்யும் விடயங்கள்

1. அல் குர்ஆனை சிந்தனையுடன் அதன் கருத்துக்களை விளங்கி ஓதுதல்.
2. அல்லாஹ் செய்யுமாறு கட்டளையிட்டவைகளைச் செய்தல்; அவனுக்கு மாறு செய்யும் விடயங்களைத் தவிர்த்தல்.
3. பர்ளான விடயங்களுடன் சுன்னத்தான - நபிலான விடயங்களையும், வணக்க வழிபாடுகளையும் அதிகமாகச் செய்தல்.
4. உள்ளத்தினாலும், நாவினாலும், செயலாலும் அல்லாஹ்வை அதிகம் ஞாபகம் செய்தல்.
5. தன் மனதிற்கு மிகவும் விருப்பமான ஒரு விடயமாக இருப்பினும் அவ்விடயம் அல்லாஹ்வின் விருப்பத்துக்கு முரணானது என்றால் அதனை விட்டுவிடுவதும் தனக்கு வெறுப்பான விடயமாக இருப்பினும்

அது அல்லாஹுத் தஆலாவின் விருப்பத்துக்குரிய விடயமாக இருப்பின் அதனை மேலாகக் கருதிச் செய்தலும்.

6. இவ்வுலகில் தன்னைச் சூழவுள்ள பொருட்கள் மீதும் தன் மீதும் அல்லாஹுத்தஆலா சொரிந்திருக்கக் கூடிய அருட் கொடைகள் பற்றிச் சிந்தித்துணர்தல்.
7. அல்லாஹ் பூவுலகின் அடிவானுக்கு இறங்கிவரும் பின்னிரவு வேளைகளில் தனித்திருந்து அல்லாஹ்வை வணங்குதல்; ஞாபகப்படுத்தல்.

அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பதன் மூலம் கிட்டக் கூடிய பயன்கள் :

1. சுவர்க்கத்தில் நுழைவதும் நரகிலிருந்து தூரமாவதும்.
2. அல்லாஹ்வின் அன்பும் கருணையும் கிடைத்தல்.
3. உலக வாழ்க்கையில் வெற்றி கிடைத்தல்.
4. பிராத்தனைகள் அங்கீகரிக்கப்படுதல்.
5. அல்லாஹ்வின் அருளும் பாதுகாப்பும் கிட்டுதல்.

## ஷுக்ர் (நன்றியுணர்வு)

தன்னைப் படைத்துப் பரிபாலித்து தனது வாழ்க்கைக்கு ஏற்றவகையில் இப்பூவுலகை அமைத்து தனக்குக் கட்டுப்பட்டவையாக- வசப்பட்டவையாக இவ்வுலகிலுள்ள ஏனைய அனைத்துப் படைப்பினங்களையும் சிருஷ்டித்த தனது இரட்சகனான அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது ஒவ்வொரு மனிதன் மீதும் கடமையான ஒன்றாகும்.

ஒரு மு.்.மினைப் பொறுத்தவரை மேலுள்ளவற்றிக்கு மேலதிகமாக அவன் தன்னை இருளில் தட்டழிய விடாமல் இஸ்லாம் எனும் நேர்வழியை - ஒளியைப் பெற்றவனாக தன்னை ஆக்கியமைக்காக அல்லாஹுத் தஆலாவுக்கு விஷேடமாக நன்றியுணர்வு மிக்கவனாகத் திகழ வேண்டிய கடப்பாடுமிக்கவனாக உள்ளான்.

தனது ரப்பாகிய அல்லாஹ்விற்கு ‘நன்றியுணர்வு மிக்கவனாகத் திகழ்தல்’ என்ற இந்தப் பண்பு மிகவும் உயர்தரமானது. நபிமார்கள், அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமான நல்லடியார்கள் முதலியோரின் மிகவும் முக்கியமான பண்புகளுள் ஒன்றாக அல்-குர்ஆன் இதனைப் பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

நபி நூஹ் (அலை) அவர்கள் பற்றிக் குறிப்பிடும் அல்-குர்ஆன்; **“அவர் மிகவும் நன்றி செலுத்தும் அடியாராக இருந்தார்”** (17:3) என்கிறது.

**நபி (ஸல்) அவர்களிடம் ஆயிஷா (ரலி) அவர்கள், "தாங்கள் முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக இருக்க; இரவு நேரங்களில் ஏன் உங்களுடைய இரு காலும் வீங்கிவிடுமளவுக்கு நின்று வணங்கு கிறீர்கள்?" என வினவியபோது, நான் அல்லாஹ்வுக்கு நன்றியுணர்வு மிக்க அடியானாக இருக்க வேண்டாமா? எனப் பதிலளித்தார்கள்.** (புகாரி, முஸ்லிம்)

இதனை விடவும் நபியவர்கள் ஒரு படி மேலே சென்று தனது இரட்சகனான அல்லாஹ்விடமே அவனுக்கு நன்றி செலுத்த தனக்கு உதவி புரியுமாறு இறைஞ்சுபவர்களாக இருந்தார்கள்:

**"அல்லாஹ்வே! உன்னை நினைத்திருப்பதற்கும்; உனக்கு நன்றி செலுத்துவதற்கும் ; உன்னை அழகிய முறையில் இபாதத் செய்வதற்கும் எனக்கு உதவி செய்வாயாக."** (அபூதாவுத்)

இந்தப் பிரார்த்தனையை நாமும் செய்வதற்கு நபியவர்கள் வழி காட்டினார்கள்.

நன்றியுணர்வு என்ற இந்தப் பண்பு அல்-குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹுத்தஆலாவினால் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்-குர்ஆனில் சில இடங்களில் தனக்கு நன்றி செலுத்துமாறு அல்லாஹுத்தஆலா மனித குலத்திற்குக் கட்டளையிட்டுள்ளான். உதாரணமாக **"நீங்கள் என்னை ஞாபகம் செய்யுங்கள். நான் உங்களை ஞாபகம் செய்கின்றேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்; என்னை நிராகரிக்காதீர்கள்"** (2 : 152 ) என்ற வசனத்தைக் குறிப்பிட்டுக்காட்டலாம்.

வேறு சில இடங்களில் மனித குலத்தைப் படைத்தது "அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்காகவே" என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான். **"அல்லாஹ்வே உங்களை உங்கள் தாய்மார்களின் வயிற்றறை களிலிருந்து எதுவும் அறியாத நிலையில் உங்களை வெளியாக்கினான். உங்களுக்கு கேள்விப்புலனையும் பார்வைப் புலனையும் உள்ளங்களை யும் நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தினான்.** (16 : 78)

அல்லாஹுத்தஆலாவுக்கு நன்றி செலுத்தும் அடியார்களுக்கே அவன் நற்கூலி வழங்குவதாகவும் அல்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

**"நன்றி செலுத்துபவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குகின்றான்."** (3 : 144)

இவ்வாறு பல இடங்களில் 'நன்றி செலுத்தல்' (ஷுக்ர்) என்ற வார்த்தையை அல்குர்ஆனில் அல்லாஹ் கையாண்டிருப்பதைக் காணலாம். இதிலிருந்து ஒரு மு.்.மினிடம் மிகவும் கட்டாயமாக அமைந்திருக்க வேண்டிய பண்பாக நன்றி செலுத்தும் பண்பை, படைத்த இரட்சகனே எதிர்பார்ப்பதை விளங்கிக் கொள்ளலாம்.

நன்றி செலுத்தும் ஒரு மு.்.மினே அல்லாஹ் தன் மீது சொரிந்திருக்கும் அருட்கொடைகளை எண்ணிப்பார்ப்பான். இவ்வாறு எண்ணிப்பார்க்கும் போது அவனது உள்ளம் நன்றிப் பெருக்கால் நிரம்பும். தன் நன்றியை வெளிப்படுத்தும் வகையில் தன் மீது கடமையான இபாதத்துக்களை நிறைவேற்றுவான். கடமையை மட்டும் நிறை வேற்றினால் போதாது என்ற உணர்வு அவனது உள்ளத்திற்குள் பீறிட்டு எழும். அவ்வேளை சுன்னத்தான - உபரியானவணக்க வழிபாடுகளை தேடித் தேடி நிறைவேற்றத் தொடங்குவான். அல்லாஹ்வின் திக்ரில் அவனது நாவு திளைத்திருக்கும். இதனால் அவனது ஈமானும் அதிகரித்து அல்லாஹுத் தஆலாவின் நெருங்கிய அடியானாகவும் மாறுவான்.

அல்குர்ஆன் 'ஷுக்ர்' எனும் இப்பண்புக்குக் கொடுத்து இருக்கும் முக்கியத்து வத்தின் காரணமாகவே இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் "ஈமான் என்பதை இரு பகுதிகளாக பிரித்தால் அதில் ஒரு பகுதி 'ஷுக்ர்' எனும் நன்றி செலுத்துவதும் மற்றப் பகுதி 'சப்ர்' என்னும் பொறுமையுமாகும்" என்கிறார்கள். (ஸாதுல் மஆத்)

**அல்லாஹ்வுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது?**

தன்னைப் படைத்துப் பரிபாலித்து வருவதோடு தனக்கு நேர்வழியையும் காட்டி, தன் மீது எண்ணற்ற அருட்கொடைகளையும் சொரிந்துள்ள தன் இறைவனுக்கு ஒருமனிதன் செலுத்தும் நன்றிக் கடனானது பின்வரும் வழிகள் மூலம் செலுத்தப்பட வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

- நன்றி செலுத்தும் உணர்வுடன் அல்லாஹுத்தஆலாவுக்கு முற்றிலுமாகக் கட்டுப்படல். அதனோடு வணக்கவழிபாடுகளை நிறைவேற்றல்.
- அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப்பார்த்து, நன்றிப் பெருக்கோடு அவன் மீது இறையன்பு கொள்ளல்.
- அல்லாஹ்வின் அருட்கொடைகளை ஏற்றுக் கொள்ளல்.
- அல்லாஹ்வைப் புகழ்தல்.
- அல்லாஹுத்தஆலா தனக்கு வழங்கியுள்ள நி.்.மத்துக்களை அவன் விரும்பும் வழிகளில் மாத்திரமே பயன்படுத்துதல்; அவன் தடுத்த வழிகளில் பயன் படுத்தாதிருத்தல்.

இவ்வாறான வழிமுறைகள் மூலம் ஒரு மனிதன் தன் இரட்சகனான அல்லாஹ்வுக்குச் செலுத்தும் நன்றிக் கடனை இஸ்லாமிய அறிஞர்கள் மூவகையாகப் பிரித்து நோக்குவர்.

1. உள்ளத்தினால் நன்றி செலுத்துதல்.
2. நாவினால் நன்றி செலுத்துதல்.
3. உறுப்புக்களினால் நன்றி செலுத்துதல்.

**1. உள்ளத்தினால் செலுத்தப்படும் நன்றிக் கடன்**

இவ்வுலகில் தனக்கு கிடைத்திருக்கும் அருட்கொடைகள்; வரப் பிரசாதங்கள், வாய்ப்புக்கள் ஆகிய அனைத்தும் எல்லாம் வல்ல அல்லாஹ்வினால் தனக்கு அருளப்பட்டவையே என்ற உண்மையை ஒரு மனிதன் உணர்ந்து கொள்வதையே இது குறிக்கின்றது.

அல்லாஹுத்தஆலா அல்-குர்ஆனில் பல இடங்களில் மனித குலத்திற்கு அவன் செய்திருக்கும் அருட்கொடைகளைச் சுட்டிக் காட்டிவிட்டு அவற்றிற்காக மனிதன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டாமா? என வினவுகின்றான். அல்-குர்ஆனில் சூறத்துல் வாகிஆ, 57 தொடக்கம் 72 வரையுள்ள வசனங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**2. நாவினால் செலுத்தப்படும் நன்றிக் கடன்**

ஒரு மனிதனின் உள்ளத்திலே தன் இரட்சகன் மீதான நன்றியுணர்வு பீறிட்டு எழும் போது நாவு தானாகவே அல்லாஹ்வைப் புகழ ஆரம்பிக்கும்; அவனைத் துதிபாடத் தொடங்கும். இதுவே நாவினால் செலுத்தப்படும் நன்றிக் கடனாக மாறுகின்றது. நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்த சந்தர்ப்ப துஆக்கள் அனைத்துமே இவ்வாறான அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி, அவன் புகழ்பாடுபவையாகவே அமைந்துள்ளன. அவற்றை நாமும் ஓதி வருவதன் மூலமாக இப்பேற்றை அடையலாம்.

**3. உடலுறுப்புக்களினால் செலுத்தப்படும் நன்றிக் கடன்**

“அ.:.மாலுஸ் ஸாலிஹாத்” என்றழைக்கப்படும் நல்லமல்கள் அனைத்துமே அல்லாஹ்வுக்கு செலுத்தப்படும் செயலுருவிலான நன்றிக் கடனாகவே அமையும். தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், முதலிய கடமையான அடிப்படை வணக்க வழிபாடுகளும், ஸதகா, திக்ர், திலாவத்துல் குர்அன், சுன்னத்தான தொழுகைகள், சுன்னத்தான நோன்புகள் முதலிய சுன்னத்தான வணக்க வழிபாடுகளும் மற்றும் பிறமனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் செய்யும் நற்கருமங்களும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் செயற்பாடுகளாகவே அமையும்.

மேலும், இவ் வகைக்குள் உள்ளடங்குகின்ற மற்றொரு முக்கிய செயற்பாடாக ஸஜ்தா ஷுக்ரை (நன்றி செலுத்தும் நோக்கில் செய்யப்படும் ஸுஜுது) குறிப்பிடலாம்.

**அபூபகர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி வந்து விட்டாலோ; அல்லது நன்மாராயம் கூறப்பட்டு விட்டாலோ அவர்கள் உடனே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் ஸுஜுதில் விழுந்து விடுவார்கள்** (ஆதாரம் : அபூதாவுத்)

தொழுகையில் மேலுள்ள மூன்று வகையான நன்றிக் கடன் செலுத்தும் தன்மையும் பொதிந்திருக்கின்றன.

ஒரு மனிதன் அல்லாஹ்வுடைய நி..மத்துக்களைப் பற்றிப் பேசுவதும்; அவன் தன்மீது சொரிந்திருக்கும் அருட்கொடைகளை அடிக்கடி நினைவூட்டிக் கொள்வதும், அவை தன்மீது வெளிப்படும் வண்ணம் நடந்துகொள்வதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் நடவடிக்கைகளாகவே அமையும்.

இம்றான் பின் ஹுஸைன் (ரழி) எனும் நபித்தோழர் அறிவிக்கும் ஒரு ஹதீஸில் பின்வரும் வசனங்கள் இடம்பெற்றுள்ளன:

> **"அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பற்றிக் கதைப்பதும் நன்றி செலுத்தலில் உள்ளதாகும். இதை விடுவது நிராகரிப்பாகும். ஜமா அத்தாக இருப்பது அருளாகும். பிரிவினை என்பது வேதனையாகும்."** (முஸ்னத் அஹ்மத்)

**அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் உணர்வை அதிகரிக்கச் செய்யும் அம்சங்கள்.**

அல்குர்ஆனும் நபியவர்களின் சுன்னாவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கு எம்மைத் தூண்டும் அம்சங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளன.

1. தன்னைவிட உயர் நிலையிலுள்ளோரைக் கவனிக்காமல் தன்னை விடத் தாழ்வான நிலையிலுள்ளோரைக் கவனித்தல்.
2. அல்லாஹுத்தஆலாவின் அருட்கொடைகளை நினைவு கூர்தல்.
3. அல்லாஹுத்தஆலா வழங்கியுள்ள அருட்கொடைகள் பற்றி விசாரிக்கப்படுவோம் என்ற உணர்வை ஒவ்வொரு மனிதனும் பெற்றிருத்தல்.
4. நன்றி செலுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குமாறும் அதற்கு எமக்கு உதவி புரியுமாறும் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்தித்தல்.

**அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதனால் ஏற்படக் கூடிய நன்மைகள்:-**

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதனால் அல்லாஹ்வுக்கு எவ்விதமான நன்மைகளும் ஏற்பட்டு விடப்போவதில்லை. மாறாக அவனது அடிமையாகிய நமக்கு எண்ணற்ற நன்மைகள் இவ்வுலகில் கிடைக்கின்றன. அவற்றுள் சில பின்வருமாறு :

1. **அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து விடுதலை**

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தம் ஓர் அடியானைத் தண்டிக்க வேண்டிய தேவை அல்லாஹ்வுக்கு ஒரு போதும் இல்லை என்பதைப் பின்வரும் குர்ஆன் வசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது:

**"நீங்கள் ஈமான் கொண்டு நன்றியும் செலுத்தினால் உங்களை அல்லாஹ் தண்டிக்கமாட்டான். அல்லாஹ் நன்றியுடையவனாகவும் மிகவும் அறிவுடையவனாகவும் உள்ளான்."** (4 : 147)

2. **அல்லாஹுத்தஆலாவின் திருப்தி கிட்டுதல்**

நன்றி செலுத்தும் அடியானுக்குக் கிடைக்கும் பாக்கியங்களில் முக்கியமானது அல்லாஹ்வின் திருப்தி கிட்டுவதாகும். நபியவர்கள் சொன்னார்கள்:

**"தான் உட்கொள்ளும் உணவுக்காகவும், தான் அருந்தும் பானத்திற் காகவும் அல்லாஹ்வைப் புகழ்கின்ற அடியானை அல்லாஹ் பொருந்திக் கொள்கின்றான்."** (முஸ்லிம்)

4. **நேர்வழியில் அல்லாஹ் ஸ்திரப்படுத்தி வைத்தல்**

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்ற அடியார்களையே அல்லாஹ் நேர்வழி எனும் அருளை வழங்குவதற்காகத் தேர்ந்தெடுப்பதாகவும் அதில் ஸ்திரப்படுத்தி வைப்பதாகவும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**"இவ்வாறே அவர்களில் சிலரை சிலரைக் கொண்டு நாம் சோதித்ததில் எங்களை விட்டு இவர்கள் மீதா அல்லாஹ் அருள் புரிந்துவிட்டான்? என்று (பணக்காரர்கள்) கூற முற்பட்டனர். நன்றி செலுத்துபவர்களை அல்லாஹ் மிக அறிந்தவனாக இல்லையா?"** (6:53)

5. **அல்லாஹுத்தஆலாவின் அருட்கொடைகள் அதிகரித்தல்**

நம் ஒவ்வொருவருக்கும் அல்லாஹுத்தஆலா வழங்கியிருக்கும் அதிகமான அருட்கொடைகள் நம்மை விட்டும் நீங்கிவிடாமல் நிலைத்திருக்கவும் அவை மேலும் அதிகரிக்கவும் அவற்றை வழங்கிய இறைவனுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும்.

**"நீங்கள் நன்றி செலுத்தினால் உங்களுக்கு நான் அதிகரித்துத் தருவேன். நீங்கள் நிராகரித்தாலோ என்னுடைய தண்டனை மிகக் கடுமையானது."** (14 : 7)

உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுவார்கள்:-

**"அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதன் மூலம் அவனது அருட் கொடைகளைக் கட்டிவைத்துக் கொள்ளுங்கள்".** (ஷுஅபுல் ஈமான்)

ரபீஉ பின் அனஸ் (ரஹ்) சொன்னார்கள் :

**"அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் அவன் ஞாபகப்படுத்துவான்; நன்றி செலுத்தினால் அதிகரிப்பான்; அவனை நிராகரித்தால் தண்டனை வழங்குவான்"** (ஷுஅபுல் ஈமான்)

6. **பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுதல்**

அல்லாஹுத்தஆலாவுக்கு நன்றி செலுத்துவதன் மூலம் எமது பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

அல்லாஹுத்தஆலா நமக்கு அருளியிருக்கும் அருட்கொடைகளை நினைவு கூர்ந்து, அல்லாஹ்வைப் புகழ்ந்து, அதற்காக அவனுக்கு நன்றி செலுத்திப் பிரார்த்திக்கும் போது எமது பிரார்த்தனைகள் அல்லாஹ்வினால் மறுக்கப்படுவதில்லை என்ற கருத்தை பல ஹதீஸ்கள் கூறுகின்றன என்பதையும் கவனத்திற் கொள்வோம்.

## மனிதர்களுக்கு நன்றி செலுத்துதல்

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல் என்ற பண்பு பற்றிக் குறிப்பிடும் போது மனிதர்களுக்கு மனிதர்கள் நன்றி செலுத்துவது பற்றியும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இது முக்கியமான ஒரு விடயமாகும். ஏனெனில் மனிதர்களுக்கு மனிதர் நன்றி செலுத்திக் கொள்ளும் போது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் பண்பு மனிதனிடம் வளரும்.

இதனால் நமக்கு நன்மைகள் செய்யும், உபகாரம் செய்யும் மனிதர்களுக்கு நன்றி செலுத்துமாறு ஷரிஅத் நமக்குக் கட்டளை இடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :

> **"மனிதர்களுக்கு யார் நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ் வுக்கு நன்றி செலுத்தமாட்டார்"** (அபூதாவுத், திர்மிதி)

நாம் நன்றி செலுத்த வேண்டிய மனிதர்களுள் முதன்மையானவர்கள் எமது பெற்றோர்களாவர். அவர்கள் எம்மைப் பெற்றெடுக்கவும்; அதன் பின்பு எம்மை வளர்த்து ஆளாக்கவும் ஒழுக்க சீலர்களாய் எம்மை மாற்றவும் கல்வியிற் சிறந்தோராய் மிளிரச் செய்யவும் அவர்கள் அனுபவித்த சிரமங்களை நாம் என்றும் மறந்து விடவே கூடாது என இஸ்லாம் போதிக்கின்றது.

சூறத்து லுக்மானில் அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான்:

> **"தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து அவனைச் சுமந்தாள். பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே பால்குடி மறக்கச் செய்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து. உன் தாய், தந்தைக்கும் நன்றி செலுத்து."** (31:14)

தாய் தந்தையருக்கு அடுத்தபடியாக, நன்றி செலுத்தப்பட வேண்டியவர்கள் நமக்கு நலவு செய்த ஏனைய மனிதர்களாவர். நபி (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் மிம்பரில் நின்றவர்களாகப் பின்வருமாறு கூறினார்கள்:

> **"எவர் குறைவானதற்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் அதிகமான வற்றிற்கும் நன்றி செலுத்தமாட்டார். யார் மனிதர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்தமாட்டார். அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பற்றிக் கதைப்பதும் ஒரு நன்றி செலுத்துகையே. இதை விடுவது நிராகரிப்பாகும். ஜமாஅத்தாக இருப்பது அருளாகும். பிரிவினை என்பது வேதனையாகும்."** (ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்)

இந்த இடத்தில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கும் மனிதர்களுக்கு நன்றி செலுத்துவதற்கும் இடையிலுள்ள முக்கிய வேறுபாடு ஒன்றைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும். அதாவது, அல்லாஹ்வுக்குச் செலுத்தப்படும் நன்றிக்கடனானது வணக்கவழிபாடு, இறையச்சம், அல்லாஹ்வுக்கு முற்றிலும் கட்டுப்படுதல் முதலியவற்றுடன் தொடர்புடையது. ஆனால், மனிதர்களுக்குச் செலுத்தும் நன்றிக்கடன் இவற்றுடன் தொடர்புபட்டதல்ல. அது உதவி உபகாரம் செய்தவருக்கு நாமும் உதவி செய்தல், அவருக்காக துஆச் செய்தல் முதலிய செய்கைகளை உள்ளடக்கியது. இந்த வேறுபாட்டை நன்றாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தவகையில், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் இந்த உயர் பண்பை நாம் பூரணமாகக் கடைப்பிடிக்கவும், அதன் மூலம் கிடைக்கப் பெறும் பயன்களை உச்ச அளவில் பெறவும் நாம் முயலுவோம்.

# மனித உறவு தொடர்பான சமூக ஒழுக்கங்கள்

இஸ்லாம் ஒரு சம்பூரண வாழ்க்கைத் திட்டமாகும். அது அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட உன்னத வாழ்க்கை வழிகாட்டல். அதில் ஆன்மீகமும் உண்டு ; லௌகீகமும் உண்டு. ஆன்மீகத்தை வளர்க்கும் விடயங்களான இபாதத்துக்கள் கடமையாக்கப்பட்டிருப்பதைப் போலவே லௌகீக வாழ்க்கையான இவ்வுலக வாழ்வு சிறப்பாக அமைய வேண்டி, சமூக ஒழுக்கங்களும் கடமையாக்கப் பட்டுள்ளன. இச்சமூக ஒழுக்கங்களை கைக்கொண்டு வாழும் போதுதான் ஒரு மனிதன் உண்மையான முஸ்லிமாகத் திகழ முடியும். இஸ்லாமிய மார்க்கம் அவசியம் கடைப்பிடிக்குமாறு வழிகாட்டியுள்ள இத்தகைய விடயங்களை கைக்கொள்ளும் போது முஸ்லிம் சமூகத்தில் இஸ்லாம் எதிர்பார்க்கும் ஒற்றுமையும், தூய்மையும் ஏற்படும். சமூகம் பலமுள்ளதாகவும், குற்றங்கள் குறைந்ததாகவும் மாறும். அத்தகைய ஒழுக்கங்களுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்.

### சகோதரத்துவம்

இஸ்லாமிய சமூகத்தில் அத்தியாவசியமாகக் காணப்படவேண்டிய அடிப்படையான சமூக ஒழுக்கப் பண்பாட்டு அம்சங்களுள் சகோதரத்துவம் மிகவும் முக்கியமானதாகும். அல்-குர்ஆன் பல்வேறு வசனங்கள் மூலம் நபி (ஸல்) அவர்களின் ஊடாக சமூகத்திற்கு இதனை வலியுறுத்திக் கூறியுள்ளது.

> **“மனிதர்களே உங்களை நாம் ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கு வசதியாகவே உங்களை குலங்களாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கி வைத்தோம். அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகவும் கண்ணியத்திற் குரியவர் யாரெனில் உங்களில் அதிகம் இறையச்சம் உடையவரே!** (49 : 13)

மேலுள்ள வசனத்தின் மூலம் இந்த மனித குலத்திற்கு மகத்தான உண்மைகள் சிலவற்றை அல்லாஹ் ஆணித்தரமாக தெரியப்படுத்துகிறான் :

- இவ்வுலகத்திலுள்ள அனைத்து மனிதர்களும் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, அந்நிய மதத்தவர்களாக இருந்தாலும் சரி, ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே வந்தவர்களாவர். இந்த வகையில் உலகிலுள்ள அனைவருமே சகோதரர்களாவர். இவ்வுண்மையை சுட்டிக்காட்டவே இக் குர்-ஆன் வசனம்; “மனிதர்களே!” என அனைத்து மனிதர்களையும் விளிக்கின்றது.

* உலகிலுள்ள குலங்கள், கோத்திரங்கள் அனைத்தும் சமமானவையே யாகும். அவற்றுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இல்லை ; பாகுபாடுகள் இல்லை. குலங்களும் கோத்திரங்களும் உருவாக்கப்பட்டதன் காரணம், இன்ன குலத்தை சேர்ந்த இன்னார் என இலகுவில் ஒரு மனிதனை அறிந்து கொள்வதற்காகவேயன்றி வேறில்லை.

* உண்மையான கண்ணியமும் சிறப்பும் உயர்வும் அனைத்தையும் படைத்த அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு அவனது வழிகாட்டலைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு மட்டுமே உண்டு.

இவ்வாறான அடிப்படை உண்மைகளை மேலுள்ள அல்-குர்ஆன் வசனம் சுட்டிக்காட்டியுள்ளது. இதன் அடிப்படையிலேயே நபி (ஸல்) அவர்களும் அன்றைய ஜாஹிலிய்யாக்கால மக்களை ஒற்றுமைப்படுத்த அழைப்பு விடுத்தனர்.

நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட காலத்தில் அவர்களைச் சூழ வாழ்ந்த சமூகத்தில் சகோதரத்துவம், ஒற்றுமை என்பன அறவே கிடையாது என்ற நிலையே காணப்பட்டது. அப்போது வாழ்ந்த மக்கள் குடும்பங்களின் அடிப்படையிலும், குலங்கள் கோத்திரங்களின் அடிப்படையிலும் பிளவுபட்டுக் கிடந்தனர். சில குலங்கள் உயர்வானவையாகவும் மற்றையவை தாழ்வானவை யாகவும் கருதப்பட்டன. உயர் குலத்துக்கு விஷேட அந்தஸ்து, அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சின்னஞ்சிறு விடயங்களுக்கெல்லாம் சண்டை பிடித்துக் கொள்வார்கள். இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் சிறு பிணக்கு சில வேளைகளில் இரண்டு கோத்திரங்களுக்கிடையிலான பெரும் போராக மாறி பல ஆண்டுகளாக நீடிக்கும் நிலைகூடக் காணப்பட்டது. அரேபியத் தீபகற்பத்தில் மாத்திரமன்றி முழு உலகிலுமே இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. உதாரணமாக, இந்தியா போன்ற ஒரு சில நாடுகளில் வாழும் குறிப்பிட்ட மக்களிலுள்ள உயர் சாதியினர் கீழ் சாதியினரை ஹரிஜனர்கள் என ஒதுக்கி, அவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதி, அவர்களுடன் எவ்விதத் தொடர்புகளையும் வைத்துக்கொள்ளாத நிலை இன்றும் கூடக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையிலே இஸ்லாம் எனும் புனித மார்க்கத்தின் இறுதித் தூதுவராக வந்த நபி(ஸல்) அவர்கள் மனிதர்கள் அனைவரும் சமமே, அவர்கள் அனைவரும் சகோதரர்களே என்று போதித்தார்கள்.

இந்த அடிப்படையில் நோக்கும் போது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சமூகத்தை இரு பெரும் சக்திகளின் அடிப்படையில் கட்டியெழுப்பினார்கள்.

1. ஈமானியப் பலம்
2. சகோதரத்துவப் பலம்

இவ்விரு சக்திகளும் தான் இஸ்லாத்தை வெற்றி பெறவைத்தன. இஸ்லாமிய மார்க்கத்தை உலகளாவிய மார்க்கமாக மாற்றியமைத்தன.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> **"முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்புக்கும் பரிவுக்கும் இரக்கத்துக்கும் உதாரணமாக ஓர் உடலைக் குறிப்பிடலாம். உடலில் ஒரு உறுப்புக்கு நோய் ஏற்பட்டுவிட்டால் ஏனைய உறுப்புக்கள் எல்லாம் தூக்கமின்மை, காய்ச்சல் என்பனவற்றால் பீடிக்கப்பட்டு வருத்தத்தை உணருகின்றன".** (புகாரி முஸ்லிம்.)

இந்த ஹதீஸின் மூலமாக முஸ்லிம் சமூகமானது, நாடுகளின் எல்லைகளைக் கடந்து, இன குல வேறுபாடுகளைக் கடந்து, வர்க்க முரண்பாடுகளைக் கடந்து ஈமானிய சக்தியால் பிணைக்கப்பட்டவர்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள், அவர்கள் உலகின் எந்த மூலை முடுக்குகளில் வாழ்ந்த போதிலும் சரியே என்ற விடயங்களை உணர முடிகின்றது.

ஒரு முஸ்லிம் உலகின் எந்த மூலையில் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டாலும் அந்த வேதனையை முழு முஸ்லிம் சமூகமும் உணர வேண்டும். அதன் பயனாக அவ்வேதனையை களைய முயற்சிப்பதோடு அதனை நீக்கவும், முழு முஸ்லிம் சமூகத்துக்கும் சுபீட்சம் ஏற்படவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

> **"யார் முஸ்லிம்களின் விவகாரங்களில் கவனம் செலுத்தவில்லையோ அவர் அவர்களைச் சேர்ந்தவர்களல்லர்"** (தபரானி)

அதாவது முஸ்லிம்களின் விடயங்களில் ஈடுபாடு கொண்டு அவர்களது நல்வாழ்வுக்காக, அவர்களைப் பாதுகாப்பதற்காக யார் முயற்சிகள் செய்ய வில்லையோ அவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது இந்த ஹதீஸின் கருத்தாகும்.

சகோதரத்துவ உணர்வைப் பேணாமல் முஸ்லிம்கள் தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டு பிளவுண்டு அதன் விளைவாக அவர்களுக்கு பல பின்னடைவுகள் ஏற்படும் என்பதையும் அல்-குர்ஆனும் ஹதீஸ்களும் கூறிக் காட்டுகின்றன.

> **"அல்லாஹ்வின் கயிற்றை (குர்-ஆனை) நீங்கள் அனைவரும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள்.** (2 : 103)

**"அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் முரண்பட்டுக்கொள்ளாதீர்கள். அதனால் நீங்கள் தோல்வியடைவீர்கள். உங்கள் பலம் போய்விடும். நீங்கள் பொறுமையோடு இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களோடு உள்ளான்.** (8 : 46)

முஸ்லிம் சமூகம் பலமிழந்து அந்நிய சமூகத்துக்கு முன்னால் அவமானப்பட்டு நிற்பதற்கும் தோல்விகளைத் தழுவுவதற்கும் தலையாய காரணி, அவர்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதை மறந்து, பிளவுண்டு போனதே என்பதை இவ்வசனங்கள் தெளிவுபடுத்துவதை நாம் உணர வேண்டும்.

## சகோதரத்துவ உணர்வைப் பலப்படுத்துவதற்காக இஸ்லாம் காட்டும் வழிகாட்டல்கள்

முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் இறுக்கமான பிணைப்பும் சகோதரத்துவமும் நிலவ வேண்டும் என்பதற்காக இஸ்லாம் பல வழிமுறைகளைக் கையாளுமாறு கட்டளையிட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

### 01. வணக்க வழிபாட்டைக் கூட்டாக நிறைவேற்றல்.

தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் முதலிய கடமையான வணக்க வழிபாடுகள் யாவும் கூட்டாக நிறைவேற்றப்படுவதை இஸ்லாம் வலியுறுத்தி யுள்ளது. இதற்கான காரணங்களுள் தலையாயது சகோதரத்துவம், சமத்துவம் முதலியவற்றைக் கட்டி வளர்ப்பதாகும்.

### 02. உறவினரைச் சேர்ந்து நடத்தல்.

உறவினர்களைச் சேர்ந்து நடத்தல், அவர்களுக்கான உரிமையை வழங்குதல் என்ற இந்த விடயமும் சமூகத்தின் மத்தியில் சகோதரத்துவத்தை கட்டி யெழுப்பும் நோக்கிலேயே கடமையாக்கப்பட்டுள்ளது.

**"நிச்சயமாக அல்லாஹ் நேர்மையையும், பிறருக்கு உதவுவதையும், உறவினருக்கு தர்மம் வழங்குவதையும் கைக்கொள்ளும்படி ஏவுகின்றான்."** (16 : 90)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"எந்த சமூகத்தில் உறவினரைத் துண்டித்து வாழ்பவன் உள்ளானோ அந்த சமூகத்துக்கு அல்லாஹ்வின் அருள் இறங்காது.** (பைஹகி)

முஸ்லிம் சமூகத்தில் ஏற்படும் சகோதரத்துவம் அல்லாஹ்வின் அருள் மூலமே ஏற்படுகிறது என பல குர்-ஆன் வசனங்கள் தெரிவிக்கின்றன.

### 03. அயலவர் உரிமைகளைப் பேணுதல்

ஒரு முஸ்லிம் தனது அயலவர் விடயத்தில், அவர் வேற்று மதத்தவராக இருந்த போதிலும் கூட, மிகவும் கரிசனையுடன் நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் பணிக்கின்றது. இதற்கான காரணமும் சமூகத்திற்குள் சகோதரத்துவ உணர்வைக் கட்டியெழுப்புவதேயாகும்.

உதாரணத்திற்கு நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம்:

**நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை "அல்லாஹ்வின் மீது ஆணையாக இவன் மூ.்.மினாகமாட்டான்" எனக் கூறிய போது அவர்களிடம் "யார் அத்தகையவன்?" என வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் "யாருடைய தீங்குகளை விட்டும் அவனது அயலவன் பாதுகாப்பு பெறவில்லையோ அத்தகையவன்" எனப் பதிலளித்தார்கள்.** (புகாரி, முஸ்லிம்)

### 04. பிறருக்கு உதவுவதும் அவர்களின் குறைகளை மறைப்பதும்

சகோதரத்துவ வாஞ்சையுடன் பிற மனிதர்களுக்கு உதவுவதையும் அவர்களின் குறைகளை மறைப்பதையும் சமூகத்துக்கு மத்தியில் சகோதரத்துவம், ஒற்றுமை வளர்வதற்கான அடிப்படை அம்சங்களுள் ஒன்றாக இஸ்லாம் கருதுகிறது. இதனைப் பேணி வாழும் ஒரு மூ.்.மினுக்கு அல்லாஹ் தஆலாவின் உதவி இம்மையிலும், மறுமையிலும் கிட்டுவதாகவும் கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"யார் ஒரு மு.்.மினின் இவ்வுலகத் துன்பம் ஒன்றை நீக்கி விடுகின்றாரோ; அல்லாஹுத்தஆலா அவரின் மறுமைத் துன்பம் ஒன்றை நீக்கி விடுவான்."**

**"யார் ஒரு முஸ்லிமின் குறையொன்றை இவ்வுலகில் மறைத்து விடுகின்றாரோ; அல்லாஹுத்தஆலா அவரின் குறையை இவ்வுலகிலும் மறுவுலகிலும் மறைத்துவிடுவான்"**

**"ஒரு அடியான் தனது சகோதரனுக்கு உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹுத்தஆலா அவ்வடியானுக்கு உதவி புரிகின்றான்."** (முஸ்லிம்)

**05. பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பேணி நடத்தல்.**

நபி (ஸல்) அவர்கள் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் பின்வரும் ஹதீஸில் பட்டியலிட்டுக் கூறியுள்ளார்கள். அவற்றைப் பேணி நடந்து கொள்ளும் போது இஸ்லாம் எதிர்பார்க்கும் சகோதரத்துவம் வளர்ச்சியடையும்.

**"ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு செய்யவேண்டிய கடமைகள் ஐந்தாகும் : ஸலாத்துக்குப் பதிலளித்தல், நோயாளியைத் தரிசித்தல், ஜனாஸாவைப் பின் தொடரல், அழைப்புக்குப் பதிலளித்தல், தும்மினால் அவனுக்காகப் பிரார்த்தித்தல் ஆகியவையாகும்" என நபியவர்கள் கூறினார்கள்.** (புகாரி, முஸ்லிம்)

**06. சகோதரத்துவத்தைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர்ந்து கொள்ளல்.**

கோள், புறம்பேசுதல், ஒருவரை ஒருவர் குறை கூறல், பரிகசித்தல், மற்றவர்களின் விடயங்களில் தேவையில்லாமல் தலையிடுதல், பட்டப்பெயர் சூட்டுதல், சண்டையிடுதல், பேசாமல் இருத்தல், முதலிய மனித உறவுகளைப் பாதிக்கும் விடயங்களை முற்றாக தவிர்ந்து கொள்ளுமாறு அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் வலியுறுத்தி கொண்டிருக்கின்றன.

அல் குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான் :

**"நிச்சயமாக மூ∴மின்கள் அனைவரும் சகோதரர்களே. எனவே உங்களது இரு சகோதரர்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத் துங்கள். அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள், உங்கள் மீது கருணை காட்டப்படலாம்."**

**"விசுவாசிகளே! ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்யவேண்டாம்; (பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச்சிறந்தவர்களாக இருக்கலாம் ; (அவ்வாறே) எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம் ; பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச் சிறந்தவர்களாக இருக்கலாம். உங்களில் சிலர் சிலரை குறை கூறவும் வேண்டாம். உங்களில் சிலர் சிலரை (அவருக்கு வைக்கப்படாத) பெயர்களால் அழைக்கவும் வேண்டாம் ; விசுவாசங் கொண்ட பின்னர் ; (தீயவற்றை குறித்துக் காட்டும்) தீய பெயர் (கூறுவது) மிகக் கெட்டதாகிவிட்டது ; எவர்கள் (இவைகளிலிருந்து) தவ்பாச் செய்து மீளவில்லையோ அவர்கள் அநியாயக்காரர்கள். விசுவாசிகளே ! (தவறான) எண்ணத்தில்**

**பெரும்பாலனவற்றை நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள் ; (ஏனெனில்) நிச்சயமாக எண்ணத்தில் சில பாவமாகும் ; (எவருடைய குறை களையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்கவும் வேண்டாம். உங்களில் சிலர் சிலரைப் புறம் பேசவும் வேண்டாம். உங்களில் யாதொருவர் தன்னுடைய சகோதரரின் மாமிசத்தை (அவர் இறந்து) சவமாயிருக்கும் நிலையில் புசிக்க விரும்புவாரா? அப்போது அதை நீங்கள் வெறுத்து விடுவீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (பாவத்திலிருந்து தவ்பாச் செய்து மீள்வோரின்) பாவமீட்சியை ஏற்பவன். மிகக் கிருமையுடையவன். (49 : 12)**

எல்லாம் அறிந்த அல்லாஹுத்தஆலா மேலுள்ள வசனங்களில் முஸ்லிம் சமூகத்துக்குள் பிரச்சினைகளையும் பிளவுகளையும் உண்டாக்கி நாளடைவில் சகோதரத்துவத்தை சின்னாபின்னமாக்கக்கூடிய சிறிய விடயங்களாக நாம் நினைக்கக்கூடிய விடயங்களைக் கூடத் தவிர்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டிருப்பதை அவதானிக்கலாம்.

நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளும் இவ்வாறான விடயங்களையிட்டு எம்மை எச்சரிக்கை செய்கின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"சந்தேகத்தின் அடிப்படையில் யூகங்கள் கொள்வதையிட்டு உங்களை எச்சரிக்கின்றேன். ஏனெனில் யூகம் என்பது பெரும் பொய்யாகும். நீங்கள் மற்றவர்களின் குறையை ஆராய்ந்து திரியாதீர்கள். ஒருவரை ஒருவர் உளவு பார்க்காதீர்கள். ஒருவரை மண் கவ்வச் செய்யும் வகையில் போட்டி போடாதீர்கள். ஒருவர் மீது மற்றவர் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவரை ஒருவர் வெறுக்காதீர்கள். ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சி செய்யாதீர்கள். அல்லாஹ் கட்டளையிட்ட வண்ணம் அவனது அடியார்களாக - சகோதரர்களாக இருங்கள். ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான். அவன் மற்றவனுக்கு அநியாயம் இழைக்கமாட்டான். அவனுக்கு சதிசெய்யமாட்டான். அவனை இழிவுபடுத்தமாட்டான். இவ்வாறு கூறிய நபி (ஸல்) அவர்கள் "இறையச்சம் என்பது இங்கு தான் உள்ளது என மூன்று முறை கூறி தமது நெஞ்சினை சுட்டிக்காட்டினார்கள்."** (புகாரி முஸ்லிம்)

மேலுள்ள குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களிலிருந்து இஸ்லாமிய மார்க்கத்தில் சகோதரத்துவம் எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனையும் அதனைப் பேணி வாழ்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் தலையாய கடமை என்பதனையும்

விளங்கிக் கொள்ளலாம். நாமும் இஸ்லாத்தின் வழியில் சகோதரர்களாக வாழ திடசங்கற்பம் பூணுவோமாக.

### வாய்மை

வாய்மை என்பது உண்மை பேசுவதை மட்டுமன்றி; உண்மையாக நடந்து கொள்வதையும் குறிக்கின்றது. ஒவ்வொரு மூ.ஃ.மினிடத்திலும் அத்தியாவசியம் அமைந்திருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்றாக இதனை அல்-குர்ஆனும், ஹதீஸும் வலியுறுத்தியிருப்பதைக் காணலாம்.

"ஈமான் கொண்டவர்களே ! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்; உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள்" (அல்-குர்ஆன் 9: 119)

அல்லாஹ்விடத்தில் சுவன இன்பங்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய, இறையச்சமுடைய மனிதர்கள் யார் என்பதைப் பற்றி அல்குர்ஆன் விளக்குகின்ற போது, அவர்களின் முக்கியமான பண்புகளுள் ஒன்றாக 'வாய்மை' என்ற பண்பைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

**"அவர்கள் பொறுமையாளர்களாகவும், உண்மையாளர்களாகவும், இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்டு நடப்பவர்களாகவும், தானம் செய்கின்றவர்களாகவும், பின்னிரவு வேளைகளில் பாவமன்னிப்புக் கோருபவர்களாகவும் இருப்பர்".** (3 : 17)

உண்மை பேசுவதும் உண்மையாக நடந்து கொள்வதும் ஈமானுடனும், இறையச்சத்துடனும் தொடர்புபட்டனவாகும். இப்பண்புகள் எவரிடம் இல்லையோ, அவரின் ஈமான் மிகவும் பலவீனமானதும் பாதிக்கப்பட்டதுமாகும். இத்தகையவர் இறையச்சம் உடையவராகவும் திகழமாட்டார்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் :

**"நிச்சயமாக உண்மையானது நன்மையின் பால் வழிகாட்டும். நன்மை யானது சுவனத்தின்பால் இட்டுச்செல்லும். ஒருமனிதன் தொடர்ந்தும் உண்மை உரைத்துக் கொண்டிருந்தால் அல்லாஹ்விடத்தில் "சித்தீக்" (உண்மையாளன்) என எழுதப்படுவான். நிச்சயமாக பொய்யானது பாவத்தின் பால் வழிகாட்டும். பாவமானது நரகத்தின் பால் இட்டுச்**

**செல்லும். ஒரு மனிதன் தொடர்ந்தும் பொய்யுரைப்பானேயாயின் அவன் அல்லாஹ்விடத்தில் “பொய்யன்” எனப் பதியப்படுவான்.** (புகாரி, முஸ்லிம்)

உண்மையென்பது நிலையானது. பொய்மை அழியக்கூடியது. எனவே உண்மைதான் மனநிம்மதியையும், ஆறுதலையும் தரக்கூடியது. பொய் நிம்மதியின்மையையும், கிலேசத்தையும் ஏற்படுத்தக்கூடியது. இக் கருத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் தெளிவு படுத்துகின்றார்கள்:

**"நீ சந்தேகமானவற்றை விட்டு விட்டு சந்தேகம் இல்லாதவற்றைக் கடைப்பிடிப்பாயாக. ஏனெனில் உண்மை என்பது உள அமைதியாகும். பொய் என்பது மனக்கலக்கம்-சந்தேகமாகும்.** (ஆதாரம் - திர்மிதி)

ஒரு மனிதன் வியாபாரத்திலும், மற்றும் இதர தொழில் நடவடிக்கை களிலும் தனது கொடுக்கல், வாங்கல் எல்லாவற்றிலுமே உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அவனது அத்தொழில் முயற்சியில் பரக்கத்தும் அபிவிருத்தியும் ஏற்பட்டு அது வளர்ச்சியடையும். அவ்வாறில்லையேல் அதாவது அவனது முயற்சியில் பொய் கலந்திருக்குமாயின் அது அழிந்து விடும். அதில் எந்தவித வளர்ச்சியும் இருக்காது.

நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸ் இதனைத் தெளிவுபடுத்துகின்றது:

**“விற்போன், வாங்குபவன் ஆகிய இருவரும் தமக்கிடையே உண்மையை பேசிக்கொண்டு வெளிப்படையாக நடந்து கொள்வார்க ளாயின் அவர்களது வியாபாரத்தில் பரகத் (அபிவிருத்தி) ஏற்படும். அவர்கள் விடயங்களை மறைத்துக் கொண்டு தமக்கிடையே பொய் சொல்லிக்கொண்டால் அவர்களது வியாபாரத்தின் “பரகத்” அழிக்கப் பட்டுவிடும்.”** (புகாரி, முஸ்லிம்)

உண்மை எவ்வாறு இவ்வுலகில் புகழையும், உயர்வையும் வெற்றியையும் அளித்து மறுமையில் சுவனத்தில் நுழையவைக்குமோ அதற்கு எதிர்மறையாக பொய் என்பது இவ்வுலகிலும் இழிவைத் தந்து மறுஉலகிலும் நரகில் நுழைய வைக்கும் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொய் சொல்வதை “முனாபிக்” என்னும் நயவஞ்சகனின் பண்புகளுள் ஒன்றாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் “பொய் சொல்லும் பண்பை

நபி (ஸல்) அவர்கள் வெறுத்ததைப் போன்று வேறு எந்நப் பண்பையும் வெறுத்ததில்லை" (அஹ்மத்) எனும் கிரந்தத்தில் பதிவாகியுள்ளது.

ஒரு முஸ்லிமிடம் பொய் பேசும் பண்பு இருக்கக் கூடாது என்பதனை நபியவர்களின் பின்வரும் பொன் மொழியிலிருந்து அறியலாம்.

**ஒரு மு.்.மின் கோழையாக இருப்பானா? என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கவர்கள் "ஆம்" என்றார்கள். ஒரு மூ.்.மின் உலோபியாக இருக்க முடியுமா? என வினவப்பட்டது. அதற்கும் நபியவர்கள் "ஆம்" என்றார்கள். ஒரு மு.்.மின் பொய்யனாக இருக்க முடியுமா? என வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் "இல்லை" என்றார்கள்.** (முஅத்தா ; மாலிக்)

ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்கள் முதலான பொறுப்பு வாய்ந்தவர்கள் உண்மை உரைப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதில் இஸ்லாம் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு மாறாக அவர்கள் பொய் பேசுபவர்களாக - பொய்யான வாக்குறுதிகளை வழங்குபவர்களாக, உண்மைக்கு மாறான செய்திகளைப் பிரசுரிப்பவர்களாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்துவிடும். இதனால் தான் பொய்யர்களுக்கான தண்டனையும் மிகக் கடுமையானது என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**"இன்றிரவு என் கனவில் இரு மனிதர்கள் (மலக்குகள் மனித உருவத்தில்) வந்தார்கள். (அவர்கள் சில காட்சிகளைக் காட்டிவிட்டு) என்னிடம் பின்வருமாறு கூறினார்கள்: "நீர் கண்ணுற்ற கடைவாய் கிழிக்கப்பட்டு கொடூரமாக வேதனை செய்யப்படும் மனிதனோ பொய்யனாவான் - அவன் கூறிய பொய் இவ்வுலகம் முழுக்கப் பரவும் வண்ணம் இருந்தது. இப்படியே மறுமை நாள் வரை அவன் வேதனை செய்யப்படுவான்." என அம்மலக்குகள் கூறினார்கள்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** (புஹாரி)

"மூன்று மனிதர்கள் சுவனம் நுழையவே மாட்டார்கள்," எனக் கூறிய நபியவர்கள் அம் மூவரையும் குறிப்பிட்டுக்காட்டினார்கள் :

**01. விபச்சாரம் செய்யும் வயோதிபன்.**
**02. பொய் சொல்லும் தலைவன்.**
**03. பெருமையடிக்கும் ஏழை.** (பஸ்ஸார்)

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை உண்மை பேசுவதற்குப் பயிற்சியளித்து வளர்க்க வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது.

**“ஒரு பிள்ளையைப் பார்த்து ஒருவர் ஒரு பொருளைத் தருவதாகக் கூறி அழைத்தால் அவர் அவசியம் அப்பொருளை அப்பிள்ளைக்கு வழங்க வேண்டும். இல்லையேல் அது பொய் கூறியதாக அமையும்.”** (அஹ்மத்)

உண்மை தொடர்பான இஸ்லாத்தின் மற்றொரு நிலைப்பாடு என்னவெனில் விளையாட்டு, கேலிக்குக் கூட உண்மைதான் பேசப்பட வேண்டும் என்பதாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**“ஒரு கூட்டத்தை சிரிப்பூட்டச் செய்வதற்காக பொய்யுரைக்கும் ஒரு மனிதனுக்கு கேடு உண்டாகட்டும்! கேடு உண்டாகட்டும்!! கேடு உண்டாகட்டும்!!!”** (திர்மிதி)

பிறரிடம் இருந்து எதையாவது பெற்றுக் கொள்ளும் நோக்கில் உண்மைக்கு மாறாக முகஸ்துதிக்கு புகழ்வதும் இஸ்லாத்தின் பார்வையில் கண்டிக்கப்பட்டதாகும். முகஸ்துதிக்காக உண்மைக்கு மாறாகப் புகழும் இவ்வாறானவர்களின் முகங்களில் மண்ணை அள்ளி வீசுமாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

சாட்சியங்கள் அளிக்கும் போதும், நற்சான்றிதழ்கள் வழங்கும் போதும் உண்மையைப் பேணிக் கொள்ள வேண்டும். ஏனெனில் இவை உண்மைக்கு மாறாக அமையும் போது அது பெரும்பாவமான பொய்ச் சாட்சியாக அமைந்துவிடும்.

**“நபி (ஸல்) அவர்கள் பொய் சொல்வதையும், பொய்ச் சாட்சியம் அளிப்பதையும் மிகப் பெரும் பாவமாகக் குறிப்பிட்டுக் காட்டினார்கள்”.** (புஹாரி ; முஸ்லிம்)

**நபியவர்கள் ஒரு முறை “பெரும் பாவங்களை உங்களுக்கு அறியத் தரட்டுமா?” என வினவினார்கள். அதற்கு நாங்கள் “அல்லாஹ்வின் தூதரே அறியத் தாருங்கள் என்றோம்.” அதற்கு நபியவர்கள், “அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, பெற்றோருக்கு உபத்திரவம் புரிவது” என்று கூறி விட்டு சாய்ந்து உட்கார்ந்திருந்த நபியவர்கள் எழுந்து உட்கார்ந்து கொண்டு “அறிந்து கொள்ளுங்கள்! பொய் சொல்வது! பொய் சொல்வது!! எனத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே யிருந்தார்கள்.” நபியவர்கள் மௌனமாக இருக்கமாட்டார்களா என**

**நாங்கள் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு இவ்வாறு சொல்லிக் கொண்டேயிருந்தார்கள்.** (புகாரி, முஸ்லிம்)

ஏனையவற்றைக் கூறும் போது சாய்ந்து உட்கார்ந்திருந்த நபி (ஸல்) அவர்கள் பொய் பற்றிக் கூறும் போது எழுந்து உட்கார்ந்தமையும், திரும்பத் திரும்ப அதனைக் கூறியமையும் அதன் பாரதூரத் தன்மையைக் காட்டும் விடயங்களாகும்.

உண்மையை இஸ்லாம் எந்தளவுக்கு கடைப்பிடிக்குமாறு ஏவியுள்ளது என்பதற்கு பின்வரும் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழியும் தகுந்த ஆதாரமாய் உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**“உண்மையைப் பேசுவதில் அழிவு ஏற்படும் என நீங்கள் அஞ்சினாலும் கூட உண்மையையே நீங்கள் கைக் கொள்ளுங்கள். ஏனெனில் அதில் தான் வெற்றியிருக்கின்றது.”** (இப்னு அபித்துன்யா)

மேலுள்ள விடயங்களிலிருந்து உண்மையின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட நாம் எமது வாழ்வில் என்றும் உண்மை என்ற நற்பண்பைக் கடைப்பிடிக்க திடசங்கற்பம் பூணுவோம்.

**நாணயம்**

நாணயம் என்பது பரந்துபட்ட கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சொல்லாகும். இதனை சுருக்கமாக பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம் :

“பொறுப்புக்களை உரிய முறையில் பேணி நடந்து கொள்வதுடன் தொடர்பான நம்பிக்கைசார் பண்பே நாணயம்” ஆகும்.

அல்லாஹுத்தஆலா புனித குர்ஆனில் இது பற்றிக் குறிப்பிடும் போது :

**“நிச்சயமாக அல்லாஹ் அமானிதங்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விடுமாறு உங்களுக்குக் கட்டளையிடுகிறான்.”** (4 : 58)

மற்றொரு திருவசனத்தில் அமானிதம் என்ற பொறுப்பைச் சுமந்து கொண்ட மனிதகுலத்தைப் பற்றி அல்லாஹுத்தஆலா இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

**“நிச்சயமாக நாம், “அமானிதம் என்ற பொறுப்பைச் சுமந்து கொள் கிறீர்களா? என வானங்கள், பூமி, மலைகள் ஆகியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை மிகவும் பயந்து போய் விலகிக்**

**கொண்டன. அதனை மனிதன் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் (அமானிதத்தை நிறைவேற்றும் விசயத்தில்) மிகவும் அநியாயக் காரனாக (அதன் கடமையை அறியாதவனாக இருக்கின்றான்) உள்ளான்."** (அல்-குர்ஆன் 33:72)

மேலுள்ள திருவசனத்தில் அமானிதம் என்பது பெரும் பொறுப்பு என்பதும் அதனைச் சுமந்து கொண்ட மனிதனோ அதனை முறையாக நிறைவேற்ற முடியாது அநியாயக்காரனாக மாறுகிறான் என்பதும் மிகவும் சிறப்பாக சித்தரிக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்னரே அமானிதங் களைப் பேணுவதில் புகழ் பெற்றிருந்தார்கள். அதாவது நாணயம் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். இதனால் அவர்கள் "அல்-அமீன்" என்ற சிறப்புப் பெயரால் மக்கா வாசிகளால் அழைக்கப்பட்டார்கள்.

சாதாரண பொதுமக்களைப் பொறுத்தவரை நம்பிக்கைக்காகப் பேணிப் பாதுகாத்துத் தருமாறு தம்மிடம் ஒப்படைக்கப்படும் பொருட்களை அவ்வாறு பாதுகாத்து ஒப்படைப்பது மட்டுமே அமானிதம் - நாணயம் என நினைக்கின்றார்கள். ஆனால் இது ஒரு குறுகிய விளக்கமாகும்.

உண்மையில் அமானிதம் என்பது விரிவான விளக்கங்களைக் கொண்டது. பின்வரும் ஹதீஸை நோக்கினால் அமானிதம் என்பதை இஸ்லாம் மிகவும் விரிவான கருத்தில் கையாளுகின்றது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

**"நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களே. உங்களின் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் விசாரணை செய்யப்படுவீர்கள். இமாம் - தலைவர் ஒரு பொறுப்புமிக்கவராவார். அவரது பொறுப்பு பற்றி அவர் கேள்வி கேட்கப்படுவார். ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பத்தின் மீது பொறுப்புடையவனாவான். அவன் அது பற்றி வினவப்படுவான். ஒவ்வொரு பெண்ணும் தனது கணவனின் வீட்டில் பொறுப்பு மிக்கவளாவாள். அவள் அது பற்றி விசாரிக்கப்படுவாள். ஒரு தொழிலாளி தனது எஜமானின் உடமைக்குப் பொறுப்பாளியாவான். அவன் அது பற்றி கேள்வி கேட்கப்படுவான்.** (புகாரி, முஸ்லிம்)

**அமானிதம் பேணல்** - நாணயத்துடன் நடத்தல் வாழ்வின் பல்வேறு பகுதிகளைத் தழுவியது என்பதை மேலுள்ள ஹதீஸிலிருந்து அறியலாம்.

அத்தகைய பல்வேறு பகுதிகளைச் சுருக்கமாகப் பின்வருமாறு நோக்கலாம்.

1. **தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிறரது பொருட்ளைப் பாதுகாத்தல்.**

நபி (ஸல்) அவர்கள் தான் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்பிருந்தே இந்த விடயத்தில் மிகவும் நாணயத்துடன் நடந்து கொண்டார்கள்.

மக்காவாசிகள் அவர்களிடம் பேணிப் பாதுகாப்பதற்காக மிகப் பெறுமதி வாய்ந்த பல்வேறு பொருட்களை ஒப்படைப்பார்கள். அவை எல்லாவற்றையும் அப்படியே பாதுகாத்து சிறிதும் குறைவு செய்யாமல் அவர்கள் உரியவர் களிடம் ஒப்படைப்பார்கள். இத்தகைய பண்பின் காரணமாக அவர்கள் நபியாக அனுப்பப்பட்டதன் பின்பு அவர்களை நபியென ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட தமது பொருட்களை அவர்களிடம் ஒப்படைப்பதைக் கைவிடவில்லை. இதனாலேயே அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லும் போது கூட பிறரிடம் ஒப்படைக்கவேண்டிய பொருட்கள் பல அவர்களிடமிருந்தன. அவற்றை யெல்லாம் உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுகளைச் செய்து விட்டுத்தான் அவர்கள் சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இதன் அவசியத்தைப் பின்வருமாறு விளக்கினார்கள் :

**“தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களைப் பாதுகாக் கத்தவறியவன் ஈமானை இழந்தவன். தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாதவன், இஸ்லாத்தைப் புறக்கணித்தவன்.”** (அஹ்மத்)

2. **தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட பதவியை, பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றல்.**

பதவிகளில் அமர்ந்து கொண்டு நாணயமாக நடப்பது என்பது மிகவும் முக்கியமானது. ஒரு மு.ஃமினின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்றாக இக்குணவியல்பு காணப்படல் வேண்டும். பதவிகளும் பொறுப்புக்களும் அவற்றுக்குத் தகுதியானவரிடம் ஒப்படைக்கப்படும் போதுதான் இத்தகைய சிறப்பான நிலையை எதிர்பார்க்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் பதவிகளை வழங்கும் போதும், பொறுப்புக்களை கையளிக்கும் போதும் அதற்குத் தகுதியானவரைத் தெரிவு செய்தே கையளித்தார்கள்.

**அபூதர் (ரழி) அவர்கள் தன்னை ஏதேனும் ஒரு பிரதேசத்திற்கு ஆளுநராக நியமிக்குமாறு நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட போது நபியவர்கள், “அபூதர்ரே! நீர் பலவீனமானவர். இந்தப் பொறுப்பு ஓர்**

**அமானிதமாகும். இறுதித் தீர்ப்பு நாளில் கண்ணியத்தை இழக்கும் அவமானமானதொரு நிலைக்கு இட்டுச் செல்லும். எனினும் இந்தப் பொறுப்பை அதன் எல்லாச் சுமைகளுடனும் ஏற்றுக் கொண்டு ; ஏற்றுக் கொண்டவைகளை நிறைவு செய்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள்." எனக் கூறி பதவியின் பாரதூரத் தன்மையை விளக்கிக் காட்டினார்கள்.** (முஸ்லிம்)

பதவிகள், பொறுப்புக்கள் என்பன துஷ்பிரயோகம் செய்யப்படுவதும், வீணடிக்கப்படுவதும் மறுமை நாளின் அடையாளங்களாகும். அதாவது மறுமை நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் தீய நிகழ்வுகளில் இதுவும் அடங்கும்.

**"நபியவர்களிடம் ஒரு மனிதர் மறுமை நாள் எப்போது ஏற்படும்? என வினவினார். அதற்கு நபியவர்கள் "அமானிதம் வீணடிக்கப்பட்டால் மறுமையை எதிர்பார்ப்பீராக" என்றார்கள். அதற்கு அம் மனிதர் "அமானிதம் எவ்வாறு வீணடிக்கப்படும்?" என வினவினார். அதற்கு நபியவர்கள் "தகுதியற்றவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் மறுமையை எதிர்பார்ப்பீராக" என்றார்கள்.** (புஹாரி)

### 3. இரகசியம் பேணல்

பிறர் நம்மை நம்பிக்கூறும் இரகசியங்களும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய அமானிதமாகும். இது தொடர்பிலும் நாணயத்துடன் நடந்து கொள்வது அவசியமாகும்.

ஒருவர் நம்மிடம் அவரது இரகசியங்களில் சில விடயங்களைக் கூறி நம்மிடம் ஆலோசனை கேட்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவரது இரகசியங்களைப் பாதுகாப்பதும், அவருக்கு விசுவாசமாக நடந்து கொள்வதும் நமது கடமையாகும்.

இவ்வாறே கணவனும், மனைவியும் ஒருவருக்கு ஒருவர் நாணயத்துடன் நடந்து கொள்ள வேண்டும், ஒருவர் மற்றவரின் இரகசியங்களை அம்பலப்படுத்தக் கூடாது என இஸ்லாம் கண்டிப்பான உத்தரவை இட்டுள்ளது.

**"இறுதித் தீர்ப்புநாளில் மிகப் பெரும் மோசடிக்காரனாக இறைவன் முன்னால் நிற்பவன் யார் தெரியுமா?"** என வினவிய நபி (ஸல்) அவர்கள், பின்வருமாறு கூறினார்கள் :

**"ஒருவன் தன் மனைவியை அதிகமாக நேசிப்பான். ஆனால், அவன் தன் மனைவியின் இரகசியங்களை அடுத்தவர்களிடம் சொல்வான். அவனே அத்தகையவன்"** (முஸ்லிம்)

### 4. தனது சொத்துக்களையும் திறமையையும் உரிய முறையில் பயன்படுத்தல்

ஒரு மனிதனுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களும், திறமையும், விசேட ஆற்றல்களும் இறைவனின் அமானிதங்களாகும். இவற்றை இறை திருப்தியைப் பெறும் வகையில் தனக்காகவும் சமூகத்துக்காகவும் நாணயத்துடன் ஒரு மனிதன் பயன்படுத்த வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அவ்வாறில்லாதபோது மறுமையில் அவன் நஷ்டவாளி யாகிக் கைசேதப்பட வேண்டிய நிலைக்கு ஆளாவான்.

அமானத் - நாணயம் எனும் பண்பின் விரிவான இக்கருத்துக்களை விளங்கி நடைமுறையில் கைக்கொள்ளும் போது ஒவ்வொரு மு.ஃ.மினும் இறை திருப்தியைப் பெற்று வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

## மன்னிக்கும் மனப்பான்மை

மன்னிக்கும் மனப்பான்மை, அல்லாஹ் மனிதர்களிடம் எதிர்பார்க்கும் முக்கியமான நற்பண்புகளுள் ஒன்றாகும். அல்லாஹுத்தஆலா மிகப் பெரும் மன்னிப்பாளனாக இருக்கின்றான். அவன், அவனது அடியார்கள் செய்கின்ற குற்றங்களை – தவறுகளை மன்னிக்கின்றான். அதே போன்று தனது அடியார்கள் தங்களுக்குள் தவறுகள், பிழைகள் நடந்து விடும் போது ஒருவரையொருவர் மன்னிக்கும் உயர் பண்பு பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான்.

அல்-குர்ஆன் கூறுகின்றது:

**"அவர்கள் (இறையச்சம் உள்ளவர்கள்) இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்வுக்காக செலவு செய்வார்கள்; கோபத்தை அடக்கிக் கொள்வார்கள்; மனிதர்களை மன்னிப்பவர்களாகவும் இருப்பார்கள். அல்லாஹுத்தஆலா உபகாரம் செய்பவர்களை விரும்புகின்றான்" (3 : 134)**

மேலுள்ள திருக்குர்ஆன் வசனம் இறையச்சம் உள்ளவர்களின் முக்கிய பண்புகள் சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. அவற்றுள் ஒன்றாக மன்னிக்கும் மனப்பான்மையையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

நபி (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறுகின்றான் : **“மன்னிக்கும் பண்பைக் கைக்கொள்வீராக. நல்லதை ஏவுவீராக. அறிவீனர்களைப் புறக்கணிப்பீராக.** (7 : 199)

அல்லாஹ்வின் இந்தக் கட்டளைக்கிணங்க நபி (ஸல்) அவர்கள் மன்னிக்கும் பண்பை தம் வாழ்நாளில் மிகவும் அதிகமாகக் கடைப்பிடித்துள்ளார்கள்.

இஸ்லாத்தைப் போதித்த – போதிக்க அனுமதி கோரிய ஒரே குற்றத்துக்காக தாயிப் நகரில் அங்கு வாழ்ந்த கோத்திரத் தலைவர்களால் நபி(ஸல்) அவர்கள் வெளியேற்றப்பட்ட போது, தம் பெருந்தன்மையைக் காட்டி அவர்களை மன்னித்து, அம்மக்கள் மீது இறங்கவிருந்த அல்லாஹ்வின் வேதனையைத் தடுத்துவிட்டார்கள்.

உஹத் யுத்தத்தின் போது, தம்மையும் தமது தோழர்களையும் கடுமையாக துன்பங்களுக்கு உள்ளாக்கிய மக்கா குறைஷிப் படையில் நின்று போராடிய வர்களை பின்னாளில் மன்னித்தார்கள். குறிப்பாக தனது தந்தையின் சகோதரரும் இஸ்லாத்திற்கு மிகவும் வேண்டப்பட்டவருமான ஹம்ஸா (ரழி) அவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படக் காரணமான “ஹிந்த்” என்ற பெண்ணைக் கூட, அவர் பின்னாளில் இஸ்லாத்தைத் தழுவிய போது மன்னித்தார்கள்.

மக்கா வெற்றியின் போது தம்மையும் தமது தோழர்களையும் ஆரம்பத்தில் மிகுந்த துன்பங்களுக்காளாக்கிய, தாமும் தமது தோழர்களும் தமக்கு மிகவும் விருப்புக்குரிய பிறந்தகமான மக்காவை விட்டும் வெளியேறுவதற்குக் காரணமாய் அமைந்தவர்களெல்லாம் அவர்கள் தலைகுனிந்து நின்ற வேளை **“நீங்கள் சுதந்திரமாகச் செல்லுங்கள்”** எனக் கூறி மன்னிப்பளித்து அனுப்பிவைத்தார்கள்.

இவை தவிர தமது வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாகரிகம் அறியாத நாட்டுப் புற அரபிகள் தம்மோடு கரடு முரடாகக் கதைத்த சந்தர்ப்பங்களிலும், தமது புனிதப் பள்ளிவாசலை மல சலம் கழித்து அசிங்கப்படுத்திய வேளைகளிலும் தமது தோழர்கள் அக்கிராமப்புற மக்களுக்கு தண்டணை வழங்க வெகுண்டெழுந்த போதும் கூட தோழர்களை அமைதிப்படுத்தி விட்டு அந்தக் கிராமப்புற மக்களை அன்பாக உபசரித்து அவர்களை மன்னித்தார்கள்.

இவ்வாறு மன்னிக்கும் மனப்பான்மையைத் தமது முக்கியமான பண்பாக வரித்துக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் தமது சமூகத்தவர்களும் தமக்குள் இப்பண்பைக் கடைப்பிடித்து வர வேண்டும் என எதிர்பார்த்தார்கள்.

எனவே, நாமும் உயர்ந்த பண்பான மன்னிக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்து வாழ முற்படுவோம்.

# தூய்மை - சுத்தம்

இஸ்லாம் பரிசுத்தமான மார்க்கமாகும். இஸ்லாத்தை மனித குலத்துக்கு அருளிய இறைவனும் எல்லாவற்றையும் விட மிகப் பரிசுத்தமானவன். ஆதலால் அவனது அடியார்களாகிய எம்மிடமும் அவன் பரிசுத்தத்தினையே எதிர்பார்க்கின்றான்.

> **“நிச்சயமாக அல்லாஹ் பாவமீட்சி கேட்போரையும், பரிசுத்தமானவர் களையுமே விரும்புகின்றான்.** (அல்-குர்ஆன் 2:22)

சுத்தம் ஈமானுடன் தொடர்புபட்டது. “ஈமானில் அரைவாசிப் பகுதி சுத்தமாகும்” என்பது நபியவர்களின் பொன் மொழியாகும்.

> **“சுத்தம் ஈமானின் அரைப்பகுதியாகும்.”** (ஆதாரம்: முஸ்லிம்)

சுத்தத்தைப் பேணிவரல் வேண்டும் என்ற உணர்வின்றி அசிங்கமான சூழ்நிலையில் எந்த மனிதன் வாழ்ந்து வருகின்றானோ அவன் தன்னை மு.'.மின் எனச் சொல்லிக்கொண்டாலும் அவனது ஈமான் பூரணமானது அல்ல என்பது இந்த ஹதீஸின் கருத்தாகும்.

இஸ்லாமிய ஷரீஅத்தில் இந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்ற சுத்தம் என்ற இந்தப் பண்பு இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படுகின்றது:

1. அகச் சுத்தம்
2. புறச் சுத்தம்

**1. அகச் சுத்தம்**

அகச் சுத்தம் என்பது உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதாகும். "தஸ்கியதுன்நப்ஸ்" "ஸலாமத்துஸ் ஸத்ர்" எனப் பல சொற்றொடர்களால் இது குறிப்பிடப்படுகின்றது. ஒவ்வொரு மு.'.மினும் தனது உள்ளத்தைப் பாதிக்கக்கூடிய விடயங்களிலிருந்து அதனைத் தூய்மையாக வைத்துக்கொள்வதும் அதற்காக முயற்சிகளை எடுத்துக் கொள்வதும் அவன் மீது கடமையாகும். உள்ளத்தை அதாவது ஆன்மாவை தூய்மையாக வைத்துக்கொண்டவனே வெற்றி பெற்றவன்; அவ்வாறு செய்யாதவன் தோல்வியடைந்தவன் என்ற கருத்தை அல்-குர்ஆன் தெரிவிக்கின்றது.

> **“யார் அதனை (உள்ளத்தை) தூய்மைப்படுத்திக் கொண்டாரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார். யார் அதனை பாவங்களால் அசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர் தோல்வியடைந்துவிட்டார்.”** (91: 9-10)

நபி (ஸல்) அவர்களின் நபித்துவப் பணிகளில் ஒன்றாக மனிதர்களின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் பணி அமைந்திருந்தது என்பதைப் பின்வரும் அல்-குர்ஆன் வசனம் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது:

**“அவன்தான் எழுத்தறிவு தெரியாத அம்மக்கள் மத்தியில் அவர்களுக்குத் தனது வசனங்களை ஓதிக் காண்பிப்பதற்காகவும், அவர்களைத் தூய் மைப்படுத்துவதற்காகவும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிப்பதற்காகவும் தன் தூதுவர் ஒருவரை அனுப்பிவைத்தான்.”** (62 : 02)

உள்ளத்தை தூய்மையாக, சீராக வைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை விளக்க வந்த நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

**“அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உடலுக்குள் ஒரு தசைப் பிண்டம் உள்ளது. அது சீரடைந்துவிட்டால் உடல் முழுவதும் சீராகிவிடும். அது சீர்கெட்டுவிட்டால் உடல் முழுவதும் சீர்கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள்! அதுவே உள்ளமாகும்.** (புகாரி, முஸ்லிம்)

ஒரு மனிதனின் உள்ளம் சீரடையும் போது அவனது உடல் ரீதியிலான நடத்தைகளும் சீரடைகின்றன. அவனது உள்ளம் தீய எண்ணங்களால் மாசுபடும் போது அவனது உடல் ரீதியிலான நடத்தைகளும் கெட்டவையாக அமைகின்றன என்ற பேருண்மையை நபி அவர்கள் மேலுள்ள ஹதீஸில் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

பொறாமை, கோபம், குரோதம், வஞ்சகம், நயவஞ்சகம், சந்தேகம், தப்பெண்ணம், தற்பெருமை முதலியன உள்ளத்தில் குடிகொள்ளக்கூடிய கொடிய உள நோய்களாகக் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து ஒவ்வொரு மூ:மினும் தன்னுடைய உள்ளத்தைத் தூரமாக்கி அதனை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் இஸ்லாத்தின் போதனையாகும்.

**2. புறச் சுத்தம்**

ஒரு மனிதன் தனது உடல், உடை, உறையுள், வெளிச் சூழல் முதலியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்வதே புறச் சுத்தமாகும். இஸ்லாம் உளச் சுத்தத்தில் எந்தளவுக்கு கவனம் செலுத்துகின்றதோ அதேயளவுக்கு புறச் சுத்தத்திலும் கவனம் செலுத்துகின்றது.

தொழுகை, ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளை நிறைவேற்ற முன்னர் பெருந் தொடக்கு, சிறு தொடக்கு ஆகிய இரண்டு நிலைகளிலிருந்தும் சுத்தமாகிக் கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாம் நிபந்தனையாக விதித்துள்ளது.

ஒவ்வொரு மனிதனும் தொழுகைக்காக தயாராகும் போது கட்டாயமாக வுழுச் செய்ய வேண்டும். குர்-ஆன் ஓதல், திக்ர் செய்தல் முதலிய வணக்க வழிபாடுகளை செய்யும் போது வுழுச் செய்வது முஸ்தஹப் ஆகும். மேலும் அதிகமான நேரங்களில் வுழுவுடன் இருப்பது சுன்னத் ஆகும்.

இவ்வாறு வுழுச்செய்வது என்பது உடல் ரீதியாக சுத்தமாகிக் கொள்வதாகும். இவ்வாறே தொழும் போது உடலும், உடையும் சூழலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமானது.

ஈமான் உள்ள ஒரு மு:.மின் வாழும் வீடு, அவன் வாழும் சூழல், அவன் நடந்து செல்லும் பாதைகள் என்பன சுத்தமாக இல்லாமல் அசுத்தமாகவும், ஒழுங்கின்றியும் காணப்படுமாயின் அவனது ஈமான் குறைபாடு உடையது என்பதே பொருளாகும். ஈமானில் ஆகக் குறைந்த படித்தரத்தைக்கூட அவன் அடையவில்லை என்பதே அதன் கருத்தாகும்.

**“ஈமான் என்பது எழுபதுக்கும் அதிகமான அல்லது அறுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டது. அதில் மிக உயர்ந்தது லாஇலாக இல்லல்லாஹ் என்பதாகும். மிகவும் குறைந்தது பாதையிலுள்ள தீங்கு தரும் பொருளை அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானில் ஒரு பகுதியாகும்.** (புகாரி முஸ்லிம்)

சில மனிதர்கள் தலைமுடியும், தாடியும், ஆடைகளும் அலங்கோலமாகவும் அழுக்குடனும் காணப்படுவது இறையச்சத்தின் வெளிப்பாடு என நினைக்கின்றனர். இது முற்றிலும் பிழையான செயற்பாடாகும். நபியவர்களின் வழிகாட்டலுக்கு முரண்பாடான நிலைப்பாடாகும்.

**நபி (ஸல்) அவர்கள் “யாருடைய உள்ளத்தில் கடுகளவேனும் பெருமை உள்ளதோ அவர் சுவனம் நுழையமாட்டார்” என்று கூறிய வேளை ஒரு மனிதர் கேட்டார்: “ஒரு மனிதன் தனது ஆடை அழகாக இருக்க வேண்டும், பாதணி அழகாக இருக்க வேண்டும் என விரும்புவானே” என்றார். அதற்கு நபியவர்கள் “நிச்சயமாக, அல்லாஹ் அழகானவன், அவன் அழகையே விரும்புகின்றான். பெருமை என்பது சத்தியத்தை மறைத்தலும், மனிதர்களை இழிவுபடுத்துவதுமாகும்.” என்றார்கள்.** (முஸ்லிம்)

எனவே, ஒரு மனிதன் அழகாக ஆடை அணிவது, தன்னைச் சுத்தமாக வைத்துக் கொள்வது என்பது ஒரு போதும் பெருமையாக மாட்டாது. மாறாக அது மிகவும் போற்றத்தக்க பண்பாகும். நபி (ஸல்) தமது தலைமுடியை ஒழுங்குபடுத்தி சீவக்கூடியவராகவும் தலைமுடியை வெட்டக்கூடியவராகவும், அதற்கு

எண்ணெய் இடக்கூடியவராகவும், அழகான சுத்தமான ஆடை அணியக் கூடியவராகவும் நகங்களை வெட்டக்கூடியவராகவும் இருந்தார்கள். மர்மஸ்த் தானத்துக்கு அருகிலும், அக்குளிலும் உள்ள உரோமங்களை களையக்கூடிய வராகவும் இருந்தார்கள். இது சம்பந்தமான நிறைய அறிவிப்புகளை "ஷமாயில் திர்மிதி" என்ற ஹதீஸ் கிரந்தத்தில் காணலாம்.

நபி (ஸல்) அவர்களின் மற்றொரு முக்கிய சுன்னத்தான விடயம் அவர்கள் அதிகமாக பல் துலக்குபவர்களாக இருந்தார்கள் என்பதாகும். எமக்கும் இதனை அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். வாய் நாற்றமுறும்போது இவ்வாறு பல்துலக்குவது கடமையாக மாறும் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

அதேபோன்று, மலசலம் கழித்துவிட்டு மிக நன்றாக சுத்தம் செய்யும் படியும், உடலிலோ ஆடையிலோ நஜிஸ்கள் பட்டுவிட்டால் அவற்றை எவ்வாறு சுத்தம் செய்ய வேண்டும் என்பது பற்றியும் இஸ்லாம் எமக்கு கற்றுத்தருகிறது.

சட்டக் கலை வல்லுனர்களான எமது இமாம்கள் தொகுத்த பிக்ஹுக் கிரந்தங்கள் அனைத்திலுமே சுத்தத்தைப் பற்றிய அத்தியாயத்தை முதலில் இடம்பெறச் செய்திருப்பதும் ; சுத்தத்தைப் பற்றி அக்குவேறு ஆணிவேறாக அதில் துல்லியமாக விளக்கியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இவை அனைத்தும் இஸ்லாம் சுத்தத்துக்கு வழங்கியிருக்கும் முக்கியத்து வத்தை விளங்கிக்கொள்ளப் போதுமானவையாகும்.

# இரக்கம்

இரக்கம் என்ற பண்பு அல்லாஹ்வின் பண்புகளுள் ஒன்றாகும். இந்தப் பண்பை மனித உள்ளத்தில் வைத்து அல்லாஹ் படைத்துள்ளான். இந்தப் பண்பை மனிதர்கள் தங்களுக்குள் பிரயோகித்துக் கொள்ள வேண்டும் என்பதும் அதன் மூலம் சகோதரத்துவம், ஒற்றுமை ஆகிய பண்புகள் உள்ளவர்களாக மக்கள் வாழவேண்டும் என்பதும் இஸ்லாம் மனிதர்களிடமிருந்து எதிர்பார்க்கும் முக்கியமான விடயங்களாகும்.

மு.ஃ.மின்கள் தங்களுக்கு மத்தியில் அன்புப் பிணைப்புடன் வாழ்வார்கள் என்பதைப் பின்வரும் அல்-குர்ஆன் வசனம் சுட்டிக்காட்டுகின்றது:

**"முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார்கள். அவரோடு உள்ளவர்களோ காபிர்கள் மீது கடுமையாகவும் தங்களுக்கு மத்தியில் பரஸ்பரம் அன்பு கொண்டவர்களாகவும் நடந்து கொள்வார்கள்"** (48 : 29)

மு.ஃ.மின்கள் தங்களுக்கு மத்தியில் ஒருவருக்கு ஒருவர் அன்பு பூண்டவர்களாக இருந்தால் மட்டும் போதாது. சில வேளைகளில் அவர்களுக்கு மத்தியில் ஷைத்தானின் தூண்டுதலால் பிரச்சினைகள் எழுந்து விடலாம். ஒருவரோடு மற்றவர் பிணங்கிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகிவிடலாம். இச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக ஒருவருக்கு ஒருவர் பொறுமையைக் கொண்டும் அன்பு, இரக்கம் ஆகியவற்றைக் கொண்டும் போதனை செய்து கொள்ளவேண்டும் என்றும் அல்-குர்ஆன் கட்டளையிடுகின்றது.

**"பின்னர் மு.ஃ.மின்களில் ஈமான் கொண்டு பொறுமையை ஒருவருக்கொருவர் உபதேசித்தும், இரக்கத்தை ஒருவருக்கொருவர் உபதேசித்தும் வரக்கூடியவர்கள் இருப்பார்கள்"** (90 : 17)

இவ்வுலகில் ஒருவர் மீது ஒருவர் அன்பும், பரிவும் காட்டியபடி மற்றவர்களுடன் சிறந்த முறையில், இரக்க சுபாவத்துடன் சேர்ந்து பழகும் மனிதனுக்கே அல்லாஹ்வும் தனது இரக்கத்தைக் காட்டுவான்.

**"மனிதர்களுக்கு யார் கருணை காட்டவில்லையோ அல்லாஹ்வும் அவருக்கு இரக்கம் காட்டமாட்டான்" என நபியவர்கள் குறிப்பிட்டார்கள்** (புஹாரி, முஸ்லிம்)

இரக்க குணமுடையவர்களுக்கே அல்லாஹ்வின் இரக்கமும் கருணைப் பார்வையும் கிட்டுகின்றது என்பதை கீழ்வரும் ஹதீஸிலும் நபியவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்கள் :

**“இரக்கமுள்ளவர்களுக்கே இரக்கமுள்ள ரஹ்மான் இரக்கம் காட்டு கின்றான். நீங்கள் பூமியிலுள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள். வானத்திலுள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்.”** (அபூதாவுத், திர்மதி)

ஒரு மு:்மின் தனது மனைவி, பிள்ளைகள், ஏனைய உறவினர்கள், முஸ்லிம்கள் என்பவர்களுடன் இரக்கத்துடன் நடந்து கொள்வது அவனுக்கு நன்மை தரும் காரியமாகும். ஒரு மு:்மின் தன் பிள்ளைகளை அன்போடு அணைத்து, பரிவுடன் முத்தம் கொடுப்பது அவனது உள்ளத்திலுள்ள இரக்க குணத்தின் வெளிப்பாடாகும்.

**நபி (ஸல்) அவர்கள் தன் பேரப்பிள்ளைகளை முத்தமிடுவதைக் கண்ட கிராமப்புற அரபி ஒருவர் தனக்கு பத்துப் பிள்ளைகள் இருப்ப தாகவும், அவர்களில் ஒருவரைக் கூட இதுவரை தான் முத்தமிட்டதில்லை எனவும் கூறிய போது நபியவர்கள் ; “உமது உள்ளத்திலிருந்து இரக்க குணத்தை அல்லாஹ் பறித்துவிட்டானா?” என வினவி அவரை கண்டித்தார்கள்.** (புஹாரி, முஸ்லிம்)

**சுவர்க்கத்திற்குச் செல்லும் மூன்று வகை மனிதர்களைப் பற்றிக் குறிப்பிட்ட நபி (ஸல்) அவர்கள் அதில் ஒரு வகையாக உறவினர் களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் இளகிய உள்ளத்துடன் இரக்கம் காட்டி நடந்து கொண்ட ஒரு மனிதனையும் குறிப்பிட்டுக்காட்டினார்கள்.** (புஹாரி, முஸ்லிம்)

ஒரு மனிதன் பிறருக்கு உதவும் வகையில் சமூக சேவையில் ஈடுபடுவதற்கு காரணமாய் அமைவது, அம் மனிதன் பிறர் மீது கொண்டுள்ள இரக்க உணர்வாகும். இத்தகைய ஒரு மனிதனுக்கு மிகப்பெரும் நற்கூலியை இறைவன் வழங்குவதாக நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

**“விதவை, ஏழை ஆகியோர்களின் நலனுக்காக உழைப்பவன் அல்லாஹ்வின் பாதையில் உழைப்பவனைப் போலாவான். சோர் வில்லாமல் நின்று வணங்கியவனையும், இடைவிடாமல் நோன்பு நோற்ற வனையும் போன்றவனாவான்.”** (புஹாரி, முஸ்லிம்)

இவ்வளவு பெரும் நன்மைகள், சுவர்க்கம் என்பன கூலியாகக் கிடைப்பது இரக்கம் என்ற ஒரேயொரு பண்புக்காக எனும் போது அதன் முக்கியத்துவத்தி னையும் சிறப்பையும் எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

மேலும், மற்றவர்கள் மீது இரக்கமுள்ள மனிதன் பிறரை நோவினை செய்யமாட்டான். அவர்களுக்கு அநியாயம் இழைக்கமாட்டான். அவர்களது குறைகளை அம்பலப்படுத்தமாட்டான். அவர்களுக்கு உதவிகள் தேவைப்படும்

போது அவற்றை வழங்கப் பின் நிற்கமாட்டான். இவ்வாறு இரக்க உணர்வுமிக்க, ஒருவருக்கு ஒருவர் பரிவும் பாசமும் மிக்க, நல்ல மனிதர்களாலேயே ஒரு சிறந்த சமூகம் உருவாகின்றது.

“மு.ஃ.மின்கள் ஒருவர் மீது ஒருவர் இரக்கம் காட்டுவதிலும் ; பரிவு பாசம் காட்டுவதிலும் ஓர் உடலை ஒத்திருப்பதை நீர் காண்பீர். உடலில் ஓர் உறுப்பு நோய்வாய்ப்பட்டுவிட்டால் ஏனைய உறுப்புக்களும் வருந்து கின்றன ; கண்கள் தூங்காமல் விழித்திருக்கின்றன ; காய்ச்சல் ஏற்படுகின்றது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## வெட்கம்

இஸ்லாம் ஒரு முஸ்லிமிடம் அவசியம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகளுள் ஒன்றாக வெட்க உணர்வை குறிப்பிட்டுள்ளது. ஒரு முஸ்லிம் வெட்க உணர்வுள்ளவனாக இருக்க வேண்டும். இல்லையேல் அவனது ஈமானில் குறைபாடு உள்ளது என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். இக்கருத்தை பின்வரும் ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

**அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் :**

**ஈமான் என்பது எழுபதுக்கும் அதிகமான அல்லது அறுபதுக்கும் அதிகமான கிளைகளுடையதாகும். அதில் மிகவும் சிறப்பானது லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தையாகும். அவற்றுள் மிகவும் தாழ்வானது பாதையிலிருந்து தீமை தரும் பொருளை அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானின் ஒரு பகுதியாகும்.** (புஹாரி, முஸ்லிம்)

ஈமானிய உயிர்த்துடிப்புடன் இருக்கும் மு.ஃ.மினிடம் வெட்க உணர்வும் இயல்பாகக் காணப்படும். அவ்வாறில்லாத போது, அதனை செயற்கைத் தன்மையாக வலிந்து உருவாக்க முடியாது. ஒரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், இரு மனிதர்களைக் கடந்து சென்றார்கள். அவர்களில் ஒருவர் தனது சகோதரனுக்கு வெட்கத்தைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள் ; **“அவரை விட்டுவிடுங்கள். ஏனெனில் ஈமானிலிருந்து வெட்க உணர்வு வரவேண்டும்.” என்றார்கள்** (புகாரி, முஸ்லிம்)

மேலுள்ள சம்பவத்திலிருந்து ஈமானியப் பண்புகளுள் ஒன்று வெட்கம் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

வெட்கம் ஒரு மு.்.மினை பாவங்கள் செய்வதிலிருந்து விலகி இருக்கச் செய்யும். மானக்கேடான செயல்களை விட்டு விடச் செய்யும். வெட்க உணர்வின் காரணமாக, சமூகத்தில் வாழும் போது சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதை விட்டும் ஒரு மு.்.மின் தவிர்ந்து கொள்வான். சுருக்கமாகக் கூறுவதாயின் எப்போதும் எங்கும் வெட்க உணர்வானது நல்ல விளைவையே ஒரு மு.்.மினுக்கு ஏற்படுத்தும். நபி (ஸல்) அவர்கள் இக்கருத்தையே இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

**“வெட்கமானது நல்ல விளைவைத்தவிர வேறெதனையும் ஏற்படுத்தாது”** (புஹாரி, முஸ்லிம்)

முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள மற்றொரு ஹதீஸில் **“வெட்கம் - அதன் எல்லாப் பகுதியும் சிறப்பானதே”** என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹதீஸின் கருத்து யாதெனில், வெட்கமானது ஒரு போதுமே மோசமான விளைவுகளைத்தராது. அது ஒரு மனிதனிடம் நல்ல தன்மைகளையே ஏற்படுத்தும். சிறிய அளவிலோ, அல்லது கூடுதலான அளவிலோ ஒரு மனிதன் வெட்கப்படும் போது அது அவனுக்கு அவனது மானம், மரியாதையைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதாகும்.

வெட்கம் இல்லாத ஒருவனே அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய தொழுகை முதலிய கடமைகளில் பொடுபோக்குடன் நடந்து கொள்வான். பிற மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலும் மோசடி செய்வான். இலஞ்சம் வாங்குதல், மோசடி செய்தல், விபசாரம் செய்தல், சமூகத்தை ஏமாற்றுதல் முதலிய சமூக அத்துமீறல்களிலும் ஈடுபடுவான்.

மேலும் அல்லாஹ்வின் வரையறைகளை மீறுவதிலும், தான் விரும்பியபடி யெல்லாம் மனோ இச்சைப்படி நடந்து கொள்வதிலும் பின்னிற்க மாட்டான். இத்தகைய ஒரு மனிதன் பற்றியே நபியவர்கள் பின்வருமாறு கூறிக்காட்டினார்கள்.

**“உனக்கு வெட்கமில்லை என்றால் நீ விரும்பியதையெல்லாம் செய்து கொள்”** (புகாரி, முஸ்லிம்)

எனவே, ஒரு மு.்.மினை உண்மையான மு.்.மினாக வாழ வைக்கும், அல்லாஹ்வின் வரையறைகளைப் பேணி, அவனது கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றுவதற்குத் தூண்டும் சமூகத்தில் நல்ல மனிதனாக வாழ வைக்கும் வெட்க உணர்வு உடையவர்களாக நாம் வாழ முற்படுவோம்.

# பொறுமை

பொறுமை என்பது இஸ்லாம் வலியுறுத்திக் கூறும் மிகவும் முக்கிய பண்புகளில் ஒன்றாகும்.

அல் - குர்ஆன் 90 க்கு மேற்பட்ட இடங்களில் பொறுமை என்ற பண்பைக் கடைப்பிடிக்குமாறு போதனை செய்கின்றது. இந்தளவிற்கு வேறு எந்தப் பண்பையும் கடைப்பிடிக்குமாறு குர்ஆன் கூறவில்லை. இதிலிருந்து பொறுமைக்கு அல்-குர்ஆன் வழங்கும் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ள முடியும்.

அல்லாஹ்விடத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பொறுமையையும், தொழுகையையும் கடைப்பிடிக்குமாறு அல்லாஹ் வழி காட்டுகின்றான்.

**“பொறுமையின் மூலமும் தொழுகையின் மூலமும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்”** (2 : 45)

அல்லாஹுத்தஆலாவுடைய அருளும் சகவாசமும் பொறுமையாளர் களுக்குத்தான் என்பதையும் அல்லாஹ் கூறிக்காட்டுகின்றான்:

**“நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடனேயே இருக்கின்றான்”** (2 : 153)

பொறுமையாளர்களுக்கே மறுமையில் பூரணமாக நற்கூலி வழங்கப்படும் என்பதும் அல் குர்ஆனின் கருத்தாகும்.

**“நிச்சயமாகப் பொறுமையாளர்களுக்கே மறுமையில் நற்கூலி பரிபூரண மாக கணக்கு வழக்கின்றி வழங்கப்படும்.”** (39 : 10)

அல்லாஹ்விடத்தில் சுவன இன்பங்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய இறையச்சமுடைய மனிதர்கள் யார் என்பதைப் பற்றி அல்குர்ஆன் விளக்குகின்ற போது அவர்களின் முக்கியமான பண்புகளுள் ஒன்றாக “பொறுமை” என்ற பண்பையும் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

**“அவர்கள் பொறுமையாளர்களாகவும், உண்மையாளர்களாகவும், இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்டு நடப்பவர்களாகவும், தானம் செய்கின்றவர்களாகவும் பின்னிரவு வேளைகளில் பாவமன்னிப்புக் கோருபவர்களாகவும் இருப்பர்.”** (3 : 17)

இவ்வாறு ஏராளமான அல்-குர்ஆன் வசனங்கள் பொறுமையைக் கடைப் பிடிக்குமாறு போதனை செய்து கொண்டிருக்கின்றன.

நபி(ஸல்) அவர்களது பொன்மொழிகளை நோக்குவோமாயின் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி நபியவர்கள் கூறிய ஏராளமான ஹதீஸ்களை நாம் காணலாம்.

**பொறுமையை "ஒளி" எனக் குறிப்பிட்ட நபியவர்கள், ஒரு மு.ஃ.மினை சோதனையோ, வேதனையோ, கஷ்டமோ, துன்பமோ, நோயோ, நொடியோ எதுதான் பீடித்தாலும் அவ்வாறான சூழ்நிலைகளி லெல்லாம் பொறுமையைக் கடைப்பிடித்தால் அல்லாஹ் அதற்குப் பகரமாக அம்மு.ஃ.மினின் பாவங்களை மன்னிப்பதாகக் குறிப்பிட்டார்கள். எந்தளவில் எனில் ஒரு முள்தான் குத்திவிட்டாலும் கூட இவ்வாறு பாவமன்னிப்பு இடம் பெறும் என நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.** (புஹாரி, முஸ்லிம்)

"பொறுமைக்குக் கூலி சுவனமேயன்றி வேறில்லை" என்ற கருத்தினையும் நபியவர்களின் பொன்மொழிகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அல்-குர்ஆனும் இக் கருத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

**"அவர்களின் பொறுமைக்கு பகரமாக சுவனத்தையும் பட்டாடையை யும் வழங்குவான்".** (76 : 12)

'பொறுமை' எனும் உயர்ந்த பண்பை அணிகலனாகக் கொண்டவர்களுக்கு சுவனத்தில் மிகவும் சிறப்பான வரவேற்பு மலக்குகளால் அளிக்கப்படும். இதனை விடப் பெரும்பாக்கியம் அவர்களுக்குக் கிட்டாது.

**"வானவர்கள் எல்லாப் புறங்களிலிருந்தும் அவர்களை வரவேற்க வந்து, "உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்" என ஸலாம் கூறுவார்கள். "நீங்கள் பொறுமையுடன் வாழ்ந்ததால் இதற்குத் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பார்கள்"** (13 : 23, 24)

**பொறுமையின் வகைகள் :**

பொறுமையை அல்-குர்ஆனினதும் ஹதீஸ்களினதும் கண்ணோட்டத்திற்கிணங்க ஆறு வகைகளாக அறிஞர்கள் பிரித்து நோக்குவர்.

**1. சோதனைகள் - துன்பங்களின் போது பொறுமை**

மனித வாழ்க்கை சோதனைக்களமாகும். வாழ்வில் இன்பங்களும் துன்பங்களும் மாறி மாறி வரக்கூடியவை. இன்பங்களைக் கண்டு அளவுக்கு அதிகமாக

ஊதாரித்தனம் செய்வதோ ; அல்லது துன்பங்களைக் கண்டு துவண்டு விடுவதோ கூடாது. இரண்டு நிலைகளிலும் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

மனித வாழ்வில் ஏற்படக்கூடிய சோதனைகள் தொடர்பில் பின்வருமாறு அல்-குர்ஆன் கூறுகின்றது :

> **சிறிதளவு அச்சத்தாலும் பசியாலும் உயிர்கள், உடைமைகள் மற்றும் விளைபொருட்கள் அகியவற்றில் இழப்பை உண்டாக்கியும் நிச்சயமாக உங்களை நாம் சோதிப்போம். இவ்வேளைகளில் பொறுமையோடு இருப்பவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக. இத்தகையோருக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டுவிட்டால், "நிச்சயமாக நாங்கள் அல்லாஹ் விற்கு உரியவர்கள் ; அவனிடமே திரும்பிச் செல்லவேண்டியவர்களாக உள்ளோம்" என்று கூறுவார்கள். இவர்கள் மீது அவர்களின் இறைவனிட மிருந்து நல்வாழ்த்தும் நல்லருளும் ஏற்படும். மேலும் இத்தகையோர் தான் நேர்வழி பெற்றவர்களாவர்.** (2 : 155-157)

உலகத்தில் நபிமார்கள் கூட இவ்வாறு சோதிக்கப்பட்டார்கள். உதாரணமாக, ஐயூப் (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் கடுமையாக சோதிக்கப்பட்டார்கள் என அல்-குர்ஆன் கூறுகின்றது. ஐயூப் (அலை) அவர்கள் அதிகமான செல்வமுடைய வர்களாய் இருந்தார்கள். அவைகளை அவர் இழந்தார். பின்னர் பிள்ளைகளை இழந்தார். அதனைத் தொடர்ந்து அவர்களது உடம்பை நோய் தொற்றிக் கொண்டது. இவ்வாறான சகல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் பொறுமை காத்தார்கள். இதனால் அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான். தனக்கு நெருங்கிய நல்லடியாராக ஏற்றுக்கொண்டு அவர்களை சிறப்பாக வாழவைத்தான்.

இப்றாஹீம் (அலை) அவர்களும் பல்வேறு வகையாகச் சோதிக்கப்பட்டார்கள். வயோதிபம் வரை பிள்ளைகள் இல்லாது சோதிக்கப்பட்டார்கள். மிக நீண்ட காலத்திற்குப் பின்பு கிடைத்த அருமை மகன் இஸ்மாஈலையும் மனைவி ஹாஜரையும் பாலைவனத்தில் விட்டுவிடுமாறு இறைவனால் ஏவப்பட்டார்கள். பின்னர், மகனை அறுத்துப் பலியிடப் பணிக்கப்பட்டார்கள். ஏகத்துவப் போதனை செய்ததால் இளவயதிலேயே வீட்டை விட்டும் துரத்தப்பட்டார்கள். இக்காரணத்துக் காகவே அப்பகுதி அரசனால் பெரும் தீக்குண்டத்தில் வீசப்பட்டார்கள். இவ்வாறு பல சோதனைகள் அவர்கள் வாழ்வில் இடம்பெற்றன. இவை ஒவ்வொன்றின் போதும் பொறுமையுடன் அவர்கள் அல்லாஹ்வைச் சார்ந்திருந்ததனால் அல்லாஹ்வின் பேரருளையும் வெற்றியையும் பெற்றார்கள்.

இவ்வாறே ஒவ்வொரு நபியும் சோதிக்கப்பட்டார்கள். சோதனையின் வகையும், தன்மையும், அளவும் தான் வித்தியாசமானவையாக அமைந்தன.

**“எந்த மனிதனுக்கு அல்லாஹ் நலவை நாடுகின்றானோ அவரைச் சோதிப்பான்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** (ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

எனவே, சோதனைகளின் போது பொறுமை காத்து எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்தனை செய்கின்ற போது அவை நீங்கி பெரும் வெற்றிகளும் நன்மைகளும் கிடைக்கும்.

**2. அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் பொறுமை**

இஸ்லாமிய ஷரீஅத் கடமையாக்கியுள்ள கடமைகளையும், சுன்னத்தான இபாதத்துக்களையும் நிறைவேற்றவும், இன்னும் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் வழிகாட்டல்களை எடுத்துப் பின்பற்றவும் விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளவும் பொறுமை அவசியமாக உள்ளது.

அல்லாஹுத்தஆலா இவ்வகைப் பொறுமையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்:

**“வானங்கள் பூமி மற்றும் அவை இரண்டிற்கும் இடைப்பட்ட அனைத்தினதும் இரட்சகனுக்கு அடிபணிவீராக. அவ்வாறு கட்டுப் படுவதில் பொறுமையை கடைப்பிடிப்பீராக. அவனுக்கு சமமானவர் எவரையேனும் நீர் அறிவீரா ?** (19 : 65)

ஒரு மனிதன் தன் மீது கடமையான ஐவேளைத் தொழுகையை தவறாது கிரமமாகத் தொழுது வருவதற்கு இடையிடையே நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒதுக்க வேண்டியவனாக உள்ளான். தூக்கத்தை விட்டும் சுபஹ் நேரத்தில் விழிக்க வேண்டியுள்ளான். நோன்பு நோற்கையில் உணவையும், தாம்பத்திய உறவையும் முற்றாகத் தவிர்ந்திருக்க வேண்டிய தேவையில் உள்ளான். இவ்வாறே ஸகாத் கொடுக்கும் போது தனது செல்வத்தின் ஒரு பகுதியை இழக்க வேண்டியுள்ளது. ஹஜ் செய்யும் போது செல்வத்தை மட்டுமன்றி உறவுகளைப் பிரிந்து செல்ல வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. அத்துடன் ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றுவதில் பல சிரமங்களும் ஏற்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு கடமையையும் நிறைவேற்றும் போதும் சிரமங்களைத் தாங்கிக் கொண்டு அவற்றை ஒழுங்காக நிறைவேற்ற பொறுமை என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

### 3. மனோ இச்சைகளின் முன்னால் பொறுமை

ஒரு மனிதனில் இரண்டு வகையான உணர்ச்சிகள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்று, அல்லாஹ்வுடன் தொடர்புடைய உயர்ந்த ஆன்மீக உணர்வு. மற்றையது, கீழ்த்தரமான ஷைத்தானுடன் தொடர்புடைய மனோ இச்சைகள். இந்த மனோ இச்சைகள் இழுக்கின்ற பக்கமெல்லாம் ஒரு மு∴மின் இயங்குவதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளான். மதுவருந்துதல், விபசாரம் செய்தல்; வீணான கேளிக்கைகளில் ஈடுபடுதல், ஆபாச விடயங்களில் பொழுதைக் கழித்தல் முதலிய பாவச் செயல்கள் மோசமான மனோஇச்சைகளின் விளைவாகவே நடைபெறுகின்றன. நபி (ஸல்) அவர்கள் இம் மனோஇச்சைகள் பற்றி ஒரு ஹதீஸில் இவ்வாறு குறிப்பிட்டார்கள் **"நரகம் மனோ இச்சைகளினால் சூழப் பட்டது. சுவர்க்கமோ மனதுக்கு வெறுப்புக்குரிய விடயங்களால் சூழப்பட்டது"** (புகாரி, முஸ்லிம்)

எனவே மனோஇச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழ்வதற்கு ஒரு மு∴மின் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கு பொறுமை மிகவும் அவசியமாகும்.

### 4. அடுத்த மனிதர்களுடன் சேர்ந்து வாழ்வதில் பொறுமை

பொதுவாகவே மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். அவனால் தனித்து வாழ முடியாது. அதிலும் குறிப்பாக ஒரு மு∴மின் சமூகத்தை விட்டும் ஒதுங்கி வாழ முடியாது. ஏனெனில், சமூகம் தொடர்பாக பல கடமைகளைச் செய்ய வேண்டியவனாக ஒரு மு∴மின் காணப்படுகின்றான். இக்கடமைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ் வழங்கியுள்ள ஆற்றல்கள், திறமைகள், வசதிவாய்ப்புகளை பொறுத்து வித்தியாசமாய் அமையக் கூடும்.

இவ்வாறு சமூகத்துடன் ஒரு மு∴மின் சேர்ந்து வாழும் போது பல்வேறு சூழ் நிலைகளை, இன்னல்களை, கதை பேச்சுக்களை அவன் எதிர்கொள்ளலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமூகத்தை விட்டும் ஒடி ஒளிந்து கொள்வதோ அல்லது எதிர் மாறான முடிவுகளை எடுத்து சமூகத்தைப் பழிவாங்க முற்படுவதோ கூடாது. மாறாக இவ்வாறான நிலைகளிலே கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கிய பண்பு பொறுமையாகும். நபி (ஸல்) அவர்கள் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

> **"மனிதர்களுடன் கலந்து வாழ்ந்து, அவர்களின் மூலம் ஏற்படுகின்ற இன்னல்களைச் சகித்துக் கொள்கின்ற ஒரு விசுவாசி, மனிதர்களுடன் கலந்துறவாடாத அவர்களினால் ஏற்படும் இன்னல்களைச் சகித்துக் கொள்ளாத இன்னொரு மு∴மினை விடச் சிறந்தவனாவான்." (திர்மிதி)**

பிற மனிதர்களுடன் கலந்துறவாடும் போது பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்வது மற்ற மனிதர்களை எம்மோடு இணையவைக்கும். எதிரியைக் கூட நண்பனாக மாற்றும். இந்தக் கருத்தை அல்-குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

**"நன்மையும் தீமையும் சமமாக மாட்டாது. மிகச் சிறந்த விடயங்களின் மூலம் தீயதை தடுத்துக் கொள்வீராக. எவருக்கும் உமக்கும் இடையே பகைமை உள்ளதோ அவரும் உற்ற நண்பராக மாறி விடுவதைக் காண்பீர். பொறுமையுள்ளோரைத் தவிர வேறெவருக்கும் இவ் உயர் பேறு கிட்டுவதில்லை.** (அல்-குர்ஆன் 41 : 34, 35)

### 5. இஸ்லாமியப் பிரசாரப் பணியின் போது பொறுமை

"த.்.வா" எனும் இஸ்லாமியப் பிரசாரப் பணி இலகுவான ஒரு பணியல்ல. எம் மீது கடமையாக சுமத்தப்பட்டுள்ள இப் பணியானது நபிமார்கள் மேற்கொண்ட பணி. இப் பணியினை மேற்கொள்ளும் போது அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமான நபிமார்கள் கூட சோதனைகளையும் துன்பங்களையும் எதிர் கொண்டார்கள். எனவே, த.்.வாவின் இயல்புக்கு இணங்க அதனை மேற்கொள்ளும் எமக்கு துன்பங்களையும், ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அவ் வேளைகளில் பொறுமையைக் கடைப்பிடிப்பது என்பது எமது கடமையாகும்.

இவ்வுண்மையை லுக்மான் (அலை) அவர்களின் உபதேசமாக அல்லாஹுத்தஆலா அல்-குர்ஆனில் கூறிக் காட்டுகின்றான்.

**"எனதருமை மகனே ! தொழுகையை நிலைநாட்டு; நன்மையை ஏவி தீமையை தடுத்திடு ; உன்னை எந்தத் துன்பம் பீடித்தாலும் பொறுமையாக இரு; நிச்சயமாக இது மிக உறுதிமிக்க காரியமாகும்."** (31 : 17)

த.்.வாப் பாதையில் துன்பங்கள் ஏற்படும். அப்போது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இவ் வசனம் தெளிவாக உணர்த்துகின்றது.

எனவே, த.்.வாப் பணிபுரியும் நாம் பொறுமையை எம் அணிகலனாக எடுத்துக் கொள்ள வேண்டும். துன்பங்களையும் துயரங்களையும், ஏச்சுக்களையும், பேச்சுக்களையும், விமர்சனங் களையும் கண்டு நிலை குலைந்து விடக்கூடாது. இதற்கு பொறுமை மிகவும் அவசியமாகும்.

அதே போன்று இஸ்லாமிய பிரசாரப் பணியை விளங்கிக் கொள்ளாது செயற்படுபவர்களை அவசரப்பட்டு பழிவாங்க நினைப்பதோ; அல்லது அவர்களுக்கு

அல்லாஹ்வின் சாபம் இறங்கப் பிரார்த்திப்பதோ கூடாது. இதற்கும் பொறுமைதான் தேவை. இவ்வாறு பொறுமையுடன் செயற்பட்டதனால்தான் நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் தங்கள் த.்.வா பணியில் வெற்றியடைந்தார்கள்.

## 6. புனிதப் போரின் போது பொறுமை

இஸ்லாம் யுத்தத்தை விரும்பாத மார்க்கம். சமாதானமே அதன் உயிர் மூச்சு. எனினும் இஸ்லாத்தையும்; முஸ்லிமையும்; முஸ்லிம்களின் உடைமைகளையும் பாதுகாப்பதற்காக யுத்தம் என்பது மிகவும் அவசியமானதாக, தவிர்க்க முடியாததாக அமைந்து விடும் சந்தர்ப்பத்தில் கோழைகளாய்ப் பின்வாங்குவதை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் யுத்தம் செய்வதைக் கடமையாக்கும் இஸ்லாம்; இந்த யுத்தத்தின் போது பொறுமையுடன் நின்று போராடுமாறு உபதேசிக்கின்றது.

**"உங்களில் பொறுமையுள்ள நூறு பேர் இருந்தால் இருநூறு பேரை அவர்கள் வெற்றி கொள்வர். உங்களில் ஆயிரம் பேர் இருந்தால் அல்லாஹ்வின் அனுமதிப்படி இரண்டாயிரம் பேரை அவர்கள் வெற்றி கொள்வர். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்"** (8 : 66)

யுத்த மைதானத்திலிருந்து கோழைத்தனமாகப் பின்வாங்குவதை, புறமுதுகு காட்டி ஓடுவதை இஸ்லாம், அல்லாஹ்வின் சாபத்திற்கு எம்மை ஆளாக்கக் கூடிய பெரும் பாவமாகக் கருதுகின்றது. களத்தில் ஏற்படும் கஷ்டங்களையும், அபாயங்களையும் பொறுமையோடு எதிர்கொண்டு போராட்டக் களத்தில் நின்று பிடிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

இவ்வாறு ஆறு வகையான பொறுமைகளை அல்-குர்ஆன், சுன்னாவின் கண்ணோட்டத்தில் அறிஞர்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர்.

பொதுவாகப் பொறுமை என்று சொல்லும் போது அதனை கோழைத்தனத்தின் வெளிப்பாடாகவோ, அல்லது இயலாமையின் பிரதிபலிப்பாகவோ விளங்கிக் கொள்ளாமலிருக்க மேலுள்ள வகைகளை புரிந்து கொள்வது உதவியாக அமையும்.

அத்துடன் பொறுமையைப் பற்றிய இன்னுமொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ளல் அவசியமாகும். அதாவது துன்பமோ, அல்லது கஷ்ட நஷ்டங்களோ ஏற்பட்டவுடன் அலறியடித்துக் கொண்டு பொறுமையின்றி செயற்பட்டு விட்டு பின்பு ஒன்றும் செய்ய இயலாத சந்தர்ப்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது உண்மையாக இஸ்லாம் எதிர்பார்க்கும் பொறுமையாக அமையமாட்டாது. இஸ்லாம் பொறுமைக்கு கிடைக்கும் எனக் கூறும் நற்கூலி இத்தகைய பொறுமைக்கு

கிடைக்கவும் மாட்டாது. இதனை பின்வரும் சம்பவம் எமக்கு தெளிவாக உணர்த்துகின்றது

**“நபி (ஸல்) அவர்கள் ஒரு அடக்கஸ்தலத்தைக் கடந்து சென்றார்கள். அப்போது அதனருகில் ஒரு வயோதிப மாது உட்கார்ந்து தலைவிரி கோலமாகக் கதறி அழுவதைப் பார்த்து, அவளது மகன் மரணித்த தற்காகவே அவள் அவ்வாறு அழுகின்றாள் என்பதை அறிந்து கொண்ட பின் நபியவர்கள், பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அவளுக்கு உபதேசித்தார்கள். இதற்கு அவ் வயோதிப மாது நபியவர்களை இன்னார் என்று அறியாது; “நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு அப்பால் சென்று விடு” என கடினமாகப் பேசிவிட்டாள். பின்புதான் அப்பெண்மணிக்கு அது நபியவர்கள் எனத் தெரிய வருகின்றது. உடனே நபியவர்களின் சமூகத்திற்கு வந்த அப்பெண் மன்னிப்புக் கோரி நின்றாள். அதற்கு நபியவர்கள் “பொறுமை என்பது ஒரு துன்பத்தின் ஆரம்ப நிலையிலேயே ஏற்பட்டுவிட வேண்டும்” என்று கூறி அப்பெண்மணியை அனுப்பினார்கள்.** (புகாரி - முஸ்லிம்)

எனவே, ஒரு நிகழ்வு இடம் பெறும் போது ஆரம்பத்திலேயே பொறுமை எனும் அணிகலனை அணிந்து கெள்ள வேண்டும் என்பதை மறத்தலாகாது.

## ஏனைய உயிரினங்கள், பொருட்கள் தொடர்பான ஒழுக்கங்கள்

### உயிரினங்கள் மீது அன்பு செலுத்தலும் நலன் புரிதலும்

அல்லாஹுத்தஆலா இவ்வுலகில் மனித இனத்தை மட்டும் படைக்க வில்லை. மனித இனத்துடன் சேர்த்து விலங்கினங்கள், தாவரங்கள், சடப்பொருட்கள் என பல்வகைப் படைப்புக்களைச் சிருஷ்டித்துள்ளான். இவ்வாறான பொருட்கள் தொடர்பாக மனிதன் எத்தகைய நடைமுறைகளை ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் அல்லாஹுத்தஆலா நமக்குப் போதித்துள்ளான்.

மனிதனுக்கு இவ்வுலகிலுள்ள சகல பொருட்களும் வசப்படுத்தி - கட்டுப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**“அல்லாஹுத்தஆலா வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ள வற்றையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்ததுடன், அவனது அருட்கொடைகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உங்கள் மீது சொரிந்துள்ளதை நீங்கள் பார்க்க வேண்டாமா?”** (31 : 20)

இவ்வாறு அல்லாஹ்வினால் உலகிலுள்ள ஏனைய சகல பொருட்களும் மனிதனுக்குக் கட்டுப்படுத்திக் கொடுக்கப்பட்டதனாலேயே மனிதனால் அவற்றை நிர்வகிக்க முடிகின்றது. அவற்றை அடக்கியாள முடிகின்றது. மேலும் அவற்றிலிருந்து பயன்பெறவும் முடிகின்றது.

இவ்வுலகிலுள்ள சகல பொருட்களும் மனிதனின் தேவைகளுக்காகவே படைக்கப்பட்டிருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தும் போது சில ஒழுக்க வரம்புகளைப் பேணிக் கொள்ள வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது. குறிப்பாக விலங்கினங்கள், தாவரங்கள் முதலியவற்றை மனித தேவைக்காக உபயோகிக்கும் போது இவற்றைக் கவனிப்பது நம்மீதான கடமையாகும்.

**“பூமியிலுள்ள எந்த உயிரினமாக இருந்தாலும் தமது இரு சிறகு களாலும் பறக்கும் எந்தப் பறவைகளாக இருந்தாலும் அவை உங்களைப் போன்ற சமுதாயங்களேயன்றி வேறில்லை.”** (6 : 38)

இந்தக் குர்ஆன் வசனம், பிற உயிரினங்கள் பற்றி நாம் நினைவில் கொள்ள வேண்டிய அடிப்படை உண்மை ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. அதாவது, அவை அல்லாஹ்வினால் நம்மைப் போன்றே சமுதாயங்களாக வாழவைக்கப் பட்டுள்ளன. எனவே, அச்சமுதாயத்தின் மீது அதிகாரம் செலுத்தும் மனிதன், தான் நினைத்தபடியெல்லாம் நடந்து கொள்ளாமல் அல்லாஹ்வின் வழி காட்டலின்படியே அவற்றைக் கையாள வேண்டும்.

மனிதனின் உணவுத்தேவைக்காக சில விலங்கினங்களையும்; பறவையினங் களையும் உணவாகக்கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் அவற்றை உணவுத்தேவைக்காகக் கொல்லும் போதுகூட அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கப்பண்பாடுகளையும் இஸ்லாம் வலியுறுத்திச் சொல்லியுள்ளது. அவற்றை கவனிக்கும் ஒருவர் இஸ்லாம் பிராணிகள் மீது கொண்டுள்ள கருணையை விளங்கிக் கொள்ள முடியும்.

1. பிராணிகளை அறுப்பதற்காகக் கூரான ஆயுதத்தை (கத்தி) மாத்திரமே பயன்படுத்த வேண்டும். மழுங்கிய ஆயுதத்தினால் அறுப்பதன் மூலம் சுலபமாக அறுபடாது. இதனால் குறித்த பிராணி நீண்ட நேரம் வேதனையை அனுபவிக்க வழியேற்பட்டு விடும். கூரான ஆயுதத்தைப் பயன்படுத்துவதனால் மிக விரைவாக அறுபடுவதுடன், விரைவாக உயிர்பிரியவும் வேதனை குறையவும் வழியேற்படும்.

   **நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: அல்லாஹுத்தஆலா எல்லா விடயங்களிலுமே அவை நேர்த்தியாக நடைபெற வேண்டும் என விதியாக்கியுள்ளான். எனவே நீங்கள் பிராணியை அறுத்தால் சிறப்பான முறையில் அறுங்கள். உங்களில் ஒருவர் பிராணியை**

**அறுக்கும் கத்தியைத் தீட்டிக் கொள்ளட்டும். அறுக்கப்பட்ட பிராணிகளின் உயிர் முற்றாகப் பிரியும் வரை விட்டு விடட்டும்.** (முஸ்லிம்)

2. அறுக்கும் பிராணியை இறுக்கிக் கட்டிவைப்பதோ, அடித்துத் துன்புறுத்துவதோ, சித்திரவதை செய்வதோ கூடாது.

3. ஒரு பிராணிக்கு முன்னால் மற்றப்பிராணியை அறுப்பதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

4. உயிர் பிரிய முன்னர் தோலை உரிப்பதோ, உடம்பின் ஒரு பகுதியை வெட்டுவதோ, கழுத்தை முறிப்பதோ தடுக்கப்பட்ட தாகும்.

இவ்வாறு பல ஒழுங்கு விதிகளை உணவுக்காக அறுக்கப்படும் விலங்கினங்கள், பறவைகள் தொடர்பாகக் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் கட்டளையிட்டிருப்பது அவற்றின் மீது மனிதன் கருணையுணர்வு உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

இது தவிர, பொதுவாக உயிர்ப்பிராணிகள் மீது இஸ்லாம் எந்தளவுக்கு அன்புக்காட்டச் சொல்லியுள்ளது என்பதை பல்வேறு ஹதீஸ்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“ஒரு பெண் ஒரு பூனையை அது சாகும் வரை தடுத்து வைத்திருந் தமைக்காக நரகம் நுழைந்தாள். அப்பூனைக்கு அவள் உணவு கொடுக்க வுமில்லை. அது தாமாகச் சென்று பூமியிலுள்ள பூச்சி புழுக்களை உண்பதற்கு அதனை விட்டு விடவுமில்லை. இதற்காகவே அவள் தண்டனை பெற்றாள்.** (புகாரி, முஸ்லிம்)

ஒரு மிருகத்தை வேதனைப்படுத்திக் கொன்றதற்காக ஒரு பெண் பெற்ற தண்டனையைச் சொல்லிக்காட்டிய நபி (ஸல்) அவர்கள், தண்டனை பெறக்கூடிய நிலையிலிருந்த ஒரு பாவியான பெண், தாகத்துடனிருந்த ஒரு நாய்க்குத் தண்ணீர் புகட்டியமைக்காக அவளது பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவர்க்கத்திற்குத் தகைமை பெற்றவளாக மாறியதையும் கூறிக்காட்டினார்கள்.

**“கட்டுக்கடங்காத பாவியான ஒரு பெண் தாகத்தினால் தவித்துக் கொண்டிருந்த நாயொன்றைக் கண்டாள். அருகிலே கிணறு இருந்தது. தாகத்தினால் அது கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்தது. உடனே**

**அவள் கிணற்றிற்குள் தன் சீலையை கிழித்துக் கட்டிய பாதணியை விட்டு நீரை மொண்டு எடுத்து, தாகத்தினால் தவித்த நாயின் வாய்க்குள் நீரைப் பிழிந்து அதன் தாகம் போக்கினாள். அதனால் பாவங்கள் மன்னிக்கப்பட்டாள்.** (புஹாரி முஸ்லிம்)

பறவைகள், விலங்கினங்கள் ஆகிய உயிரினங்களை துன்பத்திற்குள்ளாக்கக் கூடிய பல்வேறு நடவடிக்கைகளையும் நபி (ஸல்) அவர்கள் தடைசெய்திருக் கின்றார்கள்.

தாயை விட்டு அதன் குஞ்சுகளை அல்லது குட்டிகளைப் பிரித்து விடுவது இவ்வாறு நபியவர்கள் தடைசெய்த விடயங்களுள் ஒன்றாகும். அத்தோடு நெருப்பின் மூலம் எந்த உயிரினத்தையேனும் எரித்துத் தண்டிப்பதையும் நபியவர்கள் தடைசெய்துள்ளார்கள்.

**இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தோம். அச்சமயம் ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் தனது தேவையொன்றை நிறைவு செய்வதற்காகச் சென்றுவிட்டார்கள். அவ்வேளை இரண்டு குஞ்சுகளுடனிருந்த சிவந்த பறவை ஒன்றைக் கண்டோம். அதன் இரு குஞ்சுகளையும் எடுத்து விட்டோம். தாய்ப்பறவை திரும்பி வந்து அங்கும் இங்கும் பறந்து தன் குஞ்சுகளைக் காணாது பதறத் தொடங்கியது. அப்போது நபியவர்கள் திரும்பி வந்து இப்பறவையை அதன் குஞ்சுகள் மூலம் துன்புறுத்தியவர் யார்? என வினவிவிட்டு அதன் குஞ்சுகளை அதனிடம் ஒப்படைத்துவிடுங்கள் என்று கூறினார்கள்.**

**மேலும் நபியவர்கள் நெருப்பினால் எரிக்கப்பட்ட எறும்புப் புற்று ஒன்றைக் கண்டார்கள். "யார் இதனை எரித்தது?" என வினவினார்கள். "நாங்கள் தான்" என்றோம். அதற்கு நபியவர்கள், நெருப்பின் இரட்சகனாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் நெருப்பால் தண்டிக்க முடியாது என்றார்கள்.** (அபூதாவுத்)

ஓர் உயிரினத்தை இலக்குப் பொருளாகக் கொண்டு அதனை நோக்கி அம்பெறிந்து பழகுவதையோ அல்லது துப்பாக்கியால் சுட்டுப்பழகுவதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

**"இறைதூதர் (ஸல்) அவர்கள் உயிருள்ள ஒரு பிராணியை இலக்குப் பொருளாகக் கொள்பவனைச் சபித்தார்கள்."** (புகாரி முஸ்லிம்)

பிற உயிரினங்களைத் துன்பத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகளில், விலங்குகளுக்கு நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக் கோல்களால் குறியிடுவதையும், பறவைகள் பறக்காமல் சிறகுகளில் ஒரு பகுதியை வெட்டி விடுவதையும் குறிப்பிடலாம். இத்தகைய கருமங்களையும் நபி (ஸல்) அவர்கள் முற்றாகத் தடைசெய்துள்ளார்கள்.

> **“நபி (ஸல்) அவர்களை ஒரு கழுதை கடந்து சென்று கொண்டிருந்தது. அதன் முகத்தில் சூட்டுக் கோலினால் குறியிட்ட தழும்புகள் இருந்தன. அதனைக் கண்ணுற்ற நபியவர்கள், “இதற்குக் குறியிட்டவரை அல்லாஹ் சபிக்கின்றான்” என்றார்கள்.** (முஸ்லிம்)

நமது வேலைகளை இலகுபடுத்துவதற்காக நமக்குப் பணிவிடை புரியும் வண்ணம் அல்லாஹுத்தஆலா சில விலங்குகளைக் கட்டுப் படுத்தித் தந்துள்ளான். ஆடு, மாடு, ஒட்டகம், கழுதை, குதிரை, யானை முதலியன இத்தகைய விலங்குகளாகும். இவற்றைப் பயன்படுத்தி நமது வேலைகளைச் செய்விக்கும் போது அவற்றின் சக்தியை மீறிய வகையில் வேலை வாங்குவதோ அல்லது அவற்றிற்கு போதியளவு உணவு, குடிநீர், ஓய்வு முதலியவற்றை வழங்காமல் இருப்பதோ மிகப்பெரும் குற்றமாகும் என்பதையும் ஹதீஸ்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### தாவரங்கள் மீதான பரிவு

ஏனைய உயிரினங்கள் என்ற பகுதிக்குள் தாவர இனங்களும் உள்ளடங்கு கின்றன.

மனிதனின் சுற்றுச் சூழலில் பௌதீக ரீதியான சமநிலையைப் பேணுவதற்கு இன்று மரங்களை நடுமாறு பரவலாக பிரசாரம் செய்யப்பட்டு செயற்திட்டங்களும் அதற்காக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இஸ்லாம் பயன்தரும் மரங்களை நடுமாறும் அதற்கு அல்லாஹ் விடத்தில் பெரும் நற்கூலி உண்டு என்றும் பலநூற்றுாண்டுகளுக்கு முன்னரே போதனை செய்துள்ளது. அது மட்டுமன்றி ; பயன் தரும் பழ மரங்களையோ அல்லது நிழல் தரும் தாவரங்களையோ அவசியமின்றி வீணாகத் வெட்டுவதனைப் பாவமாகவும் கருதுகின்றது.

> **“உங்களில் ஒருவரின் கையில் ஒரு மரச்செடியொன்று இருக்கும் நிலையில் மறுமை வந்துவிட்டது என்றிருந்தாலும் அவர் அச்செடியை நாட்டிவிடட்டும்”** (அஹ்மத்)

அபூபகர் (ரழி) அவர்கள் கலீபாவாகப் பதவியேற்றதன் பின்பு உஸாமா (ரழி) அவர்கள் தலைமையில் ஷாம் பிரதேசத்துக்கு படையணியை அனுப்பும்போது செய்த உபதேசத்தில், “பேரீச்சை மரங்களைத் துவம்சம்

செய்யாதீர்கள்; அவற்றை எரிக்காதீர்கள்; மேலும் பழம் தரும் மரங்களை வெட்டிவிடாதீர்கள்” என்ற வசனங்களும் அடங்கியிருந்தன என்பதை வரலாற்றைப் படிக்கும் போது எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

எனவே, நாம் பிற உயிர்கள் மீது இஸ்லாம் கூறியுள்ளபடி அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்ளக்கூடிய சிறந்த நற்பண்புள்ள வர்களாக வாழ்வோம்.

## பௌதிக சூழலைப் பாதுகாத்தல்

நீர், நிலம், ஆகாயம் மற்றும் இவற்றிலுள்ள பொருட்கள் முதலிய எம்மைச் சூழவுள்ள பொருட்கள் “பௌதிக சூழல்” எனப்படுகின்றது. இஸ்லாம் ஒரு சம்பூரண வாழ்க்கைத்திட்டம் என்ற வகையில் “இபாதத்” முதலிய விடயங்களில் அது எந்தளவுக்குக் கவனம் செலுத்துகின்றதோ, அதேயளவு கவனத்தை சூழல் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் செலுத்துகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

இஸ்லாமிய ஷரீஅத் ஐந்து மிக முக்கியமான அத்தியாவசிய அம்சங்களின் பால் கவனம் செலுத்துகின்றது. இவை “இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படைகள்” என இமாம்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. மார்க்கத்தைப் பேணுதலும் பாதுகாத்தலும்.
2. உயிரைப் பேணுதலும் பாதுகாத்தலும்.
3. பரம்பரையைப் பேணுதலும் பாதுகாத்தலும்.
4. செல்வத்தைப் பேணுதலும் பாதுகாத்தலும்.
5. அறிவைப் பேணுதலும் பாதுகாத்தலும்.

நம்மைச் சூழவுள்ள பௌதிகச் சூழல் மாசுபடுவதன் மூலம் மேலுள்ள ஷரீஆவின் பிரதானமான ஐந்து நோக்கங்களுமே பாதிப்புக்குள்ளாகின்றன. எனவேதான், “இஸ்லாம் பௌதிகச் சூழலைப் பேணிப்பாதுகாப்பதில் மிகவும் அக்கறை செலுத்துகின்றது” என அறிஞர் கலாநிதி யூசுப் அல் கர்ழாவி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இது சம்பந்தமாகக் கூறுகின்ற அல்குர்ஆன் வசனங்கள் பல உள்ளன. சில அல்குர்ஆன் வசனங்கள் பௌதிக சூழலைப் பாதுகாப்பது சம்பந்தமாக வெளிப்படையாகவும், சில வசனங்கள் மறைமுகமாகவும் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாகக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிடலாம்.

**“பூமியில் சீர்திருத்தத்தின் பின்பு சீர்கேட்டை உண்டாக்காதீர்கள்”** (7 : 56)

பூமியில் ஏற்படும் சீர்குலைவுகளில் பௌதிகசூழலில் ஏற்படுத்தப்படும் சீர்குலைவும் மிகவும் பாரதூரமான ஒன்றாகும்.

இது சம்பந்தமாகக் குறிப்பிடக் கூடிய மற்றொரு குர்ஆன் வசனம் பின்வருமாறு:

> **“அவன் (உங்களிலிருந்து) விலகினாலோ, பூமியில் விஷமம் செய்து (உங்கள்) விவசாயத்தையும் கால்நடைகளையும் அழித்துவிட முயற்சி செய்கின்றான். விஷமத்தை அல்லாஹ் விரும்புவதில்லை.”** (2 : 205)

பௌதிக சூழலைப் பாதிக்கக் கூடிய செயற்பாடுகளான பயிர் நிலங்களை அழிப்பது, காடுகளைக் கண்டபடி அழிப்பது, நீர் நிலைகளை மாசுப்படுத்துவது, வளிமண்டலத்தை மாசுப்படுத்துவது முதலிய செயற்பாடுகள் அனைத்தும் இறுதியாக மனிதனின் ஆரோக்கிய வாழ்வைச் சீர்குலைப்பதாக - பரம்பரையைப் பாதிப்பதாக அமைகின்றன. இதனாலேயே, மேலுள்ள குர்ஆன் வசனத்தில் அல்லாஹுத்தஆலா இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கடுமையான தொனியில் சுருக்கமானதும் ஆழமானதுமான சொற்றொடர் மூலம் கண்டிக்கின்றான்.

எம்மைச் சூழவுள்ள பௌதிக வளத்தை - அதன் சமநிலையை மிகவும் பாரதூரமாகப் பாதிக்கக் கூடிய ஒரு நடவடிக்கையே பயன்தரும் மரத்தை அவசியமின்றி அநியாயமாகத் தறிப்பதாகும். இதனைக் கண்டித்து நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்னார்கள் :

> **“வழிப்போக்கர்களும் மிருகங்களும் நிழல் பெறக்கூடிய வகையில் வெட்டவெளியில் நிற்கக் கூடிய நிழல் தரும் மரம் ஒன்றை யார் அநியாயமாக வெட்டி விடுகிறாரோ அவரது தலையைப் பிடித்து அல்லாஹ் நரகில் தள்ளுவான்.”** (அபூதாவுத்)

இந்த அடிப்படையில் நமது பௌதிகச் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.:

### 1. மரம் நடுதல்

மரம் நடுவதை நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களின் வாயிலாக ஊக்குவித்திருக்கின்றார்கள். அதனை அவர்கள் வெறும் உலகியல் நடவடிக்கையாக மட்டும் பார்க்கவில்லை. அதனை நன்மை தரும் தர்மமாக ஆன்மீகத்துடன் தொடர்புபடுத்திக் காட்டியுள்ளார்கள்.

> **“எந்தவொரு முஸ்லிமாவது ஒரு மரத்தை நட்டால்; அல்லது ஒரு பயிரை விளைவித்தால் அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது பறவையோ அல்லது விலங்கோ உண்ணும் காலமெல்லாம் அவருக்கு அது தர்மமாக அமையும்.”** (புகாரி, முஸ்லிம்)

**"உங்களில் ஒருவரின் கையில் மரச் செடியொன்று இருக்கும் நிலையில் மறுமை வந்து விட்டது என்றிருந்தாலும் அவர் அச்செடியை நாட்டிவிடட்டும்"** (அஹ்மத்) **என்றும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.**

எவ்வளவு ஆழமான கருத்துக்களை இந்த ஹதீஸ் உள்ளடக்கி யுள்ளது என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

உலகம் அழியும் நிலையிலும் தான் முன்னெடுத்த அந்த நல்ல பணியை - அது உலகியல் சார்ந்த ஒரு பணியாக இருந்த போதும் அதனைவிட்டுவிட்டு பள்ளிவாசலை நோக்கி ஓடிச் செல்லுமாறு நபியவர்கள் இங்கே பணிக்கவில்லை. மாறாக பௌதிகச்சூழல் பாதுகாக்கப்படுவதற்கு பெரும் பங்காற்றக்கூடிய அந்த மரச்செடியை, விளைவை எதிர்பார்க்காது நாட்டி விடுமாறு வழிகாட்டினார்கள்.

### 2. பூமியை வளப்படுத்தும் பணி

**"இமாரத்"** என இப்பணி அழைக்கப்படுகின்றது. ஒரு மனிதன் இவ்வுலகில் மேற்கொள்ள வேண்டிய மூன்று முக்கிய பணிகளுள் இதுவும் ஒன்றாகும். ஏனைய இரண்டும் **இபாதத், கிலாபத்** என்பவையாகும்.

பூமியை பரிபாலித்து நிர்வகித்து அதனை வளப்படுத்தும் இப்பணி பௌதிக சூழலைப் பாதுகாப்பதுடன் தொடர்பானது. இப்பூமியை அதில் காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தி மனிதன் சிறப்பான முறையில் வாழ்வதற்குப் பொருத்தமானதாக மாற்றுவதற்கும் அதனைத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதை இஸ்லாம் ஒவ்வொரு மனிதன் மீதும் கடமையாக்கியுள்ளது.

**"அவனே உங்களைப் பூமியிலிருந்து தோற்றுவித்து அதனைப் பரிபாலிக்குமாறும் கேட்டுக்கொண்டான்."** (11 : 61)

பௌதிக சூழலைப் பேணிப் பாதுகாப்பதன் மூலமே பூமியை வளப்படுத்தும் இப்பணி இடம்பெறும் என்பதைக் கவனத்திற் கொண்டு நாம் செயற்படல் வேண்டும்.

### 3. சுத்தமும் ஒழுங்கும் பேணல்

பௌதிக சூழலைப் பாதுகாப்பதில் சுத்தத்தையும் ஒழுங்கையும் பேணுதல் முக்கியத்துவம் பெறுகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்த வரை சுத்தம் ஈமானுடனும் இபாதத்துடனும் தொடர்புடையது. நபியவர்கள் சொன்னார்கள்.

**"சுத்தம் ஈமானில் பாதியாகும்."** (புகாரி, முஸ்லிம்)

தொழுகையின் முக்கிய ஷர்த்துக்களில் ஒன்று தொழுபவரின் உடல், தொழும் இடம், சூழல் என்பன சுத்தமாக இருத்தலாகும். இதற்காகவே, இஸ்லாமிய ஷரீஅத் தொழவேண்டியவர் சாதாரண நிலையில் இருந்தால், வுழுச் செய்யுமாறும்; அவர் பெருந்தொடக்கு உள்ளவராயின் குளிக்குமாறும் ஒரு முஸ்லிமுக்குப் பணிக்கின்றது.

இவ்வாறே, சூழலை தூய்மையானதாகவும் ஒழுங்கானதாகவும் பேணுவது ஒரு முஸ்லிமின் கடமை என இஸ்லாத்தின் போதனைகள் தெரிவிக்கின்றன. இதற்குமாறாக சூழலின் தூய்மையையும் ஒழுங்கையும் குலைக்கும் வண்ணம் எச்செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

**“சாபத்தை ஏற்படுத்தக் கூடிய இரண்டு விடயங்களைப் பயந்து கொள்ளுங்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, “அவ்விரண்டு விடயங்களும் யாவை?” என ஸஹாபாக்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள், “மனிதர்களின் பாதைகளிலோ அல்லது அவர்கள் நிழல்பெறும் இடங்களிலோ மலசலம் கழிப்பது என்றார்கள்”.** (முஸ்லிம்)

எமது பௌதிகச் சூழலின் முக்கியமான பகுதி நீர் நிலைகளாகும். அவற்றை அசிங்கப்படுத்துவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

**“தேங்கி நிற்கும் நீர் நிலையில் சிறுநீர் கழிப்பதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.”** (முஸ்லிம்)

### 4. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

மனித இனத்தின் ஆரோக்கியத்தைப் பேணுவதில் இஸ்லாம் மிகவும் கூடுதலான அக்கறை செலுத்துகின்றது. இதனாலேயே, அல்லாஹ்வினால் எமக்காக இவ்வுலகில் ஏற்படுத்தப்பட்டுள்ள இயற்கை வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையோ அல்லது அவற்றின் சமநிலை பாதிப்படையும் வண்ணம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதையோ இஸ்லாம் கடுமையான குற்றங்களாகக் கணிக்கின்றது.

நீர், காற்று மற்றும் கனியவளங்கள் முதலிய சூழலில் காணப்படும் இயற்கை வளங்களை வீணாக்குவதும் மாசுபடுத்துவதும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினை களையும் சூழலியல் பிரச்சினைகளையும் உருவாக்கி, மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. இதனால் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு மக்களை அழிவுக்குள்ளாக்கு கின்றன. மக்கள் இதன் மூலம் பல்வேறு துன்பங்களுக்கும் ஆளாகின்றனர். இவ்வாறு, மக்களை அநியாயமாகத் துன்பங்களுக்கு ஆளாக்குவது மிகப் பெரும் பாவமாகும் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**"மு.ஃ.மினான ஆண்களையும் மு.ஃ.மினான பெண்களையும் அவர்கள் செய்யாதவற்றுக்காக துன்பத்துக்குள்ளாக்குவோர் தெளிவான பாவத்தையும் பழியையும் தம்மீது சுமந்து கொண்டனர்.** (33 : 58)

மனிதர்கள் தம்மைத்தாமே தமது தீய செயற்பாடுகள் மூலம் அழிவுக்குள்ளாக்கிக் கொள்வதனையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

**"உங்களை நீங்களே அழிவுக்குள்ளாக்கிக் கொள்ளாதீர்கள்."** (2 : 195)

இயற்கை வளங்களை மாசுபடுத்துவதை நபியவர்கள் தடுத்தமைக்கு பல ஹதீஸ்கள் ஆதாரங்களாக உள்ளன. உதாரணமாக பின்வரும் ஹதீஸினைக் குறிப்பிட முடியும்.

**"தேங்கி நிற்கும் நீர் நிலையில் சிறுநீர் கழிப்பதை நபியவர்கள் தடுத்தார்கள்"** (முஸ்லிம்)

எவ்வழியிலும் நீர் நிலைகளை மாசுபடுத்தக்கூடாது என்பதனையே இந்த ஹதீஸ் வலியுறுத்துகிறது.

தேங்கி நிற்கக் கூடிய நீர்நிலை, சிறுநீர் கழித்தல் போன்ற சிறிய அளவிலான கழிவகற்றல் நடவடிக்கையால் கூட மாசுபட்டுவிடும் என்பதனால்தான் நபியவர்கள் அப்படி சிறுநீர் கழிப்பதை உதாரணமாகக் குறிப்பிட்டுக் கூறினார்கள்.

தற்காலத்தில் பெரும் தொழிற்சாலைகளின் கழிவுகள் பெரும் நீர் நிலைகளை மட்டுமன்றி, வளிமண்டலத்தையும் மாசுபடுத்தி விடுகின்றன. இதனால் அவற்றில் வாழும் உயிர்ப்பிராணிகள் அழிவுக்குள்ளாகுவது மட்டுமன்றி மனிதனும் பாதிக்கப்படுகின்றான். சூழல் சமநிலைகளும் இதனால் குழம்புகின்றன. எனவே மேலுள்ள ஹதீஸின் அடிப்படையில் இவை யாவும் இஸ்லாமிய ஷரீஅத்தில் முற்றாகத் தடைசெய்யப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே, கைத்தொழிற்சாலைகளை நிறுவுபவர்களும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய கழிவுகளை வெளியேற்றும் தொழில்களைச் செய்பவர்களும் அவற்றை எவ்வாறு பாதகமற்ற வழிகளில் மேற்கொள்ள முடியும் என்பதற்கான வழிகாட்டல்களை உரிய தரப்புக்களிடம் பெற்று அதற்கேற்பச் செயற்படுவது கடமை என்பதை உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும். இது ஒரு சாதாரண விடயமல்ல. இஸ்லாம் வலியுறுத்தும் முக்கியமான சமூகக் கடமை என்பதை உணர்ந்து செயற்பட முன்வருவோம். இதை மீறும் போது பாவங்கள் செய்தவர்களின் பட்டியலில் நாம் சேர்க்கப்பட்டு இம்மை மறுமைத் தண்டனைக்காளாக்கப்படுவோம் என்பதை உணர்ந்து கொள்வோம்.

## நாட்டு நலன் பேணல்

தான் பிறந்து வளர்ந்த தாய் நாட்டின் நலன் பேணுவது ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய சிறந்த பண்புகளுள் ஒன்றாகும். தனது சொந்தத் தாய், தந்தையர், தனது உற்றார் உறவினர், முதலானவர்களை நேசிப்பதைப் போலவே தனது தாய் மண்ணையும் நேசிப்பதும், அதன் மீது பற்றுக் கொள்வதும், ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய மனிதப்பண்பு ஆகும்.

நபி (ஸல்) அவர்கள் சிறுவயது முதலே தான் பிறந்து வளர்ந்த மக்காவை நேசித்தார்கள். இளம் பராயத்திலேயே அங்கு நடைபெற்ற சமூகநலன் பேணும் நடவடிக்கைகளில் பங்கு கொண்டார்கள்.

**"ஹில்புல் புழூல்"** எனப்படும் சமூகநலன் பேணும் ஒப்பந்தத்தில் குறைஷித் தலைவர்களுடன் நபியவர்கள் பங்கு கொண்டமை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதை நோக்காகக் கொண்ட இவ்வொப்பந்தம் நல்ல விடயங்களில் நபியவர்கள் நபித்துவத்திற்கு முன்னர் கூட தன் நாட்டு மக்களுடன் இணைந்து பணியாற்றியமையை நமக்குப் பாடமாக எடுத்துச் சொல்கின்றது.

நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும் போது தமது தாய் மண்ணைப் பிரிந்தார்கள். அதனால் அவர்கள் மிகுந்த கவலை கொண்டார்கள். ஸஹாபாக்களின் நிலையும் இவ்வாறே அமைந்திருந்தது. இதோ ! பிலால் ரழி அவர்களின் கவிதையைக் கேளுங்கள்:

> **"இத்கிர், ஜலீல் எனும் புற்கள் என்னைச் சூழ்ந்திருக்க அது போன்ற பள்ளத்தாக்கில் ஓர் இராப்பொழுதையேனும் நான் கழிப்பேனா? மஜின்னா எனும் சுனையின் நீரை நான் அருந்துவேனா? ஷாமா தபீல் எனும் இரு மலைகள் எனக்குத் தென்படுமா?"** (ஆதாரம் : ரஹீக் அல்மக்தூம்)

இது மக்காவை நினைத்து பிலால் (ரழி) அவர்கள் பாடிய கவிதை!

நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டும் தம்மை வெளியேற்றும் சூழ்நிலையை ஏற்படுத்தியவர்களை நினைத்துப் பின்வருமாறு பிரார்த்தனை செய்தார்கள்.

> **"யா அல்லாஹ்! ஷைபா, உத்பா, உமையா ஆகியோர் எங்களை எங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றி இந்த நோய்ப் பிரதேசத்திற்கு விரட்டியது போல் அவர்களை நீ உன் கருணையிலிருந்து அப்புறப்படுத்தி விடுவாயாக".** (புகாரி)

இவை நபிகளார் (ஸல்) அவர்களும் தோழர்களும் பிறந்த மண்ணை நேசித்தார்கள் என்பதற்கான சில ஆதாரங்களாகும். இம்மரபைப் பின்பற்றி ஒவ்வொரு முஸ்லிமும் தான் பிறந்து வளர்ந்த தாய் நாட்டை நேசிப்பது அவசியமாகும்.

**அனர்த்த முகாமைத்துவம்**

அனர்த்தம் என்று இங்கு குறிப்பிடப்படுவது பேரழிவுகளையாகும். விபத்துக்கள், யுத்தம், பூமியதிர்வு, சூறாவளி, வெள்ளப்பெருக்கு தீப்பிடிப்பு முதலிய நிகழ்வுகள் பேரழிவு ஏற்படுத்துவதற்கான காரணிகளாய் அமைகின்றன.

அனர்த்த முகாமைத்துவம் என்ற சொற்றொடர் இவ்வாறான பேரழிவுகள் ஏற்படுத்துவதற்கு முன்னரும், அவை ஏற்பட்ட பின்னரும் நம்மால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறிக்கின்றன.

அனர்த்தங்களைப் பொதுவாக இருவகைகளாகப் பிரிக்கலாம்:

1. நமது முயற்சியால் பெரும்பாலும் தவிர்ந்து கொள்ள முடியுமான அனர்த்தங்கள்:
   உ-ம் யுத்தங்கள், விபத்துக்கள்

2. நமது சக்திக்கும் முயற்சிக்கும் அப்பாற்பட்ட பேரழிவுகள்.
   உ-ம் நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி

பொதுவாக இவ்வாறான அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதே அனர்த்த முகாமைத்துவத்தின் நோக்கமாக உள்ளது. இந்த வகையில் அனர்த்த முகாமைத்துவம் என்ற பகுதியில் பின்வரும் மூன்று முக்கிய நடவடிக்கைகள் உள்ளடங்குகின்றன:

1. அனர்த்தங்கள் நடைபெறு முன்னர் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

2. அனர்த்தங்கள் நிகழும்போது அவற்றின் பாதிப்பைக் குறைக்கும் வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

3. அனர்த்தங்கள் நடைபெற்று முடிந்த பின்னர் அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களை, பாதிக்கப்பட்ட பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்பி இயல்பு வாழ்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இம்மூன்று துறைகளிலும் ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டலை இஸ்லாம் சிறப்பாக முன்வைத்துள்ளது.

இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது "பர்ளு கிபாயா" எனப்படும் சமூகக் கடமையாகும்.

பஞ்சம் அல்லது கடுமையான வரட்சி என்பது ஓர் அனர்த்தமாகும். இத்தகைய ஓர் அனர்த்தம் எகிப்து நாட்டுக்கு ஏற்படவிருந்த சமயம் நபி யூசுப் (அலை) அவர்களின் மதிநுட்பம் மிக்க முன்னெச்சரிக்கை வழிகாட்டல், திட்டமிடல் மூலம் அந்த நாடு அதிலிருந்து தப்பித்துக் கொண்டதை அல்குர்ஆன் "சூறா யூசுப்" என்ற அத்தியாயத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

ஒரு முறை பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மூலம் படிப்பினை பெற்றுக் கொள்வது ஒரு மு.்.மினின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்றாக அமைதல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் போது, **"ஒரு மு.்.மின் பாம்புப் புற்றின்மீது இருமுறை கால்வைக்கமாட்டான் என்றார்கள்.** (புகாரி, முஸ்லிம்)

எனவே, ஒரு அனர்த்தத்தின் மூலம் பேரழிவு ஏற்பட்டு விட்டால் அடுத்த தடவை அவ் அழிவிலிருந்து தப்புவதற்கு அல்லது பாதிப்புக்களைக் குறைப்பதற்கு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளல் அவசியமாகும். அனர்த்த முகாமைத்துவம் என்பதில் இது முக்கியமான ஒரு பகுதியாகும்.

சூறாவளி, வெள்ளம் போன்ற அனர்த்தங்களை முற்கூட்டியே அறிந்து கொள்வதற்கு வானிலை எதிர்வுகூறல்கள் பெரும்பாலும் பயன்தருகின்றன. இது போன்றே சுனாமி அலைகள் கடலுக்குள் தோன்றிவிட்டதன் பின்பு, அவை கரைகளை அடைந்து உயிர் அழிவை ஏற்படுத்துவதற்கு முன்னால் அலார எச்சரிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு, விஞ்ஞான ஆய்வு முறைகள் அனர்த்தங்களின் பாதிப்புக்களைக் குறைப்பதில் பெரும்பங்காற்றுகின்றன. இவை நவீன முறைகளாகும். பாரம்பரியமான சில அவதானிப்புக்களும் உள்ளன. அதாவது, சில விலங்கினங்கள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றின் நடவடிக்கைகளை அவதானித்து, சில அனர்த்தங்களை முற்கூட்டியே அனுமானித்துக் கொள்ள இயலுமாக இருப்பதாகும். அல்லாஹுத்தஆலா அவற்றுக்கு வழங்கியுள்ள சில விசேட ஆற்றல்களால் இது அவற்றுக்குச் சிலவேளை சாத்தியமாகலாம்.

நவீன விஞ்ஞான முறையாக இருந்தாலும் சரி, பாரம்பரிய முறைகளாக இருந்தாலும் சரி, பாரிய ஓர் அனர்த்தத்தின் மூலம் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்களைக் குறைப்பதில் அவற்றைப் பயன்படுத்துவது மிகப்பெரும் நன்மைகளை அல்லாஹ்விடத்தில் ஈட்டித்தரக்கூடிய நற்கருமங்களாக அமையும்.

**"யார் ஓர் ஆன்மாவை வாழச் செய்கிறாரோ அவர் மனிதர்கள் எல்லோரையும் வாழச் செய்தவரைப் போன்றவராவார்"** (5 : 32)

பாரிய ஓர் அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னால் பல்வேறு பிரச்சினைகள் அங்கு உருவாகும். மக்கள் குடியிருப்புக்களை இழந்திருப்பர். தமது சொத்து செல்வங்களை இழந்து நிர்க்கதி நிலைக்கு ஆளாகியிருப்பர். உற்றார், உறவினர்கள், தாய், தந்தையர்களை இழந்து அநாதைகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் மாறியிருப்பர். உண்பதற்கு உணவு, குடிப்பதற்குத் தண்ணீர் முதலியன கிடைக்காமலும் கஷ்டப்படுவர். இவற்றோடு, பல்வேறு உளவியல் பாதிப்புக்களையும் எதிர்கொண்டவர்களாக இருப்பர். இவ்வாறான நிலைமைகள் அனைத்தையும் சிறப்பான முறையில் கையாண்டு, அவற்றில் உடனடியாகத் தீர்க்கக் கூடியவற்றை உடனடியாகவும், படிப்படியாகத் தீர்வு காண வேண்டி யவைகளை படிப்படியாகவும் கையாண்டு, முகாமைத்துவம் செய்வது என்பது மிகப்பெரும் சமூக சேவையும் கடமையுமாகும்.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் தொழுகையும் நோன்பும் மற்றும் சில நேரடி வணக்கவழிபாடுகளும் மாத்திரமே நன்மை தரும் இபாதத்துக்கள் அல்ல. மாறாக, இஸ்லாம் அவற்றோடு பல்வேறு சமூகரீதியான கடமைகளையும் எம்மீது வலியுறுத்துகின்றது.

**"கிழக்குப்புறமாகவோ மேற்குப் பக்கமாகவோ நீங்கள் உங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்வது நற்செயலாக மாட்டாது. மாறாக நற்செயல் என்பது என்னவென்றால் யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும், மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் நம்புவதுடன் செல்வத்தின் மீது தனக்கிருக்கும் ஆசையையும் மீறி அதனை உறவினருக்கும் அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், இன்னும் வழிப்போக்கர்களுக்கும், இரந்து வருவோருக்கும், அடிமைகளை விடுவிக்கவும் செலவழிப்பதுடன், தொழுகையையும், நிலைநாட்டி, ஸகாத்தும் கொடுத்து, வாக்குறுதி கொடுத்தால் அவற்றை நிறை வேற்றியும், கஷ்டமான நிலைமைகளிலும், சந்தோஷமான நிலைமை களிலும், யுத்த சந்தர்ப்பங்களிலும் பொறுமையைக் கடைப்பிடித்தும் யார் நடந்து கொள்கின்றார்களோ அவர்களே உண்மையாளர்கள். மேலும் அவர்களே இறையச்சம் உடையவர்கள்.** (2 : 177)

மேலுள்ள குர்ஆன் வசனத்தில் அல்லாஹுத்தஆலா தொழுகை, ஸகாத் முதலிய அடிப்படை வணக்கவழிபாடுகளுடன் பல்வேறு சமூக ரீதியான கடமைகளையும் பட்டியலிட்டுக்காட்டி அவற்றையும் நிறைவேற்றி வருபவரே உண்மையான இறையச்சமுடையவர் என்பதை அழகுற விளக்கிக் காட்டுவதை நாம் கவனிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்களும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அமையும் நற்பணிகளை சுன்னத்தான வணக்க வழிபாடுகளைவிட மேலானவை யாகக் கருதினார்கள். இத்தகைய பணிகள் மூலமே சமூகத்தில் அநாதரவான நிலையிலுள்ளவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் முதலியோரின் வாழ்வு மறுமலர்ச்சி காணும் என்பதே இதற்கான காரணமாகும்.

நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸ் இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

**“விதவை, ஏழை போன்றோரின் நல்வாழ்வுக்காக உழைப்பவர் அல்லாஹ்வின் பாதையில் போராடுபவரைப் போன்றவராவார். மேலும், நின்று வணங்குபவர், விடாமல் தொடர்ந்தும் நோன்பு நோற்றுக் கொண்டிருப்ப வர் ஆகியவர்களைப் போன்றவருமாவார்.** (புஹாரி, முஸ்லிம்)

எனவே, பாரிய அனர்த்தம் ஏதாவது ஏற்படுவதற்கு முன்னர் அவற்றிலிருந்து அல்லாஹ்வின் உதவியினால் தப்பிக் கொள்வதற்காக அல்லது அதன் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அவ்வாறான அனர்த்தம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் அது நிகழ்ந்து கொண்டிருக்கும் போதும் அதன் பின்னரும் பாதிக்கப்பட்டவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் மீளச் செய்வதற்கான பணிகளைச் செய்வதும் எமது மார்க்கத்தின் பார்வையில் உயரிய சமூகப் பண்பும், கடமையுமாகும்.

# தர்மாச்சாரிய IDCE தீனியாத்

# அல்-அக்லாக் வஸ்ஸுலூக்
# (சமூகவியலும் ஒழுக்கவியலும்)